# சிவப்பிரகாசம் - உரைநடை

உமாபதிசிவாச்சாரியார்

வெளியீடு எண் 141.

# சிவப்பிரகாசம் - உரைநடை

## (விளக்கக் குறிப்புக்களுடன்)

திருவாவடுதுறை ஆதீனம்

வெளியீடு எண் 141

181.491
UNA

உ

AR

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சிவப்பிரகாசம் - உரைநடை

(விளக்கக் குறிப்புக்களுடன்)

ARCHIVES

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறைஆதீனத்து

இருபத்தொன்றாவது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.

201580
201580

திருவாவடுதுறை ஆதீனம்

1960

University of Jaffna
201580
Library

உரிமை பதிவு

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

சிவமயம்

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

" திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவடி வாற்றிடக் கண்டுகொண் டேனே."

திருச்சிற்றம்பலம்

சிவப்பிரகாசம் என்பது சிவபரம் பொருளினது பிரகாசத்தை உணர்த்தும் நூல் எனக் காரணக்குறியாய் நின்றது: அன்மொழித்தொகை. சிவம் தம்பாற் பிரகாசிக்க முயல்வோர் அனைவரும் ஒருதலையாகக் கற்று உணரவேண்டிய நூல் இதுவேயாகும். இந்தச் சிவப்பிரகாசம் சார்புநூலாம். முதல்நூல் சிவஞானபோதம் என்பது. இதனைத்தமிழிலே அருளிச்செய்தவர்கள் ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனார். அதன்வழியே அவர்களுடைய மாணவர் ஸ்ரீ அருணந்திதேவநாயனார் சிவஞானசித்தியாரை அருளிச்செய்தனர். அவ்விரு நூல்களையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து, சிவாகமங்களையும் ஆராய்ச்சிசெய்து, குருவருளும் திருவருளும் துணைசெய்ய, இந்த நூலை அருளிச் செய்தவர்கள் ஸ்ரீ உமாபதிதேவநாயனார்.

இந்நூலாசிரியராகிய ஸ்ரீ உமாபதி தேவநாயனார், முதல்நூல் வழிநூல்களின் பொருளைச் சிந்தித்துத்

பொருள்படும். ஆகவே, ஆராய்ச்சி அநுபூதி என்னு மிரண்டாலும் நமக்குக் கிடைத்ததாகிய முடிபு இது என்பதாம். எனவே, சித்தாந்தம் என்னும் சொல் ஒருவன் ஒருவிஷயத்தைச் சொல்லியவழி, அவ்விஷயத்தில் பலர்க்கு ஐயப்பாடு தோன்ற, அப்பலரும் தாம் தாம் கண்ட அளவிலே தமது கருத்தைக் கூற, அப்பொழுது முற்கூறியோன் இன்ன இன்ன காரணங்களால் அப்பலர் கூறும் கருத்துக்கள் அனைத்தும் பொருந்தா என மறுத்து, இன்ன இன்ன காரணங்களால் தான் கூறிய விஷயமே பொருத்தமானது என்று துணிந்த இடத்து வழங்கப்படுவது என்பது நன்கு புலனும்.

இனி, திராவிடமாபாடியகாரராகிய **ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் சிவஞானபோத மாபாடியத்திலே** அதிகரணம் என்னும் சொல்லுக்குப் பொருள் கூறுமிடத்து, 'தன்னல் கூறப்படும்பொருளும், அதன்கண் ஐயப்பாடும், அதற்குப் பிறர்கூறும் பக்கமும், அதனை மறுத்துக் கூறும் சித்தாந்தத்துணிபும், இயைபும் என்னும் இவற்றிற்கு நிலைக்களம் ஈண்டு அதிகரணம் எனப்படும்' என்று அருளிச்செய்தார்கள். இன்னும் இச்சொல்வழக்கு **உத்தரமீமாம்சையில்** கூறப்படும் அதிகரண சப்தத்திற்குப் பொருள் கூறுமிடத்து நீலகண்ட ஆசிரியர்,

> 'விஷயஸம்சய பூர்வபக்ஷ ஸித்தாந்த நிர்ணய
> ஸங்கதீநாம் ஆதாரத்வம் இஹாதி கரணத்வம்'

என்று கூறியருளினமை காண்க.

இந்தச் சிவப்பிரகாச நன்னூல் நூறு திருவிருத்தங்களால் ஆக்கப்பட்டது. இது பொது உண்மை என்னும் இரண்டு அதிகாரங்களுடையது. அவற்றுள்

பொது அதிகாரம் இரண்டு சூத்திரங்களையும் ஐம்பது திருவிருத்தங்களையும் உடையது. உண்மையதிகாரம் மூன்றும் சூத்திரம் முதல் பன்னிரண்டாம் சூத்திரம் முடியவுள்ள பத்துச்சூத்திரங்களையும், ஐம்பது திருவிருத்தங்களையும் உடையது. பொது அதிகாரம் பதி பசு பாசங்களின் வைத்துப் பதியிலக்கணத்தையுணர்த்தும். பரமசிவன் பிரபஞ்சத்தை நடத்தும் முறை, பதியுண்மை, சங்காரகர்த்தாவே படைப்பு முதலியவற்றிற்கும் கர்த்தா என்பது, இறைவன் ஐந்தொழில் நடத்துதல் ஆன்மாக்களிடத்து வைத்த அளவில்லாத பெருங்கருணையே என்பது, பசு இலக்கணம், மூலமலமாகிய ஆணவம் திரோதசத்தி சுத்த மாயை அசுத்தமாயைகள், கன்மம் முதலியவைகள், மாயை மலம் முதலிய உண்டு எனல், தத்துவத்தோற்றம், அவத்தை வகைகள் இருவினையொப்பு சத்தி நிபாதம் முதலியவைகளும் பொது அதிகாரத்திலேயே கூறப்பட்டன.

உண்மையதிகாரத்திலே ஆன்மா உண்மை, சத்து அசத்துப்பொருள்களின் இயல்பு, சத்தையும் அசத்தையும் ஆன்மா திருவருளே கண்ணகக்கொண்டு அறிதல், கேவல சகல சுத்தாவத்தைகள், கீழாலவத்தை மத்தியாலவத்தைகள், சிவன் அறிவித்தாலன்றி ஆன்மா அறியாமை, சீபாதத்தை அடைவித்தல், சிவஞானம், ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி ஆன்மலாபம் முதலியன, ஞானமாகிய அருளாற்பயன், முத்தான்மாவின் இயல்பு சிவனியல்புகள், ஆன்மசுத்தியாற்பயன், பசுபோதம், சிவபோதம், உண்மை நிட்டை உபாயநிட்டைகள், சாயுச்சியநிலை, பஞ்சாக்கரசெபம், உச்சரிக்கும் முறை, பயன், சீவன்முத்தர் நிலை, ஞானத்தில் ஞானம் யோகம் கிரியை சரியை முதலியன தெளிவாகச் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலுக்கு உரை வரைந்தார் பலர். அவருள் இவ்வாதீனத்துத் திராவிடமாபாடிய கர்த்தருடைய மாணவர் பன்னிருவருள் இலக்கணம் — ஸ்ரீ சிதம்பர நாதமுனிவர் செய்தவுரையே சிறந்ததென்பர் பெரியோர். இவர் உரை செய்யுமுன் மதுரைச் சிவப்பிரகாசரால் இதற்கு ஓர் விரிந்தவுரை செய்யப்பட்டது. அதன் முன்பு சிவப்பிரகாசருடைய ஆசிரியர் மதுரை ஞானப்பிரகாசத்தம்பிரான் ஓர் உரை செய்தார் எனவும், அவர் முன்னோரில் காவை — அம்பலவாணத் தம்பிரான் நூலின்கருத்தாகக் குறள்வெண்பா நூறு அருளினர் எனவும், அதற்கு முன்பும் இந்நூலுக்குப் பொழிப்புரை ஒன்று உண்டு எனவும் அவ்வுரையாசிரியரே தமதுரையிலே எழுதியுள்ளார். இலக்கணம் - ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர் தாம்செய்தவுரையிலே மதுரைச்சிவப்பிரகாசர்கொண்ட பாடங்களும், உரைகளும் சிற்சில இடங்களில் பொருந்தாமை காட்டி மறுத்தும், இலக்கணக் குறிப்புக்களை நன்கு காட்டித் தெளிவித்தும் இருக்கின்றார். இந்த நூலைக் கற்கும் சிவஞானச் செல்வர்களுக்குச் சிதம்பரநாத முனிவர் உரையே சுருக்கமாகவும் தெளிவாகவும் கற்பதற்குப் போதியதாம்.

இலக்கணம் — சிதம்பரநாதமுனிவருரை முன்னர் 1953ஆம் ஆண்டிலே ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமஹாசந்நிதானம் கட்டளையிட்டருளியபடி விரிந்த முகவுரையுடன் எளியேனால் பதிக்கப்பட்டது. அவ்வுரை விரைவிலே செலவாகிவிட்டது. ஆகலின் மற்றும் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் மீண்டும் அது வெளிவரச் சித்தமாயுள்ளது. மதுரைச் சிவப்பிரகாசருரையானது மிக விரிந்த நிலையில் உள்ளது. பற்பல தெளிவான மேற்கோளைக்காட்டி விளக்கிச்செல்வது. பாடஞ் சொல்லுவோருக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் இருப்பது.

ஆதலின், அதனையும் ஆராய்ந்து செப்பம் செய்து அச்சிடும் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தமிழுலகத்துக்கு அவ்வுரை சுமார் 800 பக்கங்களுக்குமேல் உள்ள புத்தகவடிவமாக வெளிவரும் என்பதையும் விநயமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

செந்தமிழ்நாடு செய்த தவப்பயனால் இப்போது இவ்வாதீனத்திலே இருபத்தொன்றாவது குருமஹா சந்நிதானமாக வீற்றிருந்தருளிச் சிவஞானச் செங்கோல் செலுத்திவரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்** பெருங்கருணையுடன் தமது ஞான பீடத்தின் பெருமைக்கு ஏற்ப மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கையும் தமது ஆதீனத்திலே உள்ள முன்னோர் அருளிய உரைகளுடன் நன்கு ஆராய்ந்து வெளியிடக் கட்டளையிட்டருளியும், கற்றோர் சிலரே யன்றி மற்றோர் பலரும் எளியநிலையிலே சித்தாந்த சாத்திரங்களின் உரைநடையை முதற்கண் படித் தறிந்து நூல்களிலும் உரைகளிலும் தமது கருத்தைச் செலுத்திக் கற்றுய்யுமாறு வேண்டிய விளக்க உரை நடையைப் புதுவதாக எழுதுவித்து அச்சிடுவித்து வழங்கியும், சமயசாத்திர உண்மைகளையும் திருமுறைகளின் உண்மையையும் எல்லாமக்களும் எளிதில் அறிந்து இன்புறுதற்காக ஆண்டுதோறும் **சித்தாந்த சைவமாநாடு, திருமந்திரமாநாடு** முதலிய மாநாடுகளைச் சிவராசதானியாகிய திருவாவடுதுறையிலும், திருவெண்ணெய் நல்லூரிலும் கூட்டிச் சிறந்த சித்தாந்தப் பேரறிஞர்களைக் கொண்டு விரிவுரையாற்றப் பணித்தும் வருவது உலகம் அறிந்த செய்தியே.

திருவனந்தபுரத்திலும் சைவசித்தாந்த மாநாடுகளைக் கூட்டி, சமய உண்மைகளை யாவரும் தெரிந்துய்யுமாறு செய்வதும் யாவரும் அறிந்தனவே.

இவ்வண்ணம் தமது ஆதீனத்துக் கல்விக்களஞ்சியத்திலுள்ள நூல்களில் ஒரு நூற்றுக்கு மேற்பட்டுச் சிவஞானவரம்பும் சித்தாந்தமரபும் நிலைபெறுமாறு ஞானசாத்திரங்களையும், செந்தமிழ் வரம்பு தழைத் தோங்குமாறு செந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும், பிறவற்றையும் பெரும்பொருட் செலவிலே ஆதீனத்துக்கு ஒரு அங்கமாக அமைக்கப்பெற்ற சிறந்த அச்சகத்திலே சிறந்த முறையிலே அச்சிட்டு இலவசமாகவே வழங்கி மக்களை இன்புறுத்தித் தாமும் இன்புற்று விளங்கும் நமது 'குருமஹாசந்நிதானம் நீடூழிவாழ்க: அவர்கள் கருணை நெடிது வாழ்க' என ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரிய மூர்த்தியையும் ஆதீன பூசாமூர்த்திகளையும் அனவரதமும் சிந்தித்துவாழ்த்தி வணங்குகின்றேன்.

இந்தச் சிவப்பிரகாச உரைநடை நூல் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமஹாசந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டருளிய படி இப்போது வெளிவருகிறது. இதிலுள்ள விளக்கக் குறிப்புக்கள் யாவும் நன்மக்கள் அறிந்து இன்புறத் தக்கன என்னும் துணிவுமிக உடையேன். அங்கங்கே செய்யுட் கருத்துக்களை விளக்கக் குறிப்புக்கள் நன்கு விளக்குவதற்குப் போதியனவே. ஆயினும், இதன் கண் மேலும் விளக்குதற்கு ஏதேனும் உளவாயின் அடுத்த பதிப்பிலே திருத்தமுற அவை வெளிவருவனவாம்.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி—

திருவாவடுதுறை
4—9—1960

**த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,**

ஆதீனவித்துவான்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சிவப்பிரகாசம் - உரைநடை

## (விளக்கக் குறிப்புக்களுடன்)

## காப்பு

சிவப்பிரகாசமாகிய இந்நூலின் முதலிலே பொதுவாக விநாயக வணக்கம் செய்தருளுகின்றார் இந்த நூலாசிரியராகிய கொற்றவன்குடி - ஸ்ரீ உமாபதிதேவ நாயனார். இது காப்புச் செய்யுள்.

ஞானப்பிழம்பாகிய திருமேனியையும், அருட் களிப்பாகிய மதசலத்தையும் உடையவர்; தியானிக்கின்ற மெய்யடியார்களுடைய கண்ணும் மனமும் நிறைய வெளிப்படுகின்ற யானை முகத்தையுடையவர். அப்படிப்பட்ட மூத்த பிள்ளையாரது சீர்பாதங்களை மறவாமல் மலரும் பருவத்து அரும்புகளை விதிப்படி எடுத்துத் தொடுத்து அணிந்து வழிபடுகின்ற அடியவர்கள் மனங்கள், முன்புள்ள அஞ்ஞான இருள் நீங்கிச் சிவஞானப் பிரகாசமாம். பின்பு வன்மையினையுடைய சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம் என்னும் மூவித வினைகளும் அவர்களைப் பொருந்தமாட்டா.

## மங்கலவாழ்த்து

இனி, பாயிரம் கூறத்தொடங்கிய ஆசிரியர் பன்னிரண்டு செய்யுட்களால் அதனை முடித்தருளுவர்.

இது மங்கலவாழ்த்து என்றும் கூறப்படும். நிட்கள பரமசிவனாகிய திருச்சிற்றம்பலமுடையாரை முதற் செய்யுளால் துதித்தருளுகின்றார்.

1. அநாதியாக ஆன்மாக்களைப்பற்றிய ஆணவ மலமாகிய இருட்டை நீக்குதலினால் உலகத்துள்ள எல்லா ஒளிகளினும் மேம்பட்ட ஒளியாய், இயல் பாகவே பாசங்களின் நீங்கிய அநாதிமலமுத்தன் ஆக லின் தன்னுடைய கருணை என்று சொல்லப்படும் ஞானமே திருமேனியாகவுடைய நிட்கள பரமசிவன் பிரபஞ்சம் முழுவதையும் அளித்தருளும் கிரியாசத்தி யான உமாதேவியார் காணும்பொருட்டுத் தமது திரு வடையாளப் பூமாலையாகிய கொன்றைமாலையையும், ஞானசந்திர கலையையும், கங்காநதியையும், பாம்பை யும் நீண்ட சடையிடத்துப் பொருந்துமாறு வைத்து, விட்டு நீங்குதற்கு அருமையான பிறவித் தொடர்ச்சி யானது தன் ஐந்தொழிற் கூத்தாகிய ஆனந்தக்கூத் தைத் தரிசித்தோரை விட்டுநீங்கும்படி, சிதாகாச வடி வாகிய திருச்சிற்றம்பலத்தினுள்ளே நிலைபெற்றுத் தேவர்களெல்லாரும் துதிக்க, ஞானமா நடனத்தைச் செய்தருளும் பொலிவினையுடைய தாமரைமலர்போன்ற சீர்பாதங்களை எம்முடைய தலைமேலும் இதயத்தி னுள்ளும் பொருந்தும்படி யாம் வணக்கம் செய்து துதிப்பாம்.

2. இனி, அந்தப் பரமசிவன் செய்கின்ற பஞ்ச கிருத்தியங்கட்கெல்லாம் உடனான பராசத்தியைத் துதித்தருளுகின்றார்.

எங்கும் வியாபகமாயுள்ள மேம்பட்ட பராசத்தி திரோதானசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி

வடிவாய் அநாதியில் உண்டான மேலான அநுபவ சொரூபத்தை ஆன்மாக்களுக்குக் கொடுக்கும் கருணை வடிவாய் சுத்தா சுத்தங்களான தனு கரண புவன போகங்களைத் தரித்தற்கு விரிந்த முதற்காரணங்களாகிய விந்து மோகினி மான் என்னும் மூன்றையும்பொருந்தி எவற்றிற்கும் ஒருமுதலாய் நின்மலமாய்ப் பஞ்சகிருத்தியங்களுக்கும் காரணமாய் ஆன்மாக்களின் பிறவித் துன்பம் கெடும்பொருட்டு அழகிய திருச்சிற்றம்பலத்தினுள் நாயகன் ஆடலைக்காணும் எவ்வுயிர்க்கும் தாயாகிய அம்மையாரது அருளாகும் சீர்பாத கமலங்களைச் சிரத்தின்மேல் வைத்து யாம் வணங்குவாம்.

விந்து என்றது சுத்தமாயையில் தோன்றிய விந்து சத்தியை. மோகினி என்றது அசுத்த மாயையை. மான் என்றது அவ்வியத்தமாகிய பிரகிருதிமாயையை என்க.

மேலேகூறிய ஞானமாநடராசரும், சிவகாமசுந்தரியம்மையும் இவ்வாசிரியருடைய வழிபடு கடவுளாவர்.

3. அந்தச் சிவசத்தியுடன் பரசிவம் கூடினவிடத்தே தோன்றிய விநாயகக்கடவுளைச் சிறப்பாகத் துதிக்கின்றார்.

பெரிய தமிழ்நூற் செய்யுளினிடத்து எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணங்களினும் விலக்கிய குற்றங்கள் பொருந்தாமலும், அவற்றுட்கூறிய நன்மைகள் பொருந்துமாறும், இந்த நூல் முடியுமளவும் இடையே தீமைகள் வந்து துன்புறுத்தாமலும்கருதி, விளங்குகின்ற இரண்டு மகரக்குழையளவும் சென்று போர்செய்து செவ்வரிபரந்து இரண்டு வேல்களைப் பழித்த கயற்கண்ணியாகிய உமாதேவியா

ரோடு சிவபெருமான் கூடுதலால் பெறப்பட்ட மும்மதங்களையுடைய யானைமுகத்துடன் அவதாரம் செய்தருளிய விநாயகக்கடவுளுடைய வண்டுகளாகிய முனிவர்கள் பராவும் பொருட்டுக் கருணையால் மலர்ந்து வளரும் தாமரை மலர்களையொத்த இரண்டு சீர்பாதங்களையும் யாம் தியானித்திருப்பாம்.

4. இன்னமும் இந்நூலுக்கு இடையூறு வாரா திருத்தற்பொருட்டு இளைய பிள்ளையாரை இவ்வாசிரியர் துதித்தருளுவாராயினர்.

தேவர்கள் கூட்டத்திற்குச் சேனுபதியாய், அடியார்கட்கு வேண்டிய வரத்தைக் கொடுத்தருளும் பொருட்டு நீலநிறத்தையுடைய மயிலின்மீது ஏறிவரும் பரமேசுவரனுடைய ஞானப்பிள்ளையாய், மகத்துவமிக்க அகத்தியமுனிவருக்கு வேதப்பொருளை உபதேசிக்கும் ஆசாரியமூர்த்தியாய், தம்மை எண்ணுத வீரப்பாட்டினை உடைய உள்ளத்தைச் செருக்கினுல் கொண்ட சூரபதுமனுடைய மார்பகமும், எம்முடைய பிறவித்துன்பமும், கிரவுஞ்சம் என்னும் மலையுமாகிய இவைகளெல்லாம் ஒவ்வொன்று இரண்டு கூறுபடும்படி ஒளிமிக்க ஞானசத்தி என்னும் வேலை உயர்த்து விட்டருளியவராய், குறமகளாகிய வள்ளியம்மையாரை மணந்தருளிய கந்தன் என்னும் திருநாமத்தையுடையவராய் விளங்கும் சுப்பிரமணியக் கடவுளின் மலர்போலும் திருவடித்துணைகளை யாம் சிந்திப்பாம்.

5. இனி, இந்நூலால் உணர்த்தப்படும் பொருள் தமக்கு மெய்கண்ட சந்ததியிலே பரம்பரையாக நூல் முகத்தாலும், உபதேச முகத்தாலும், அநுக்கிரகிக்கப்

பட்டது எனவும், அந்தச் சந்தானகுரவர் திருமுடியடைவு இன்னதெனவும் கூறுகின்றார்.

ஸ்ரீகண்ட பரமேசுவரன் எழுந்தருளியுள்ள திருக்கைலாசமலையிலே காவல்பூண்ட சிறப்பினையுடையவர் திருநந்திதேவர். அவருடைய அநுக்கிரகம்பெற்ற கூட்டத்தில் ஒருவர் சனற்குமாரமுனிவர். அவர்பால் அநுக்கிரகம்பெற்றவர் இவ்வுலகத்திலே மெய்ப்புகழை விரித்த சத்தியஞான தரிசினிகள். அவருடைய திருவடியைச் சேர்ந்தவர் பரஞ்சோதிமுனிவர். அந்த முனிவர்பால் அநுக்கிரகம் பெற்றவர் திருவெண்ணெய் நல்லூரைத் தமது திருப்பதியாகக்கொண்ட மெய்கண்டதேவநாயனார். அந்த ஞானவீரராகிய ஆசாரியரிடத்திலே அநுக்கிரகம் பெற்றவர் அருணந்திதேவ நாயனார். அந்த ஆசாரியரிடத்து ஞானோபதேசம் பெற்றவர் மிக்க கருணையுடைய மறைஞானசம்பந்தர். மேலே கூறப்பட்ட ஏழு குரவர்களும் இந்தச் சந்தானத்திலே எம்மை ஆளும் இயல்புடையார் ஆவார்.

6. இந்நூலாசிரியராகிய ஸ்ரீஉமாபதிதேவநாயனார் தமக்குச் சிவஞான உபதேசம் செய்தருளிய ஞானாசாரியர் இவர் எனக்குறித்து வணங்குகின்றார்.

உலகத்திலே சாமவேதமானது விளங்கவும், பராசர முனிவருடைய கோத்திரம் இடையறாமல் நிலைபெறவும், எம்மைப் போன்றவர்கட்கும் சிவஞானம் சித்தியாம் பொருட்டும் திருமேனிகொண்டு எழுந்தருளினார் எமது ஞானாசாரியர். அவர் மருதூரிலே அவதரித்தவர்; திருப்பெண்ணாகடம் என்னும் திவ்விய திருப்பதியிலே எழுந்தருளியிருந்தவர். அவரே எமது சென்னி

யின்மேல் திருவடி சூட்டியருளிய சைவசிகாமணி. மறைஞானசம்பந்த நாயனுர் என்னும் திருநாமத்தினை யுடையார். எமது ஞானபிதா. அப்பரமோபகாரியாகிய ஞானுசாரியனுடைய திருவடிகளைச் சிரமேற்கொண்டு வணங்குவாம்.

7. இச் சிவப்பிரகாசநூலின் கருத்து இது என மேல் அருளிச்செய்கின்ருர்.

உலகாயதன் புத்தன் சமணன் மீமாஞ்சகன் மாயாவாதி பாஞ்சராத்திரி என்று சொல்லப்படும் புறச் சமயிகளுக்கெல்லாம் விளங்கித்தோன்ருத தன்மையினை யுடையது. சைவம் பாசுபதம் காளாமுகம் வயிரவம் வாமம் மாவிரதம் என்னும் அகச்சமயிகளுக்கு விளங்கும் தன்மையினையுடையது. காட்சி முதலிய அளவைகளுக்கு எட்டாதது. அபேதம் பேதம் பேதாபேதம் முதலிய தன்மைகள் இல்லாதது. வேதாகமங்களிலே விதிக்கப்பட்ட சிவதன்மச் செயல்களால் விளைவது. அத்துவிதச் சிறப்பினை உடையது. வேதாந்தத்தின் தெளிவாகவுள்ளது. இத்தகைய மேம்பாடுகளெல்லாம் தன்பால் விளக்கமாகவுடைய சைவ சித்தாந்தத்தின் உண்மையை இந்நூலிலே விளங்கச் சொல்லுவாம்.

8. ஆன்மாக்கள் மூன்று திறத்தன. ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலர், ஆணவம் கன்மம் ஆகிய இரண்டுமலமுடைய பிரளயாகலர், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையுடைய சகலர் என மூவகைத்தாம். இந்தத்தன்மைகள் அநாதியே உள்ளன. அம்மூவகை ஆன்மவர்க்கங்களுள் பக்குவரான சகலருக்குப் பார்வைமிருகத்தால் மற்றென்றைப் பிடிக்குமாறுபோல, நம்மைப் போலவே திருமேனி

கொண்டு எழுந்தருளிவந்து நோக்காலும், பரிசத்தாலும், வாக்கினாலும், பாவனையாலும், நூல்களாலும், யோகதீட்சையாலும், அவுத்திரி தீட்சையாலும் மும்மலங்களும் கெட்டொழியும்படி பரமேசுவரன் அநுக்கிரகம் செய்தருளுவார். அவுத்திரி தீட்சையானது கிரியாவதி ஞானவதி என்று இரண்டு விதப்படும். இதனால் சிவப்பேற்றை அடைதற்கு உரிய உயிர் மூவகைப்படும் என்பதும், சகலவர்க்கத்திற்குச் சிவபெருமான் அநுக்கிரகம் பண்ணும் முறைமையும் கூறியமை காண்க.

இனி, நோக்கால் என்றது மீனானது சினையைப் பார்த்து நிற்க அந்தச்சினை மீனின்சொரூபம் பெற்றாற்போல, ஞானாசாரியன் சிவோகம்பாவனை செய்திருந்து அந்த ஞானதிருட்டியினாலே பார்க்கும் காலத்து அத்துவாக்களில் கட்டுண்ட கன்மங்களைத் தகித்து இராகுவினாலே விழுங்கப்பட்டு மறைப்புண்ட சந்திரனைப் போல மும்மலங்களால் மறைப்புண்டுகிடந்த ஆன்மாக்களையும் அந்த மலங்களினின்று நீக்குதல் என்க.

பரிசத்தால் என்றது பஞ்சப்பிரம ஷடங்கமந்திரங்களின் சொரூபமாயிருக்கும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தை வலக்கையிலே நியசித்துப் பிராரத்தகன்மத்தை நீக்குதற்பொருட்டாகச் சீடனுடைய சிரத்திலே சோதிமயமாக வைத்து அந்தச் சோதியை அவனுடைய உள்ளும் புறம்பும் பூரணமாக உள்ளதாகத் தியானித்து அந்த ஸ்ரீ அத்தத்தாலே அவனுடைய பஞ்சகலாத் தானங்களையும் பரிசித்து வாதனையை யொழிக்குமது என்க. வாக்கினால் என்றது பதி பசு பாசத்தின் உண்மையான திருவைந்தெழுத்தை ஞானவொளியுடனே கூட உபதேசித்தல் ஆகிய வாசகதீட்சை என்க.

பாவனையால் என்றது சீடனைத் தன்னைப்போல நின்மலமாகப் பாவித்துப் பிரபஞ்சத்தினது பற்று நீங்குமாறு மும்மலங்களிலே அழுந்தாமல் நிறுத்துதல் என்க.

நூலால் என்றது இந்த முறைமைகள் எல்லாம் சீடனுக்குச் சந்தேகந்தீரச் சாத்திரங்களிலே ஒப்புக் கொடுத்துக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் ஆகியவை களிலே நிறுத்துதல் என்க.

யோகத்தால் என்றது அட்டாங்க யோகத்தினாலே மனோவிகாரத்தை அடக்குவித்து நிட்டை கூடச் செய்தல் என்க.

மேலே சொல்லப்பட்ட அறுவகையான தீட்சை களும் பக்குவான்மாக்களுக்குச் செய்வதென அறிக.

அவுத்திரிதீட்சை என்பது குண்டம், மண்டலம் இட்டு அக்கினிகாரியமும் செய்து பாசக்ஷயம் பண்ணு வது என்க. இது அபக்குவர்க்குச் செய்யும் தீட்சை யாம் என அறிக.

9. சமயம் விசேடம் நிருவாணம் எனத் தீட்சை மூன்று வகைப்படும். அவற்றுள், சமயம் விசேடம் ஆகிய தீட்சைகள் இரண்டும் மந்திரங்களுக்கு அதி காரம் அர்ச்சனைக்கு அதிகாரம் யோகத்துக்கு அதிகாரம் என்பதாம். அதிகாரம் என்பது இங்கே யோக்கியம் எனப் பொருள்படும். சமயதீட்சை சரியாதிகாரம்; விசேடதீட்சை கிரியாயோகங்கட்கு அதிகாரம் என்க. நிருவாண தீட்சை ஞானதிகாரம் என அறிக. மந்திராதிகாரமாவது மந்திரம் செபித்தற்கு யோக்கிய முடையவராகச் செய்தல். சமயிகளுக்குப் பஞ்சப் பிரமமந்திரங்களும், ஷடங்கமந்திரங்களும், ஏழுகோடி

மகாமந்திரங்களும் உரியன. அவர் தர்ப்பணம் முதலி யன செய்தற்கும் அதிகாரமுடையார். கிரியா யோகம் இரண்டற்கும் அதிகாரம் ஒன்றே. அது விசேட தீட்சை எனப்படும். விசேட தீட்சைக்கு அர்ச்சனுதி காரமும் யோகாதிகாரமும் உரியன. அர்ச்சனுதிகாரம் என்பது சிவபூசை குருபூசை மகேசுவரபூசை முதலி யன செய்தற்கு யோக்கியமுடையவராகச் செய்தல். சிவபூசை முதலியனவற்றுள் பிராணுயாமமும் அந்தரி யாகமும் ஆகிய உட்பூசையும் செய்யவேண்டுகையால் அவையிரண்டும் யோகபாதத்துள் அடங்குவனவாம். இயமம் நியமம் ஆதனம் பிராணுயாமம் பிரத்தியா காரம் தாரணை தியானம் சமாதி ஆகிய எட்டுவகை உறுப்புக்களுடன் கூடியது அட்டாங்க யோகம். நிருவாணம் முத்திக்குரிய தீட்சை; அது சாயுச்சியத் துக்கு ஏதுவாம்.

இனி, மந்திரங்கள் ஈசானம் முதல் அத்திரம் ஈருகப் பதினென்றும். பதங்கள் பிரணவமாகிய ஓங்கார முதல் நமோநம: என்பது ஈருக உள்ள எண்பத்தொன் றும். அகாரம் முதல் க்ஷகாரம் ஈருகவுள்ள ஐம்பத் தொன்றும் வன்னமாம். அநாசிருத புவனம் முதல் காலாக்கினிபுவனம் இறுதியாகவுள்ளன இருநூற்றிரு பத்துநான்கு புவனங்கள். தத்துவங்கள் பிருதிவி முதல் நாதம் ஈருன முப்பத்தாறு தத்துவங்களாம். அவை ஆன்மதத்துவம் இருபத்துநான்கு. வித்தியாதத்துவம் ஏழு. சிவதத்துவம் ஐந்து. கலைகளாவன நிவிர்த்திகலை பிரதிட்டாகலை வித்தியாகலை சாந்திகலை சாந்தியாதீத கலை என்னும் ஐந்து. அத்துவாக்கள் ஆருவன: மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்பனவாம்.

ஒரு புற்றிலே கிடக்கும் பாம்பை ஓட்டிவிடக் கருதினோர் அந்தப் புற்றினை நிலைகுலையத்தக்க உபாயங்களைச் செய்ய அந்தப்பாம்பு புற்றைவிட்டுத் தானே போனாற்போல, ஆசாரியன் சீடனைக் கலாசோதனை செய்து திருநோக்கமும் செய்ய ஆன்மாவும் அத்துவாக்களைவிட்டு நீங்கித் திருவருளைப் பொருந்திச் சாயுச்சியத்தை அடையும் என்க.

10. திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தனவனம் வைத்தல், பூக்கொய்தல், இண்டை முதலியன கட்டிச்சாத்துதல் முதலிய சரியைத்தொழில்களும், சிவபூசை குருபூசை மகேசுவரபூசை முதலான பூசைத் தொழில்களும், அட்டாங்கயோகம் முதலான யோகத்தொழில்களும் ஆகிய எல்லாம் ஞானம் உண்டாதற்குக் காரணம் என்று ஆகமங்கள் கூறுவனவாம். இது சத்தியமே. அந்தச் சரியை கிரியா யோகங்களின் முறைமையிலே நின்றவர்கட்குச் சாலோகம் முதலிய பதமுத்திகள் மூன்றும் முறையே பொருந்தும். ஞான பாதத்திலே கூறப்பட்ட ஞானம் இரண்டுவகைப்படும். அவை பரஞானம் அபரஞானம் என்பன. இதனைத் திருவருள்ஞானம், ஆகமஞானம் என்றும் கூறுவர். மேலான ஞானத்துக்கு உரியவர்கள் நூல்களை ஓதி உணர்ந்து, சமயபேதங்களையும் அறிந்து, பதி பசு பாசங்களையும் உணர்ந்து, சாலோகம்முதலிய பதமுத்திகளையும் கடந்து, மேம்பட்ட சாயுச்சியமாகிய பரமுத்தியை அடைவர். சரியை முதலியன உபாயச் சரியை கிரியாயோகம், உண்மைச்சரியை கிரியாயோகம் என இருவகைப்படும்.

11. இந்தச் சாம்பிரதாய உண்மையை முன்பு விளக்கிய முதனூலாசிரியர் ஸ்ரீ மெய்கண்டதேவ

நாயனர். அவர் சிவஞானபோதம் என்னும் ஸ்ரீ நந்தி கேசுர வாக்கியத்தைத் தமிழிலே அருளிச்செய்தார். அவருடைய ஞானபுத்திரராகிய ஸ்ரீ அருணந்திதேவ நாயனர் சிவஞானபோத நூலை விரித்துச் சிவஞான சித்தி என்னும் பெயரால் ஒரு ஞானநூலை அருளினர். அந்த இரண்டு ஞானகுரவர்களுடைய ஸ்ரீ பாதங்களையும் வணங்கித் துதித்து, அவர்களால் அருளிச் செய்யப்பட்ட அவ்விரண்டு நூல்களையும் ஆராய்ந்து, என்னுடைய ஞானசாரியர் அருளியபடியும் திருவருளையும் சிவாகமங்களையும் கூட்டிச் சிவப்பிரகாசம் என்னும் பெயரால் இந்த நூலைச் செய்யலுற்றேன். இது பொதுவதிகாரம், உண்மையதிகாரம் என்னும் இரண்டு அதிகாரங்களையுடையது. இதன் செய்யுட்டொகை நூறு திருவிருத்தங்கள். ஒன்றுக்கும் பற்ருத யானும் என்னுடைய ஆசை மிகுதியாலே இதனைச் செய்தேன் என்றருளினர்.

இதனுள், பொது என்றது பதி பசு பாச இலக்கணங்களைச் சாமானியமாக அருளியதை என்றுகொள்க. உண்மை என்றது ஆன்மதரிசனம் சிவதரிசனம் முதலியவற்றை அநுபவவாயிலாக அருளியது என்று உணர்க. எனவே, முன்னூலாகிய சிவாகமப் பொருளையும் வழிநூலாகிய சிவஞானபோதம் சிவஞானசித்தி என்னும் இரு நூல்களையும் சிந்தித்துத் தெளிந்து அநுபவத்திலே உறைத்த செய்திகளையும் அவைகளுடன்முறையே கூட்டிச்செய்தது இந்நூல் என்றவாறு.

இதனை உணர்ந்தார்க்குச் சிவம் பிரகாசித்தலின் இது சிவப்பிரகாசம் எனப் பெயருடையதாயிற்று என்பர் பெரியோர்.

12. பழமையுடையன என்று சிறப்பித்துச் சொல்லப்படும் எந்த நூல்களும் பதி பசு பாசங்களை விளங்கச் சொல்லாதனவாயின் நன்மையுடையன ஆகா. இப்பொழுதுதான் தோன்றியதெனச் சொல்லும் எந்த நூலும் பதி பசு பாசங்களை விளங்கக் கூறுமிடத்துத் தீமையுடையன ஆகா. சிறந்த மாணிக்கமானது பாம்பினிடத்திலே தோன்றியது என இகழாமல் இரத்தினம் ஒன்றனையேகொள்ளுவர். அதுபோல, இந்நூலும் திரிபதார்த்தத்தையே சொல்லுவதாகலின் சொற்குற்றமும் புதுமைத் தன்மையும் கொள்ளாமல் பொருட்சிறப்பினையே கொள்ளுவர் உத்தம குணமுடையோர். மத்திமர் நூலழகினையே பார்ப்பார். அதமர் குற்றங்குணங்கள் அறிதற்குரிய நலமில்லாதவராதலால் பலர் கூடியிருந்து கொண்டாடினால் தாமும் கொண்டாடுவர். பரசமயிகள்கூடி இகழ்ந்துரைப்பாராயின் அவரோடுகூடித் தாமும் இகழ்வர். ஏனெனில், தமக்கென ஓர் அறிவு இல்லாதவர் அவர் ஆகலான் என்க. இது அவையடக்கம் உணர்த்தியது.

மேலே கூறிய பன்னிரண்டு செய்யுட்களும் மங்கல வாழ்த்து என்னும் பாயிரமாம்.

# பொது அதிகாரம்

முதற்சூத்திரம் :

இது சிவஞானபோதமாகிய முதல்நூலின் முதற் சூத்திரப் பொருளையே உணர்த்தத் தொடங்குகிறது.

13. வேதம் சிவாகமம் மற்றுமுள்ள பல நூல்கள் ஆகிய எல்லாவற்றினும் கூறிய கருத்து பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களைப்பற்றி ஆராய்ந்து பகுத்துக் கூறுதலேயாம். முப்பொருள்களினுள் பதிப்பொருள் மற்றை இரண்டு பொருள்களுக்கும் மேம்பட்டது. அப்பதிப்பொருள் அருவம் உருவம் அல்லாததாய், தத்துவங்கடந்த பொருளாகலின் மாயாகுணங்களாகிய சத்துவம் இராசதம் தாமதம் என்னும் குணங்களும் மாயா வடிவங்களும் இல்லாததாய், அநாதியிலேயே படிகம்போலக் குற்றமில்லாத தூயதாய், ஒரு முதலாய், கேடில்லாததாய், எண்ணிறந்த உயிர்களுக்கும் அறிவாய், அசைவில்லாததாய், ஞானமே வடிவாயுள்ளமையின் ஒன்றினுல் கண்டிக்கப்படாததாய், அறிவு வடிவாலன்றிக் கிட்டுதற்கு அரியதாய், அறிவு வடிவாயினுருக்குச் சென்று அடையப்படும் பேருய், அணுவுக்கணுவாய், அப்பாலுக்கப்பாலாய் விளங்கும். அப்பொருளினையே தெளிந்த அறிவுடையோர் சிவம் எனச் சிறப்பித்துச் சொல்லுவார்கள். இது பதிப் பொருளின் இலக்கணம் கூறியது.

14. நிட்கள வடிவாயுள்ள சிவம் பிரபஞ்ச சிருட்டியை எவ்வாறு நடத்தும் என்னில், அப்பரசிவத்தினின்றும் பிரிக்கப்படாத பராசத்தியினிடமாக இச்சா

சத்தியும் ஞானசத்தியும் கிரியாசத்தியும் உண்டாம், அந்தச் சத்திகளைச் சிவன் பொருந்தி, குறித்தற்கு அரிய கருணையே திருமேனியாகக் கொண்டு, குடிலையைப் பொருந்தி நாதம் விந்து முதலிய தத்துவங்களையும் விஞ்ஞானகலருக்குரிய ஒளிபொருந்திய தனு கரண புவன போகங்களையும் பெருமையடையப் படைத்து நிறுத்துவர். விந்து தத்துவத்தினின்றும் சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் நாலு வாக்குக் களையும், ஐம்பத்தோரக்கரங்களையும் படைத்து, அக் கரங்களை மாறிமாறிப் புணர்த்துப் பதங்களை ஆக்கி, அவற்றை மாறிமாறிப் புணர்த்து வாக்கியங்களை ஆக்கி, அவற்றை மாறிமாறிப் புணர்த்துச் சந்தோ பேதங்கள் ஆக்கி அவற்றால் வேத சிவாகமங்களை அங்ஙனம் அருளிச்செய்வார். அதோமாயையைப் பொருந்திப் பிரளயாகலருக்கும் சகலருக்கும் தனு வாதிகளைப் படைத்து நிறுத்துவர். அவற்றை மீண்டும் அவ்வக்கால எல்லைகளிலே ஒடுங்கச்செய்வர். அவற்றை ஒடுக்கும் திருமேனி நிட்களமும், தோற்றுவிக்கும் திரு மேனி சகளமும் என்று கூறுவர். குடிலை என்றது சுத்த மாயையை; அதோமாயை என்றது அசுத்த மாயையை என்க.

15. சிவபிரான், காட்சி முதலிய அளவைகளைக் கடந்தவன். அது இது என்று சுட்டியறியப்படாத இயல்பினன். சர்வவியாபகன். முதல் நடு இறுதிகள் ஒன்றுமில்லாதவன். குறைவில்லாத ஞானமே சொரூப மாகவுள்ளவன். தன்னுண்மையைத் தானே பரஞானத் தால் அறிவிக்கப்படும் அவர்க்கன்றி ஏனையோருக்கு அறியவொண்ணாத ஒப்பற்றவன். வெறுப்பு விருப்புக் கள் இல்லாத தனி முதல்வன். உயிர்க்கு உயிராக

நின்று அருள்பவன் ஆகிய நிலைகளையுடையன் ஆகலின் நின்மலனாகிய சிவன் தன் திருவுளத்துக்குப் பொருந்திய தொரு திருமேனியைத் தானே தனதாகக் கொண்டருளுவான் என அறிக.

16. உலகாயதன் பிரபஞ்சம் தானே இயல்பாய் உண்டாம்; ஆகலின், கர்த்தா எற்றுக்கு? என்பான். இயல்பு என்பது என்றும் ஒருபடித்தாக இருத்தல் வேண்டும். அங்ஙனம் இன்றிப் பிரபஞ்சம் அவன் அவள் அது எனக் காணப்படுகிறது. அவை கன்மத்துக்கு ஈடாகத்தோன்றி, நிலைபெற்று, மீளத்தோன்றின எல்லையிலே ஒடுங்குவனவாம். அவ்வாறு ஒடுங்கின பிரபஞ்சம் பின்னுமுண்டாவது எற்றுக்கு? என்னில், மலம் காரணமாகப் பின்னும் ஒடுங்கின எல்லைகளினின்றும் உண்டாம். பட்டாசாரியன் உயிர்கள் அச்சுமாறிப் பிறவாது என்பான். புழு வேட்டுவாளியானாற்போலவும், மயிர்க்குட்டி வண்டு ஆனாற்போலவும் உயிர்களுக்கு உடம்பு கன்மத்துக்கு ஈடாக மாறி மாறித் தோன்றுவதும் நிற்பதும் அழிவதுமாம். நிரீச்சுர சாங்கியன் புருடன் சந்நிதியில் மாயை தானேதனு முதலியனவாய்த் தோன்றும் என்பான். மாயை சடம் ஆகலான், தானே வடிவம் ஆகமாட்டாது. ஆன்மாக்கள் மலசகிதர் ஆகலின் தாமாக ஓர் உடம்பை எடுத்துக் கொள்ளும் அறிவும் ஆற்றலும் இல்லாதன; எனவே, வினைதானே உடம்பைக்கொடுக்கும் என்பான் மீண்டும் அப்பட்டாசாரியன். மாயையினிடமாக விளங்கும் கன்மமானது ஓர் உடம்பிலே பொருந்திச் சடமாய் நிலைபெறும்; ஆகலின், நின்மலனாகிய சிவன் தானே விகாரமற நின்று எல்லாவற்றையும் உண்டாக்குவன் என்க.

17. பிரபஞ்சமுழுவதையும் பிரமதேவர் படைப்பார். பிரமதேவரால் படைக்கப்பட்ட அப்பிரபஞ்சத்தை விட்டுணுமூர்த்தி காத்தருளுவர். அவையிற்றையெல்லாம் உருத்திரமூர்த்தி அழித்தருளுவர். உருத்திரன் ஒருவரே எஞ்சிநிற்கப் பிரமவிட்டுணுக்கள் யாவரும் அழிவர். எல்லாவற்றையும் அழித்தபின் எஞ்சி நின்ற அம்முதல்வரே பின்புயாவற்றையும் படைக்கக் காரணராவார். அம்முதல்வருடைய அதிகாரத்திலேயே பிரமவிட்டுணுக்கள் பொருந்தி நிற்பர். ஒடுக்கின முறைமையிலேயே எல்லாம் தோற்றுவிப்பர். இப்படிச் செய்யுங் காலத்துத் தான் விகாரப்படுதல் இலர். ஆகாயத்தில் இயங்கும் சூரியன் சந்நிதியில் நேர்பட்ட தாமரை அலரும். அலரும் பக்குவத்துக்குரியன அரும்பாகும். உலரும். இதனை நாம் எப்போதும் காண்கிறோம். இவை காரியப்படுமிடத்துச் சூரியன் யாதும் விகாரப்படுதலில்லை. அதுபோலவே, பிரபஞ்சம் முழுவதும் சிவனால் காரியப்பட்டுவருமிடத்துச் சிவன் விகாரப்பாடிலர் என அறிக.

இது பாஞ்சராத்திரியை மறுத்துச் சங்காரகர்த்தாவே படைப்பு முதலியவற்றிற்கும் கர்த்தா எனவும், அத்தொழில்கள் எல்லாம் சிவன் சங்கற்பமாத்திரையிலே செய்தருளுவர் எனவும், அவைகளால் விகாரப்பாடுடையரல்லர் எனவும் கூறியமை காண்க.

18. பரமேசுவரன் ஆன்மாக்களிடத்து வைத்த பெருங்கருணையால் இவற்றைச் செய்தருள்வன். இதனைக் கிரீடாப்பிரமவாதி, மாயாவாதி முதலியோர் பிரமத்தின் விளையாட்டு என்பர். சைவசித்தாந்திகள் துன்பத்துக்குக் காரணமான பிறவிக் கடலினின்று

ஆன்மாக்களை எடுத்து நிலைபேறுடைய சிவப்பேற்றை அருளுவன் சிவபிரான் என்றுகூறுவர். அஃது எப்படி? என்னில், சங்காரம் என்பது ஆன்மாக்களுடைய பிறப்பு இறப்புக்களால் உண்டான இளைப்பை ஆற்று தலாம். மீண்டும் படைத்தல் என்பது ஆணவமலம் வலியறும்பொருட்டுப் பக்குவப்படுத்துதலாம். காத்தல் என்பது கன்மத்தைத்தொலைத்தற்பொருட்டு ஆன்மாக் களுக்கு ஏறுமல் குறையாமல் போகத்தை நுகர்வித் தலாம். திரோதாயி என்னும் மறைத்தல்தொழில் ஆன்மாக்கள் போகத்தை நுகரும்வரையில் அந்த விடயங்களிலே சுவை பிறக்கும்படி நிறுத்துதலாம். அநுக்கிரகம் என்பது அருளல். அது ஆன்மாக்களுக் குப் பிறவியை அறுத்துப் பேரின்பத்தைத் தருதலாம். மேலே சொல்லிய ஐந்தொழிலும் இறைவன் திருவருட் செயல் அன்றி வேறில்லை; பிள்ளை விளையாட்டென்று பிறர் சொல்லுதல் பொருந்தாது. எனவே, உயிர்கட்குப் புத்தி முத்தி வழங்குதற்பொருட்டாகவே இறைவன் பஞ்சகிருத்தியம் செய்தருளுவர்.

உம்முடைய கர்த்தா இந்தத் தொழில்களைச் செய்வதெல்லாம் என்னபயனைக் குறித்து? என்றான் புத்தன். அதற்குப் பதில் கூறும் நிமித்தம் கிரீடாப் பிரமவாதிகள், மாயாவாதிகள் கருத்தையும் எடுத்துக் காட்டிச் சமாதானம் அருளிச்செய்தார். ஐந்தொழில் செய்வது இறைவனுக்கு ஒரு பாரமல்ல; அது எளிதே எனவும் கூறினர்.

## இரண்டாம் சூத்திரம் :

முதற்சூத்திரத்திலே ஆறு செய்யுட்களால் பதி யிலக்கணம் அருளிச்செய்த ஆசிரியர் இச்சூத்திரத்திலே

முப்பத்திரண்டு திருவிருத்தங்களால் பசு இலக்கணம் பாச இலக்கணங்களை அருளிச்செய்வாராயினர். அவை வருமாறு :—

19. ஆன்மவர்க்கமானது எண்ணில்லாதன; அழிவில்லாதன; ஆணவமலத்தால் மறைப்புண்டுகிடப்பன; அந்த மலம் பக்குவப்படுதற்கு இறைவன் அருளால் புண்ணியபாவங்களுக்கு ஈடான உடம்பைப்பொருந்தி உயர்திணை அஃறிணைகளாய்த் தோன்றுவன; அந்த உடம்பினாலே எல்லையில்லாத போகங்களைப் புசிப்பன; அதனால் மீண்டும் புண்ணிய பாவங்களை ஈட்டுவன; மீட்டும் மீட்டும் பிறப்பிறப்புக்களிற்பட்டுச் சுழல்வன; செம்பிற்களிம்புபோல அநாதியே பொதிந்துள்ள ஆணவமலம் பாகப்பட்டவிடத்து ஞானாசாரியனால் தீட்சை செய்யப்பட்டுச் சிவஞானத்தைப் பெற்று மலசத்திகெட இறைவன் திருவடியைப் பொருந்திச் சிவபோகத்தை நுகர்வன என்று சொல்லுவர் பெரியோர்.

ஆன்மாக்கள் எண்ணிறந்தன என்பதனால் மாயாவாதி மதமும் சிவாத்துவிதி மதமும் மறுக்கப்பட்டன. அழிவில்லாதன என்பதனால் கணபங்கம் என்னும் புத்தர் மதமும், ஆணவமலத்தால் மறைப்புண்டு என்பதனால் ஆன்மாச்சுத்தன் என்னும் ஐக்கியவாதி மதமும் மறுக்கப்பட்டமை காண்க.

ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கின்ற நிலை கேவலம்; புண்ணியபாவங்கட்கு ஈடான உடம்பைக் கூட்டிவைக்கின்ற நிலை சகலம்; ஆணவமலத்தின் வலிமையானது கெட்டு முத்தியிற்சேறல் சுத்தம் எனக் கொள்க.

இது பசு இலக்கணம் உணர்த்தியது.

20. ஆணவமலமென்பது எண்ணிறந்த ஆன்மாக்களையும் மறைப்பதாயினும் தான் ஒன்றாய் இருப்பது; ஆன்மாக்களுடைய பக்குவ அபக்குவங்களுக்கு ஏற்ப அந்தந்த ஆன்மாக்களையும் மறைத்து நின்று, தத்தம் பரிபாகமான காலவரையறைகளிலே நீங்குவதாயுள்ள எண்ணிறந்த சத்திகளையுடையது; (இருளானது எல்லாப் பொருளையும் மறைக்கும் தன்மையுடையதாயினும் தன்னைக்காட்டி நிற்கும்; இது எல்லா ஆன்மாக்களையும் மறைத்துநின்று அவைகளையும் காட்டாமல் தன்னையும் காட்டாமல் நிற்பது ஆகையால்) இருளும் ஒளியே என்று சொல்லும்படி மிகவும் இருண்டமயக்கத்தைச் செய்வது; செம்புடன் கூடிய களிம்பானது அந்தச் செம்பு உள்ளபோதே அதனை மறைத்து உள்ளும் புறம்பும் கலந்து வெட்டுவாய்தோறும் நின்றாற்போல, ஆன்மபோதத்தோடு கலந்து மறைந்து நிற்கும் அழியாத தன்மையையுடைய அநாதிமலமாய் உள்ளது; ஆணவமலத்தைப் பக்குவப்படுத்தும் திரோதான சத்தியானது ஆன்மாக்களோடு நின்று அந்த ஆணவமலம் மறைத்தற்குத் துணை செய்து நிற்பது; ஆகலின் அந்தச் சத்தியை மலம் எனப் பெரியோர் உபசாரமாகச் சொல்லுவர். அப்படி மறைத்தற்குத் துணைசெய்து நிற்கும் திரோதானசத்திதானே பக்குவப்பட்ட உயிர்களைச் சிவனுடைய திருவடியைச் சேரும்படி செய்துநிற்கும் அருட்சத்தியாகவும் திகழும் என்க.

ஆணவமலம் நித்தமானது எனவும், ஆன்மாவை அது மறைத்துநிற்கும் முறைமையும், அந்த மலத்தைப் பாகம் வருவித்தற்குத் துணையாய் நிற்பது திரோதான

சத்தி எனவும், திரோதானசத்தியே திருவருட்சத்தியாக மாறிநின்று பக்குவப்பட்ட உயிர்களைச் சிவனுடைய திருவடியிலே கூட்டுவிக்கும் எனவும் கூறியது.

21. நினைத்தற்கு அரிய பரமசிவனுடைய பரா சத்தியாகிய திருவருளினாலே மகாமாயையிலிருந்து நாத தத்துவம் தோன்றும். அந்த நாத தத்துவத்தினின்று விந்து சத்தி தோன்றும். அந்த விந்துவிலே ஒளி மிகுந்த சதாசிவதேவர் தோன்றுவர். அது சாதாக்கிய தத்துவம். அச்சதாசிவதேவர்பால் மகேசர் தோன்றுவர். அது ஈசுரதத்துவம் எனப்படும். அந்த மகேசுரர் உருத்திரதேவரைக் கர்த்தாவாக உடைய சுத்த வித்தையை உண்டாக்குவர். அப்படித் தோன்றிய முறையிலே குடிலையினின்று நாதம் விந்து சதாசிவர் ஈசுரர் உருத்திரர் என்னும் ஐவரும், சிவம் சத்தி சாதாக்கியம் ஈசுரம் சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களினும் நிலைபெறுவர். முன்பு நாதத்திலே தோன்றும் என்று சொல்லப்பட்ட விந்துவினின்று சூக்குமை முதலிய வாக்குகள் நான்கும் தோன்றும் எனச் சிவாகமம் வல்ல பெரியோர் கூறுவர்.

சுத்த மாயையும், ஆணவமலம் திரோதான சத்தியாலே பரிபாகம் வருதல் காரணமாக அதனிடத்தினின்று தோற்றிய சுத்ததத்துவம் ஐந்தும், வாக்குகள் நான்கும் கூறப்பட்டது.

22. இனி, அசுத்த மாயையானது தனு கரண புவன போகம் என நான்குவிதமாயுள்ளது. அவை தாம் ஒன்றையொன்று ஒவ்வாத முறைமையினையுடையது; அழியாதது; ஒருமுதலாயுள்ளது; எக்காலமும்

காணப்படாதது; கன்மம் தொலையும் அளவும் ஆன்மாக்கள் எல்லாவற்றையும் விஷயங்களிலே அறிவை மயக்குவதாய் உள்ளது; சடமானது; சலனமற்றது; தோன்றி விரிந்துள்ள தன்னுடைய காரியமாகிய முப்பத்தொரு தத்துவத்தினும் வியாப்தத்தை உடையது. அச்சகலமும் தோன்றின அடைவிலே தானும் ஒக்கக் கூடிநின்று, அந்தத் தத்துவங்கள் ஒடுங்கவருகின்ற சங்கார காலத்திலே அக்காரியரூபத்தைப் பற்றிநின்ற ஆன்மாக்கள் எல்லாம் அங்குரம் முதலியன வித்தினிடத்து அடங்குமாறுபோலப் பொருந்துவதற்கு இடமாய், ஆன்மாக்கள் உள்ளபடி காணுமல் பொய்யை மெய் என்றுகாண மயக்கும் மலமாய், சிவபிரான் அநுக்கிரகத்தால் நிலைபெற்றிருக்கும்.

23. இந்த மாயைதான் எதற்கு? என்று கேட்பாயானல், பிரபஞ்சத்துக்கு மாயை ஒரு நிலைக்களமாம் என்க. அவ்வாறு நிலைக்களமாக மாயை என ஒன்று வேண்டுமோ? சிலந்திப்பூச்சியினிடத்து நூல் தோன்றி ஒடுங்கினாற்போலவும், கடலிலே அலைகள் தோன்றி ஒடுங்கினாற்போலவும், வானத்திலே மின்னல் இடி முதலியன தோன்றி ஒடுங்கினாற்போலவும் கர்த்தாவினிடத்திலே பிரபஞ்சம் தோன்றி ஒடுங்கும். ஆதலால், இறைவனே நிலைக்களம் என்று கூறுகின்றாய்; ஆனல் அசித்தாகிய பிரபஞ்சம் சித்துப்பொருளாகிய கர்த்தாவினிடத்துத் தோன்ரு; அது எதுபோல? என்னில், பொன்னினிடத்திலே களிம்பு தோன்றுதல் இல்லை அது போல என்க.

இனி, மாயையானது நிலைபெற்றுள்ளது, அதுவே போதும்; வேருக ஒரு கர்த்தா எதற்காக? என்னில்,

மாயையானது சடப்பொருள் ஆகலின், தானே தனு முதலியவைகளாகப் பொருந்தமாட்டாது. அக் கர்த்தாவும் இம்மாயையைக் கொண்டேயன்றி ஒன்றை உண்டாக்கமாட்டார். ஆனால் கர்த்தா சத்தியற்றவர் ஆவார் என்று நீ சொல்லின், அந்த மாயையும் கர்த்தாவைப் போல என்றும் அழிவில்லாததே; ஆகலின், இறைவன் புதிதாக ஒன்றை உண்டாக்கிக்கொள்ள வேண்டுவதில்லை. கர்த்தா அந்த மாயையை விரியப் பண்ணி எல்லாவற்றையும் உண்டாக்குவர்; எல்லா முதன்மையும் உடையவர் அவர் ஆகலான் என்க. எனவே, மாயையானது கர்த்தாவுக்கு முதன்மையைக் கொடுத்தது எனக்கூறுதல் அறிவுடையவர் கூற்றன்று என்பர் பெரியோர்.

இது சிவாத்துவிதி, மாயாவாதி முதலியோரை மறுத்து **மாயை உண்டு** என்பதை வலியுறுத்தியது.

24. இறைவனே உலகத்தைப் படைத்தான்; ஆனால், இங்ஙனம் படைக்கப்பட்ட பிரபஞ்சத்தை ஒருபடியாகப் படையாமல் பறவை, பசு, மனிதர் முதலிய பலவகையாகப் படைப்பதற்குக் காரணம் என்ன? என உலகாயதன் கேட்பானாயின், அதற்கு ஆன்மாக்கள் முன்செய்த கன்மத்துக்கு ஈடாக எனப் பெரியோர் கூறுவர். முன்செய்த கன்மத்துக்கு ஈடாக எனக்கூறின் கர்த்தா எதற்காக? என நிரீச்சுர சாங்கியன் கூறுவானாயின், கன்மம் சடமானது. கர்த்தா அந்த உடம்பு முதலியவற்றைப் படைத்தது ஆன்மாக்கள் முன்பு ஈட்டிய கன்மபலத்தை அநுபவித்துத் தொலைத்தற்பொருட்டேயாம். முன்பு ஈட்டிய கன்ம பலத்தை ஒரு உடம்பிலே நின்று அநுபவிப்பது

ஆன்மாவானால், ஆன்மாத் தானே புண்ணிய பாவங்களின் முறைமைக்கு ஏற்ற உடம்பைப் பொருந்தும். கர்த்தா வேண்டுவது இல்லை? வினை அறிவில்லாதது. மாயையும் அறிவில்லாததே. ஆகலின் கன்மம் தானே உடம்பைத் தரவல்லதன்று. மாயையும் உடம்பு முதலியனவாகத் தானே உளவாகமாட்டாது. வினைப்பயனை அநுபவிப்பது உயிர்; ஆயினும், அவ்வுயிர் வினைக்கு ஏற்ற உடம்பு முதலியவற்றை எடுத்துக்கொள்ளும் ஆற்றல் இல்லாதது. உடம்போடு கூடினாலன்றி ஒன்றை அறியும்தன்மையில்லாத உயிருக்குச் சடமான மாயாகாரியத்தின் தொகுதியைக் கூட்டி உபகரிக்கும் முதல்வன் இன்றியமையாது வேண்டப்படுவன் என அறிக.

இது கர்த்தா ஆன்மாக்களினது கன்மத்துக்கு ஈடாக மாயையினின்று தனு கரணம் முதலியவற்றை உண்டாக்குவன் எனக் கூறியது.

25. உம்முடைய இறைவன் ஆன்மாக்களுக்குத் துன்பம் மிகும்படி இவ்வுடல் முதலியவற்றைக் கூட்டியது போக்குதற்கு அரிய வினைப்பயன்களை நுகர்தற் பொருட்டோ? அங்ஙனமே ஆகட்டும். ஆனால் ஆன்மாவை முற்படப் பொருந்தியது கன்மமோ? அன்றிச் சொல்லப்பட்ட மாயைதானோ? முன்பு ஒரு வகைத் தொடக்குமில்லாத ஆன்மாவை இவை பற்றத் தான் காரணம் யாது? என்னில், ஆன்மா என்று உண்டு! அன்றே ஆணவமலம் உண்டு. அப்படியாயின் மாயையும் கன்மமும் எப்போது உண்டாயின? என்னில், நெல்லினிடத்து உண்டான தவிடும் உமியும் அந்நெல்லுக்கு அநாதியே சம்பந்தம் உளவானாற்போல

ஆணவமலம் உண்டாகவே மாயை கன்மங்களும் அநாதியிலேயே உளவாயின என்று சிவாகமங்கள் சொல்லுவனவாம்.

ஆன்மாவுக்கு அரிசியும், ஆணவ மலத்துக்குத் தவிடும், மாயைக்கு உமியும், கன்மத்துக்கு முளையும் இங்கே உவமானமாம் என்று அறிக. இதனை,

"ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காணும் முளைக்குத் தவிடுமி ஆன்மாவும்
தாணுவை ஒவ்வாமல் தண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே"

எனவரும் திருமந்திரத்தால் (2192) அறிக.

26. அசுத்தமாயையினின்று அனந்ததேவநாயனார் திருவருளால் ஆசைமிகுவதற்குக் காரணமான கலை காலம் நியதி வித்தை அராகம் என்னும் ஐந்தும் தோன்றும். சீகண்ட வுருத்திரரால் முன்பு சொன்ன கலையிலே மூலப்பிரகிருதி தோன்றும். அதினின்றும் குணங்கள் தோன்றும். புத்திதத்துவத்தில் அகங்காரம் தோன்றும், அகங்காரம் தைசதம் வைகாரி பூதாதி என மூன்று வகைப்படும். தைசத அகங்காரத்தி னின்றும் மனமும் ஞானேந்திரியமாகிய சோத்திரம் முதலிய ஐந்தும் தோன்றும். பிரகிருதிதானே சித்தமும் புத்தியுமாய் நிற்கும் என அறிக.

27. வைகாரியகங்காரத்திலே இராசத குணத்தைப் பொருந்தி நிலைபெற்ற கன்மேந்திரியங்களாகிய வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் ஐந்தும் தோன்றும். பூதாதியகங்காரம் தாமதகுணம் மிக்க

சத்தம் முதலிய தன்மாத்திரை ஐந்தையும் தோற்றுவிக்கும். தன்மாத்திரைகளில் ஐம்பூதங்களும் தோன்றும். ஆகாயம் முதலிய பூதங்களிலே சத்தம் முதலிய குணங்கள் ஒவ்வொன்றும் மிகுதியாகப் பொருந்தி நிற்கும். அப்பூதங்கட்கு உரிய அதிதெய்வங்களும் சதாசிவர் முதலாகப் பிரமன் ஈறாக உள்ளனர். ஒடுக்கமும் முன் உதித்த முறையேதான் என்று கூறுவர் பெரியோர்.

28. கன்மமலமானது ஆன்மாக்கள் பொருந்தும் உடம்புக்கு ஒருகாரணமாக உள்ளது; நானுவிதமான போகங்களையுடையது; நாசத்தையும் தோற்றத்தையும் வித்தும் முளையும் போல உண்டாக்குவது; ஆகலின் அது தொன்றுதொட்டு வருவதாயுள்ளது; பலவிதப் படுவது; படைப்புக்காலத்து உடம்பு எடுக்குமிடத்துச் சூக்குமமாய் ஆன்மாக்கள் தோறும் செல்வது; மன் வாக்குக்காயங்களால் உண்டாக்கத்தக்க முறைமையினை உடையது; ஆன்மாக்களின் புத்தியை அடைந்து நிற்பது; இன்பதுன்டங்கள் உண்டாவதற்குக் காரணமான புண்ணிய பாவங்களாகப் பொருந்துவது; ஒடுங்குங்காலத்திலே அந்தமாயையிலே ஒன்றுபட்டுப் பொருந்துவதாகிய தன்மைகளை யெல்லாம் பொதுவாக உடையது எனச் சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளமை காண்க.

29. கன்மத்தின் வழியானது நல்லசாதி வாழ்நாள் போகநுகர்ச்சி என மூவகைப்படும். இவை ஆன்மாவிலே கலத்தல் தொன்றுதொட்டு நிகழ்வது. முறையிலன்றி நுகர்வது அரிதாயினும் ஈட்டிய அந்த முறையிலே கூடாமல் கன்மத்தின் வன்மை மென்மைகட்கு ஏற்ப மாறியும் வந்து கூடும். வினைப்பயன்கள்

தெய்வத்தால் வருதல், பிறரால் வருதல், தன்னுல்வரு தல் என மூன்றுதிறப்பட்டு அறிவுடைய பொருள்கள் வாயிலாகவும் அறிவில்லாத பொருள்களின் வாயிலாக வும் சுகதுக்கங்களாகப் பொருந்தும். இப்படி நன்மை தீமைகளைச்செய்துவரும் ஆன்மாக்கள்•அந்தக் கன்மங் களை நுகரும் முறையிலே மேலும் பிறப்புக்கள் உண் டாதற்பொருட்டான கன்மம் வந்து பொருந்துதல் உடைத்தாம்.

30. முன்பு நான் ஈட்டிய கன்மம் இப்போது புசிக்கப்பட்டது; ஆயின் மேலும் ஒரு செனனம் உண்டாவதற்கு உரிய கன்மம் யாது? என்னில், இப் போது புசிக்கப்படும் காலத்தே உண்டான நன்மை தீமைகளால் விளைந்தவினை என அறிவாயாக. அங்ஙனம் இத அகிதங்களால் உண்டான எல்லா வினைகளும் முன்பு உளதாகிய புண்ணிய பாவங்களின் தொடர்ச்சி யேயாம் என்னில், நான் என்னும் செருக்குத்தானே மேலும்மேலும் பிறப்புண்டாதற்கு முதிர்ந்த பயனுகிய கன்மமாம் எனப் பெரியோர் கூறுவர். ஒரு கன்மம் தானே அறிந்துசெய்வினை, அறியாமற்செய்வினை என இரண்டு வகைப்படும். அவ்வினையும் இத அகிதமாம். அந்த இத அகிதங்களும் தப்பாமல் புண்ணிய பாவங் களாகப் பொருந்தும்.

31. அந்தப் புண்ணிய பாவங்களான இரண்டு வினைகளும் உடலாற்செய்வன, மனத்தால்நினைப்பன, மொழியால் சொல்லுவன என மூன்றினுலும் வருவன வாம். ஒன்ருல் செய்தவினை மற்ருென்ருல் தவிராது. ஆராயுமிடத்து அவ்வவ் வினைப்பயன்கள் தப்பாமல் வந்து பலிக்கும். அது புசியாமல் தவிராது. இருவினை

ARCHIVES

181.491
UMA
AR



களுள் ஒருவினையால் ஒருவினைக்கு விடுதலை உண்டு என்று வேத சிவாகமங்கள் கூறும். அந்த வேதாகமங்கள் சொன்ன முறைமையிலே செய்தால் கூடின பாவகன்மம் நீங்கும். அப்படிச் செய்யமாட்டாதவர்களுக்கு இந்தப் பாவங்கள் நீங்கும்படி எப்படி? என்னில், தான் செய்யும் ஆற்றல் இல்லாமற்போயினும் சில திரவியங்களைக் கொடுத்துச் செய்யவல்லார்களைக் கொண்டு செய்வித்துக்கொள்ளுகையாலே தான் செய்யாறுயினும் தனக்குப்பயனுகப்பலிக்கும். இது விலைக்குக்கொள்ளும் முறைமையினையுடையது. இப்படிச் சாந்திபண்ணுதிருப்பினும் அபுத்திபூர்வமாகப் பாவம் ஒழிகைக்கு ஏற்ற புண்ணியமும் சித்திக்கும். ஆனுல், இந்த முறையிலே பாவம் அடங்கலையும் போக்கிவிடலாமோ? என்னில், இறைவன் அருளிச்செய்த வேதாகமங்களிலே கூறிய முறைமையை அறிந்து தக்க பிராயச்சித்தம் செய்தால் மிகுதியான பாவம் ஒழியும். ஒழியாது எஞ்சிநின்ற கன்மம் புசிக்க வேண்டுகையாலே மேலும் உடம்பு எடுத்தற்குச் சம்பந்தமாம் என்க.

மனவாக்குக் காயங்களால் உண்டான கன்மங்களாவன :– அருள்நினைவு, பொறை, பிறர் பொருள் விரும்பாமை, செய்ந்நன்றி மறவாமை, அழுக்காறு இன்மை, அவாவறுத்தல், பிறர் துன்பம் கண்டு இரங்குதல், பிறருக்கு நம்மினும் அறிவு செல்வம் அழகு வீடுபேறு இவை கிடைத்தல் வேண்டும் என நினைத்தல் ஆகிய இவைகளெல்லாம் மனத்தால் விளையும் புண்ணியங்களாம். இவைகளுக்கு மாறுபட நினைப்பதெல்லாம் மனத்தால் விளையும் பாவங்களாம். இனி, வாக்கினுல் உண்டான கன்மங்கள் ;– தர்மம் ஞானம் இவைகளை

201580

எடுத்துக்கூறுதல், புறங்கூறுமை, உண்மையே கூறுதல், நூலுரை கூறல், இனியன கூறல், கடுஞ்சொற் கூறுமை, வேதாகமங்களை ஓதுதல், மந்திரங்களை விதிப்படி கணித்தல், பயனிலசொல்லாமை முதலியன வெல்லாம் வாக்கினால் உண்டாகும் புண்ணியங்கள். இவையிற்றுக்கு மாறுபட்டன எல்லாம் வாக்கினால் விளையும் பாவங்களாம். இனிக் காயத்தினால் உண்டாகும் வினைகளாவன :— அரிய தவங்களைச் செய்தல் (அஃதாவது சரியை கிரியா யோகங்கள்), பூசைசெய்தல், ஓமஞ்செய்தல், பகுத்துண்ணுதல், நந்தனவனம் பூங்கா முதலிய வைத்தல், பிறர்மனை விழையாமை, குளம் வெட்டுதல், கிணறு வெட்டுதல், அறச்சாலை பள்ளிக்கூடம் வைத்தல், திருக்கோயில் எடுத்தல், மடங்கட்டுதல் இவைகள் காயத்தால்செய்யும் புண்ணியங்கள். இவற்றுக்கு மாறுபாடாகச் செய்வன எல்லாம் தீமைபயக்கும் பாவங்களாம் என்க.

32. இனி, மலங்களின் பெயரும் தொகையும் கூறத் தொடங்குகின்றார். அறியாமை மிகுதற்கு ஏதுவான ஆன்மாக்கள்தோறும் அநாதியிலேயே கூடி நிற்கும் சகசமலமாகிய ஆணவமலம் ஒன்று; அந்த ஆணவமலத்தைப் பொருந்திநின்று பக்குவத்தை மிகுதியும் உண்டாக்கும் திரோதானசத்தி ஒன்று; தனு முதலியவைகட்குக் காரணமாகச் சொல்லப்பட்ட மாயாமலம் ஒன்று; புண்ணிய பாவங்களாக விரிந்த கன்மமலம் ஒன்று; தனு கரண புவன போகங்களாய் நடைபெறும் தொழில்நிறைந்த மாயா காரியமான மாயேயமலம் ஒன்று ஆக மலங்களின் எண்ணிக்கை ஐந்து என்பர். இந்த ஐந்து மலங்களும் நீங்கப்பெறுமல் ஆன்மாக்கள் திருவருட்பேறு அடையாவாம்.

மல்மாவது அழுக்கு. "மலங்களைந்தாற் சுழல்வன் தயிரிற் பொரு மத்துறவே" என்பது திருவாசகம். இதனுள் மலங்கள் ஐந்து என அருளிச்செய்தமை காண்க.

33. இனி, கேவலநிலை சகலநிலை சுத்தநிலை என்னும் மூன்று நிலைகளையும் உணர்த்தத்தொடங்கிய ஆசிரியர் முதலில் கேவலநிலையை உணர்த்தி, அதன் பின்னர் மூலமலம் என ஒன்றில்லை என்னும் வாதி களுக்கு மலம் உண்டு என்பதனையும் வலியுறுத்திக் காட்டுகின்றார்.

எண்ணிறந்த உயிர்களெல்லாம் மூன்று அவத்தை யைப் பொருந்தி அழுந்துவன. அதனைக் கேவலா வத்தை சகலாவத்தை சுத்தாவத்தை என்று பெரியோர் கூறுவர். அவ்வுயிர்கள் இவ்விடத்தில் கலையாதி தத்து வங்களோடும் கூடி அறியப்பட்ட ஒருநினைவும் ஒரு காட்சியுமில்லாமல், அறியாமையாகிய ஆணவமலம் ஒழிய வேறொன்றும் இல்லை என்னும் இயல்புடைய தாய், அறிதற்கு ஏதுவாகிய கருவிகள்கூடா ஆகை யாலே அவ்விடத்து ஒருபொருளையும் அறியக்கூடாமல் இருளைப் பொருந்திய விரிந்த கண்கள் அவ்விருளின் வடிவு தானாய் நின்றாற்போல் ஆணவமலம் தானாய், அதனைவிட்டுச் சிறிதும் நீங்கும்முறைமை இல்லையாய், அழியாத வியாபகமுமாய் அவ்விடத்து நிற்கின்றது கேவலாவத்தை என்று திவ்விய ஆகமங்கள் கூறு வனவாம்.

எனவே, மாயா கருவிகளாயுள்ள காரியமாயையும் நீங்கி ஆணவமலத்தால் மறைப்புண்டு காரணமாயை தாரகமாக ஒடுங்கின அவதரம் என்க.

34. அப்படி ஆணவமலம் என்பது ஒன்றில்லை; மாயாமலம் கன்மமலம் என்னும் இரண்டே உள்ளன; ஆனால் இவை ஆன்மாக்களிடத்திலே வந்து பொருந்தினமுறை எங்ஙனம்? என்னில், இறைவன் சுத்தராயிருக்கப்பட்ட ஆன்மாக்கள் முன்னே செய்யப்பட்ட புண்ணிய பாவங்களின் முறைமைக்கு ஈடாக எல்லா உயிர்களுக்கும் உடம்புகள் முதலியவற்றைக் கொடுத்தருளுவர். இறைவன் வினைக்கு ஈடாகக் கொடுக்கப்பட்ட உடம்பு முதலியவற்றால் மீளவும் புண்ணிய பாவங்களை ஈட்டிப் பொருந்துதலால் அந்தக் கன்மங்களெல்லாம் துலையொக்கச் செவ்வே பொருந்தினவிடத்து அவ்விறைவன் தன் கருணையாலே அக்கன்மங்கள் எல்லாவற்றையும் போக்கியருளுவன். ஆதலால் பின்பு ஆன்மாக்களுக்கு அந்த இரண்டு மலங்களும் பொருந்தா; உயிர்களும் முன்பு உள்ள மிக்க பிரகாசத்தைப்பெறும் என்று ஐக்கியவாதியும் பாசுபதியும் கூறுவர்; இது சித்தாந்த வழக்கல்ல.

35. ஐக்கிய வாதியும் பாசுபதியும் இப்படிக் கூறுதல் பொருந்தாது. ஏனெனில், முன்னே சுத்தனான ஆன்மாவினிடத்திலே இந்த மாயையும் கன்மமும் வந்துகூடும் என்று சொன்னால் மாயாதேகம் உண்டாகக் கன்மம் முந்தியதோ? கன்மம் உண்டாக மாயாதேகம் முந்தியதோ? இவற்றுள் எது முந்தியது என்ற வினா உண்டாம். நிலைத்த பனைமரம் உண்டாவதற்கு விதைதான் முந்தியுண்டானதோ? அல்லது விதையுண்டாவதற்குப் பனைமரந்தான் முந்தியுண்டானதோ? சொல்: இந்தக் குற்றம் உண்டாமே. இது தாலபீச நியாயமாக மயக்கத்தைத் தரும். மேலும், சுத்தனான ஆன்மாவிடத்திலே நீ சொல்லிய, மாயாமலமும் கன்ம

மலமும் வந்து பொருந்தக் காரணம் யாது? அது ஆன்மாவின் இயற்கை; வேறு காரணமில்லை என்னில், இயல்பானது அழியாது. ஆகவே வீடுபேறு என்று வேதாகமங்களில் சொல்லப்பட்டது யாதாம்? அதனால் நீ சொல்லும் இவை ஒழியட்டும். இன்னும் சுத்தான்மாவை மாயா கன்மங்கள் இயல்பாகச் சென்று பொருந்துமாகில் முத்திபெற்ற இடத்தினும் மாயா கன்மங்கள் வந்து பொருந்துதல் வழக்காம். இதனைக் கொண்டே முத்தி என்பது இல்லையாக முடியும். அன்றியும், கலாதிகளாகிய தத்துவங்கள் இவனுக்கு அறிவை உண்டாக்குவதாகக் கூடிய பின்பு பெரிய பிரபஞ்சத்திலே ஆன்மாவினுடைய சொரூபம் விளங்காமற் போவானேன்? என்னில், மாயா கருவிகள் ஆன்மசொரூபம் தெரியாதபடி மறைத்துக்கொண்டு தன் வடிவை மிகுதியாக விளக்கிக்கொண்டிருக்கும் என்பாயாயின் இக்கலாதிகள் நீங்கின அதீதத்தினுள்ளே அறிவு பொருந்தும் முறைமை இல்லாமைக்குக் காரணமென்ன? அவ்விடம் அறியாமையாம் என்று நீ சொல்லிய இதனையே ஆணவமலம் என்று அறிவால்தெளிந்த பெரியோர் அறுதியிட்டுச் சொல்லுவர் என அறிக.

இது ஆணவமலம் இல்லை என்ற ஐக்கியவாதியை மறுத்து உண்டு என்று நிலைநாட்டியது.

36. இந்த ஆணவமலமானது தான் பக்குவம் ஆகுமளவும் உயிர்கட்கு வேறாயுள்ள பிரபஞ்சத்தை ஒரு பொருள் என்னும்படி அறிவித்துநின்று, தமக்கு வேறின்றிப் பரிபூரணமாய் நிற்கின்ற திருவருளை அறிவியாதபடியாலும், அந்தத் திருவருள் விளங்கும் காலத்திலே கர்த்தாவே சர்வமுமாய்நின்ற பழமையைத் தாம்

உணர்தலானும், திருவருள் பிரகாசிக்கின்ற அளவும் ஆன்மா என ஒருபொருள் இல்லையாகத் தானேயாய் நிலைபெற்று நிற்கும். மாயையும் கன்மமும் சிருட்டி காலத்திலேபற்றுவதும் சங்காரகாலத்திலே விடுவதுமா யிருக்கும். இந்த ஆணவமலமானது அப்படிப் பற்று வதும் விடுவதும் இல்லை. ஆதலால் மனத்தால் நினைத் தற்கரிய திருவருளைக்கொண்டு அறிதலன்றி ஆணவ மலம் ஒன்று உண்டு என்று ஒருவருக்கும் அறிய வொண்ணுது. ஆகையால் மலத்தின் உண்மைத் தன்மை உன்னுல் அறியப்படாது என்க.

ஆணவமலம் ஒன்று உண்டு என்னில், அது என் ணுல் காணப்படவில்லையே! என ஐக்கியவாதி மறுபடி யும் வினவினுக, அவனை மறுத்துத் திருவருளால் அறியப்படுவதன்றி அது உன்னுல் அறியப்படுவது ஒன்றன்று என இது கூறியது.

37. அங்ஙனம் சொல்லப்பட்ட ஆணவமலத்தைப் போக்குதற்பொருட்டுக் கர்த்தாவின் கருணையினுலே கலாதி முதலிய மாயா காரியங்கள் ஆன்மாக்களைப் பொருந்தும். தீபமானது தண்டு தகழி நெய் திரி முதலிய எல்லாவற்றுடனும் கூடிப்பிரகாசித்தாற்போல, சுத்தம் சுத்தாசுத்தம் அசுத்தம் என்று பின்னமாக உள்ள தத்துவங்களால் அவ்வுயிர்கட்கு அறிவு விளங்கும். அப்படி ஆன்மாவையும் கருவிகளையும் அந்த அருளே கூட்டிச் சீவிப்பிக்குமாகில் அவ்வருளை இவ்வான்மா அறிந்து பொருந்தாதோ? என்னில், அந்த ஆணவமலம் அருளை அறியாதபடி மறைத்து நிற்கும். இப்படி மாறு பட்டுவரும் ஆணவமும் மாயையும் ஆராயுமிடத்து இருளையும் வெளியையும் போல என்று உவமை

கூறும்படியாம். இப்படிப் பொருந்திப்போவது அநாதி முறைமையாம்.

இனிச் சகலாவத்தை நிமித்தமாக மூலாதாரத்திலே விளங்காநின்ற விந்துசத்தியினின்றும் சொல்லுதற்கரிய அறிவாயும் விளக்கமாயும் ஆன்மாக்களிடத்திலே அவ ரவர்களுக்குண்டான கன்மங்களுக்கு ஈடாக ஒப்பற்ற சூக்குமைவாக்குப் புறப்பட்டுத் துரியத்திற்செல்லும். துரியம் - உந்தித்தானம்.

இதனால் சகசமலமாகிய ஆணவமலம் நீங்குதற்கு ஆகந்துகமாகிய மாயாகன்மங்கள் வேண்டப்படும் என்றும், மாயாகாரியமான கலைமுதலிய தத்துவங்களை இறைவனே ஆன்மாக்களுக்குக் கூட்டியருளுவன் என்றும், அப்படிக்கூட்டியருளும் இறைவனைஆன்மா அறியாதபடி ஆணவமலம் மறைக்கும் என்றும் கூறிப் பின்பு கேவலம் நீங்கிய சகலாவத்தை நிகழ்தற் பொருட்டுச் சுத்தமாயையில் தோன்றிய வாக்குநாலில் சூக்குமை வாக்கானது மூலாதாரத்தைப் பொருந்திய விந்துவினின்றும் தோன்றும் என்னும் முறைமையும் கூறப்பட்டது.

38. இனி, பைசந்தி வாக்கானது அந்த நாதத் திலே தோன்றிச் சுழுத்தித்தானத்தைப் பொருந்தும். வெவ்வேறாய் வரும் அக்கரங்கள் தோன்றுகின்ற முறைமை தெரியாமல் தன்னுள்ளே ஒடுக்கி, மயில் முட்டையிலே சலமானது புறம்பே மயிலின் நிறமாய் வெளிப்பட்டுத் தோன்றச்செய்து உடைத்தால் சல மாய்த் தோன்றுமாறுபோலச் சித்தத்திலே அறிவாய் நிற்கும். அதுவே நினைவுமாத்திரமாய் நிற்பது.

மத்திமை வாக்கானது பிராணவாயுவினுடனே பொருந்தி வருகின்ற அந்த அக்கரங்கள் பொருந்திய சொரூபங்கள் எல்லாவற்றையும் அவற்றின் பொருள்களையும் புந்தியிலே ஒழுங்குபட நிறுத்தி, ஞானேந்திரியங்களின் முற்பட்டுவரும் செவிக்குக் கேளாமல் உள்ளே அறியத்தக்க தொனியாய்க் கண்டத்திலே முழங்கும்.

வைகரி வாக்கானது உதானவாயு சுழுமுனையிற் சேரும் பிராணவாயுவுடன் கூடுதலினாலே வந்த சத்தம் சொல்வோன் செவியிடத்தில் பொருந்தும்படி அவன் நினைந்த பொருளை வெளிப்படுத்தி நிற்கும்.

இவ்வாக்கு நான்கும் சுத்தாத்துவாவிலே சூக்குமமாகவும், மிச்சிராத்துவாவிலே தூலமாகவும், அசுத்தாத்துவாவிலே தூலதரமாகவும் சீவிக்கும் என அறிக. பைசந்தி சித்தத்தை அதிட்டித்து நின்று விளக்கும் என்க. இங்ஙனம் சொல்லப்பட்ட வாக்குகளுக்குத் தானமும் வடிவும் வருமாறு :--

சூக்குமைக்குத் தானம் நாபியடி. வடிவம் நாத தத்துவம். பைசந்திக்குத்தானம் உந்தி. வடிவு பிராண வாயு. மத்திமைக்குத்தானம் நெஞ்சும் கண்டமும். வடிவு பிராணவாயு. வைகரிக்குத்தானம் தாலுமூலம். வடிவு பிராணவாயுவும் உதானவாயுவும் என அறிக. வைகரிவாக்குக் காரியப்படுமிடத்து நாக்கு, உண்ணாக்கு, பல், உதடு, மூக்கு இவைகளோடு கூடிநின்று காரியப்படும் என்க. இங்ஙனம் சொல்லப்பட்ட இந்த வாக்குகள் நான்கும் தோன்றுதற்குக் காரணமாகப் பஞ்சமை என்று ஒரு வாக்கு உண்டு. அதற்குத்

தானம் மூலாதாரம். வடிவம் பிரணவ சொரூபம் என்றும் கூறுவர்.

இனி, இவ்வாக்குகள் காரியப்படுமிடத்துச் சாந்தி யாதீதம் முதலான கலைகள் ஐந்தும் பற்றுக்கோடாக நின்று காரியப்படும் என்பர். இவற்றுள், சூக்குமை வாக்குச் சாந்தியாதீதகலையும் சாந்திகலையும் பற்றாக நிற்கப் பராசத்தி திரோதசத்தியும் காரியப்படுத்தும். பைசந்தி வாக்கு வித்தியாகலை பற்றாகநிற்க, இச்சாசத்தி காரியப்படுத்தும். மத்திமைவாக்குப் பிரதிட்டாகலை பற்றுக்கோடாக நிற்க ஞானசத்தி காரியப்படுத்தும். வைகரி வாக்கு நிவிர்த்திகலை பற்றாகநிற்கக் கிரியாசத்தி காரியப்படுத்துமென்க. அன்றியும், பஞ்சமை வாக்குக் குப் பராசத்தியும் சாந்தியாதீதகலையும் எனக்கொள்க.

39. இந்த முறைமையிலே மேலே சொல்லப் பட்ட நாலு வாக்கினுலே சுத்தமாயையில் தோற்ற மாகச் சொல்லப்பட்டுள்ள சுத்தவித்தை ஈசுரம் சாதாக் கியம் சத்தி சிவம் என்னும் தானங்களிலே இருக்கும் ஐவராலே ஆன்மாக்கள் அறியும் அறிவுக்கு ஈடாகப் பரமசிவன் அருளினுலே கெடாமல் விளங்கும் ஞானம் அவ்வுயிருக்குப் பொருந்தும் என்று பெரியோர் சொல்லுவர். அஃது எப்படி? என்னில், நாதத்துவம் மூலாதாரத்தையும், விந்து நாபியையும், சாதாக்கியம் இதயத்தையும் அதிட்டித்துச் சூக்குமை முதலான மூன்றையும் பிரேரிக்கும். ஈசுரமும் சுத்தவித்தையும் தன்செவி பிறர்செவிக்குக் கேட்கும் வைகரி இரு விதத்தையும் கண்டத்தையும் முகத்தையும் அதிட்டித் துக்கொண்டு பிரேரிக்கும் என அறிக.

இனி, அசுத்த மாயையிலுண்டாகிய கலையானது அந்தச் சுத்த தத்துவத்திலே உள்ள சத்திதத்துவம் உதவியாகக்கொண்டு ஆன்மாவை மறைக்கப்பட்ட ஆணவமலத்தைச் சற்றே நீக்கி இந்திரியங்களின் பயனாகிய விடயங்களை ஆன்மாப் பொருந்தும்படி கிரியா சத்தி பொருந்தும் முறைமையை விளக்குவிக்கும். சுத்தமாயையிலே தோற்றமாயுள்ள சுத்தவித்தையை உதவியாகக்கொண்டு, அசுத்தமாயையில் தோற்றமாயுள்ள வித்தையானது இந்திரியங்களின் விடயங்களைப் புத்தி கிருகித்துத் தன்பாற் கொடுக்க, தான் ஆன்ம ஞானத்துக்கும் புத்திக்கும் இடையே நின்று, விடய ஞானத்தை ஆன்மாப் பொருந்தி அறியும்படி அந்த ஆன்மாவுக்கு அந்தரங்கமாகப் பொருந்தும். இவை தாமாகச் செய்ய வல்லனவோ? என்னில், சுத்தனுடைய சத்தியைக் கூடிநின்றே செய்வன என்க.

கலை, வித்தையினும் ஆன்மாவுக்கு அந்தரங்கமான கருவியாம். ஆகலின், போகங்களுக்கு ஆதாரமாயிருக்கும். மட்குடமானது அக்கினியிலிட்டுக் காய்ச்சியபொழுது மெழுகு கூட்டுகைக்கு யோக்கியமாம். அதுபோல, ஆன்மா கலையைப் பொருந்தினபொழுது போகங்களைப் புசித்தற்கு யோக்கியமானவன் என்க. கலையாலே கிரியாசத்தி விளங்கவே ஞானசத்தியும் விளங்கும். ஆயினும், அந்த ஞானசத்தி ஒரு காரணம் கூடாமல் விடயங்களைக்கிருகிக்கமாட்டாது. ஆதலால், விடயங்களை அறிவது பொருட்டாகக் கலையினின்றும் வித்தை தோன்றிற்று. ஆன்மா இந்திரியங்களைப் பொருந்திச் சத்தாதி விடயங்களைக் கிருகிக்குமிடத்துப் புத்தி கருவியாம். புத்தியிற் பொருந்திய விடயங்களை அறியுமிடத்து வித்தை கருவியாம் என அறிக.

சிவசத்திகள் சுத்ததத்துவங்களைக் காரியப்படுத்த, சுத்ததத்துவங்கள் அசுத்த மாயையிலே கலாதிகளைக் காரியப்படுத்த, அவையிற்றினாலே ஆன்மாக்களுக்கு அறிவுண்டாம் என அறிக. அஃதாவது கிரியாசத்தி சத்தி தத்துவத்தை எழுப்ப, சத்தி தத்துவம் காலம் நியதி கலைகளை எழுப்ப, கலையானது தழலிற் பொடி நீங்கினாற்போல ஆணவமலத்தைச் சிறிதே நீக்கி அந்தக் கலையே வடிவாக ஆன்மாவுக்குச் சிறிது அறிவை உண்டாக்க, ஞானசத்தி சுத்தவித்தையை எழுப்ப, சுத்தவித்தை வித்தையை எழுப்ப, வித்தை ஆன்மா வுக்கு அறிவை உண்டுபண்ணும் என்க.

40. சொல்லுதற்கரிய **அராக** தத்துவமானது ஆன்மாக்களுடைய கன்மத்துக்கு ஈடாகப் பெற்றதிலே ஆசையை மிகுவிக்கும். நியதி தத்துவமானது அரச ருடைய ஆணை ஒருதொழில் செய்தவருக்கு அதற்கு ஏற்ற பயனை அநுபவிக்கும்படி செய்யும் முறைமை போல, ஆன்மாக்கள் முன்பு விருப்பமுற்றுச் செய்த கன்மங்களை நிச்சயம்பண்ணி நிறுத்தும். இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் காலதத்துவமானது சிவசத்தியுடன்கூடிநின்று இறந்தகால எல்லையையும், நிகழ்கால பலத்தினையும், எதிர்காலத்துப் புதுமையை யும் பொருந்துவிக்கும்.

கலையினாலும் வித்தையினாலும் பிரகாசிக்கப்பட்ட கிரியாசத்தி ஞானசத்திகளையுடைய ஆன்மாவுக்குப் போகத்தில் ஆசையை எழுப்புதல் காரணமாக வித்தை யினின்றும் அராகம் தோன்றியது. இனி, விடயந் தானே ஆசையை எழுப்பாதோ? அராக தத்துவம் வேண்டுமோ? என்னில், விடயங்களை உள்ளபடி

அறிந்துவைத்தும் விருத்தருக்கு, அவற்றில் ஆசையற்றிருக்கிறது; ஆகையால், விடயம் ஆசையை எழுப்ப மாட்டாது. ஆனால், புத்திகுணமாகிய வைராக்கியம் எழுப்பாதோ? என்னில், அது புத்தியின் வாசனை. ஆதலால், ஆன்மாக்களை விடயங்களிலே செலுத்த மாட்டாது. பாண்டத்திலே பற்றிய பெருங்காய வாசனையானது ஒரு காரியத்துக்கும் உதவாது என்பதை நாம் அறிவோம். இன்னும் அந்த வாசனைதான் ஒருகாலத்திலே தனித்தனியே அளவற்ற ஆசையை எழுப்பும். அவற்றை இவன் ஒருகாலத்தும் அறிய மாட்டான். ஆதலால், ஆசையை எழுப்புதற்கு அராக தத்துவம் வேண்டும்.

இனி, நியதி இல்லாதபோது ஒருவன் செய்த கன்மத்தை ஒருவன் அநுபவித்தல் கூடும். அரசனுடைய ஆணை பாதுகாவாதபோது ஒருவன் செய்த போகத்தைப் பலமுடைய ஒருவன் அநுபவிப்பான் என்பதும் நாம் அறிந்த செய்தியே. ஆனால், கன்மம் தானே நியமிக்கமாட்டாதோ? என்னில், அது போகத்தைக் கொடுக்குமேயன்றி நியமிக்கமாட்டாது. இனி, சிவசத்திதான் நியமிக்கமாட்டாதோ? என்னில், அதுவும் யாதானும் ஒரு தத்துவத்தை இடையிட்டன்றி ஒரு காரியத்தைச் செய்யமாட்டாது; அவ்வாறு செய்யின் மற்றொரு தத்துவமும் வேண்டாவாய் முடியும். ஆகையால், நியதி தத்துவமே நியமிக்கவேண்டும். இவனுக்கு விருப்பமில்லாதிருக்கவும் சூலை முதலிய நோய்களைத் தப்பாதுபுசிப்பித்தல் நியதி தத்துவமேயாம்.

இனி, பாலப்பருவம் யௌவனபருவம் விருத்தப் பருவம் முதலியவைகளை உண்டுபண்ணுவதாலும்,

பிறப்பு இறப்புக்களை உண்டாக்குதலாலும், பருவ காலங்களில் அவ்வப்பயன்களைத் தப்பாமல் விளைவித்து நிற்றலாலும் **காலதத்துவம்** வேண்டும். இதனால் கால தத்துவம் என்பது ஒன்றில்லை என்னும் உலகாயதன், புத்தன் கொள்கைகள் வலியுறுமாறில்லை. நையாயிகன் வைசேடிகன் என்னும் இவர் காலம் நித்தியம் என்பர். இறப்பு நிகழ்வு எதிர்வு எனக் காலம் மூவகைப்படுத லாலே அவர் கொள்கையும் வலியிலதாயிற்று. அதற்கு இன்னும் 'நித்தியமாய் உள்ளது ஒன்றாய் இருத்தல் வேண்டும்' ஆதலாலும், 'சடமாய்ப் பலவாய் இருந் தால் கடாதிகளைப்போல அழிவுறும்' ஆதலாலும் அது பொருந்தாது என்க. சடம் தானாய்ச் செயற்படாது ஆகலின் காலேசுரவாதி கொள்கையும் வலியற்றது. ஏன்? எனில், சிவசத்தியுடன் கூடி நின்று பொருந்து விக்கும் என்றதனால் எனக்கொள்க.

இப்பகுதியில் காலம் நியதி அராகம் என்னும் மூன்றின் காரியப்பாடு விளக்கப்பட்டது.

மாயையினின்று முறையே காலமும் நியதியும் கலையும்; கலையில் வித்தையும், வித்தையில் அராகமும் தோன்றும் எனச் சிவஞான சித்தியாரில் கூறப்படு கிறது. இந்த நூலிலே இரண்டாம் சூத்திரம் 8-வது செய்யுள் வசனத்திலே 'அசுத்த மாயையிடத்திலே... ஆசை மிகுதற்குக் காரணமான கலை காலம் நியதி வித்தை அராகம் என்னும் ஐந்தும் தோன்றும்' எனக் கூறப்பட்டுள்ளது.. சிவஞானபாடியத்துள் சூத்திரம் 2, அதிகரணம் 2-ல் உள்ள பகுதி; "அற்றேல், தோற்ற முறைபற்றிக் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்று எடுத்துக்கோடலும், தொழிற்பாட்டுமுறைமை

பற்றிக் கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்று எடுத்துக்கோடலும் பொருந்தும். சிவப்பிரகாசத்தில், 'அருத்திமிகும் கலை கால நியதியுடன் வித்தை அராக மிவை' எனக் கலையின் பின்னுகைக் கால நியதிகளை வைத்தவாறு என்னை? எனின், செய்யுளாகலின் முறை பிறழவைத்தார் என்பர் ஒரு சாரார். அற்றன்று; 'கலா தத்துவம் காலமும் நியதியும் தனக்குத் துணைக்கருவி யாகக்கொண்டு முதற்காரணமாய் நின்று வித்தை அராகம் முதலிய தத்துவங்கள் எல்லாவற்றையும் தன் பால் நின்றும் தோற்றுவிக்கும்' எனத் தத்துவப் பிரகாசம் என்னும் வடநூலுள் ஓதுதலின், அஃது உணர்ந்துகோடற்கு அந்த முறைவைத்தார் என்க. மிருகேந்திரத்தில் கூறியதூஉம் இதுபற்றி என்று உணர்க. சிவப்பிரகாசத்தில் 'வித்தை யராகங்களும் மாயைதனி லாகும்' என்றது பரம்பரையான் மாயை முதற்காரணமாதல்பற்றி என்றுணர்த்துவார், 'உடன்' என்று ஒடுக்கொடுத்துப் பிரித்தோதினர் என்பது. சிவஞானசித்தியில் 'விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை - முந்திடு மராக மாதி முக்குண மாதி மூலந் - தந்திடும்' என்றதூஉம், விந்து மோகினி மூலப்பகுதி கள், சூக்கும கலாதி முக்குணம் ஒழித்து ஒழிந்தவற் றிற்கும் பரம்பரையான் முதற்காரணமாதல்பற்றி என் றுணர்க. ஆண்டு 'அராகமாதி' என்றது 'வைகரியாதி' என்றதுபோலச் சங்காரமுறைபற்றி; இங்ஙனமாகலின், யாண்டும் முரணுமை அறிக" என ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் அருளிச்செய்தமை காண்க.

41. கலாதிகள் ஐந்தினுலும் பந்திக்கப்பட்டுச் சோத்திரம் முதலியவற்றுல் பொருந்தப்பட்ட விடயங் களைப் புசிக்கவரும் அவதரத்திலே பும்சத்துவம்

என்னும் ஒரு மலம் உண்டாம். அதனால் அவ்வான்மாப் புருடதத்துவம் எனப் பெயர்பெறும் என்பர் பெரியோர். மெய்யின் கூறுபாடாகிய ஐவகைக் கலைகளையும் சோதிக்குமிடத்து இந்தப் புருடதத்துவத்துக்கும் சுத்தி பொருந்தும் முறைமையினைச் சிவாகமங்கள் கூறுவனவாம். ஆன்மாக்களுக்குப் போகத்தைச் செய்யும் கருவிகளின் தொடர்ச்சியை இங்கே தோற்றுவிப்பதான குணத்தின் கூட்டமாகக் கடவுளாற் செய்யப்படும் பிரகிருதியானது பிரிவின்கண் மூன்று குணமாம். அவை சாத்துவிகம், இராசதம், தாமதம் எனப் பெயர்பெறும். அவற்றுள் ஒவ்வொன்றும் இரண்டு இரண்டு குணங்களைப் பொருந்துவதாம் என்க.

இனி, ஆசாரியன் தீட்சை பண்ணுமிடத்துக் கலாசோதனை செய்யவேண்டும். ஆகையால், அதற்கு நிவிர்த்தி முதலான கலைகள் ஐந்தினையும் சீடன் சரீரத்திலே ஐவகைப்படுத்துச் செய்தல் மரபாம். அவை வருமாறு :-

மூலாதாரம் தொடங்கி உந்திக்குமேல் எண்விரல் அளவு நிவிர்த்திகலைக்கு எல்லை. அதற்கு மண்டலம் அக்கினிமண்டலம். ஆதாரம் மூலாதாரமும், சுவாதிட்டானமும். அக்கரம் அகாரம். பிரகாசம் சொரிதழற்கொழுந்து. மலம் மாயாமலம். அவத்தை சாக்கிரம். மாத்திரை மூன்று. மந்திரம் இருதயமும், சத்தியோசாதமும். பதம் ஓம் நமோ முதல் மகாதேவ அந்தமாகவுள்ள இருபத்தெட்டு. வன்னம் க்ஷகாரம் ஒன்று. புவனம் காலாக்கினி புவனம்முதல் வீரபத்திரர் புவனம் ஈருக நூற்றெட்டு. தத்துவம் பிருதிவி. தெய்வம் பிரமன். தொழில் சிருட்டி என்பர்.

இனி, பிரதிட்டாகலைக்கு இருதயம் தொடங்கிக் கண்டம் அளவும் எல்லை. அதற்கு மண்டலம் ஆதித்த மண்டலம். ஆதாரம் மணிபூரகம். அக்கரம் உகாரம். பிரகாசம் அக்கினியும் ஆதித்தனும் கூடிய பிரகாசம். மலம் கன்மமலம். அவத்தை சொப்பனம். மாத்திரை இரண்டு. மந்திரம் சிரசும் வாமதேவமும். பதம் மகேச்சுர என்பது முதல் அருபிங் அருபிங் முடிவாக வுள்ள இருபத்தொன்று. வன்னம் ஊ முதல் ட ஈறாக வுள்ள இருபத்துநான்கு. புவனம் அமரேசம் முதல் சிகண்டி முடிவாகிய ஐம்பத்தாறு. தத்துவம் பிருதிவி நீங்கலாகவுள்ள ஆன்ம தத்துவம் இருபத்துமூன்று. தெய்வம் விட்டுணு. தொழில் திதி என்பர்.

இனி, வித்தியாகலைக்குக் கண்டத்துக்கு மேல் தாலு மூலத்தளவும் எல்லை நான்கு அங்குலம் என்க. அதற்கு மண்டலம் ஆதித்தமண்டலம். ஆதாரம் அநாகதம். அக்கரம் மகாரம். பிரகாசம் மின்னல். மலம் மாயேயமலம். அவத்தை சுழுத்தி. மாத்திரை ஒன்று. மந்திரம் சிகையும் அகோரமும். பதம் வியாபிங் வியாபிங் முதல் த்யான ஹாராய இறுதியாகவுள்ள இருபது. வன்னம் ஔ முதல் வ அந்தமாகிய ஏழு. புவனம் புவனேசம் முதல் வாமம் முடிவாகவுள்ள இருபத்தேழு. தத்துவம் வித்தியாதத்துவம். தெய்வம் உருத்திரன். தொழில் சங்காரம் எனக்கொள்க.

இனி, சாந்திகலைக்குத் தாலு மூலத்துக்கு மேல் புருவமத்தியளவு முள்ள எல்லை நாலங்குலம். இதற்கு மண்டலம் சோமமண்டலம். ஆதாரம் விசுத்தி. அக்கரம் விந்து. பிரகாசம் விளக்கொளி. மலம் திரோதாயி. அவத்தை துரியம். மாத்திரை அரை. மந்திரம்

கவசமும் தற்புருடமும். பதம் நித்திய யோகினே என்பது முதல் வியோம வியாபினே என்பது இறுதியாக வுள்ள பதினொன்று. வன்னம் ஹ முதல் க்ஷ என்பது ஈறாக மூன்று. புவனம் வாமை முதல் சதாசிவபுவனம் ஈறாகப் பதினெட்டு. தத்துவம் சுத்தவித்தையும், ஈசுரமும், சாதாக்கியமுமாம். தெய்வம் மகேச்சுரன். தொழில் திரோபவம் என்பதாம்.

இனி, சாந்தியாதீத கலைக்குப் புருவமத்தியத்துக்கு மேல் மூன்று அங்குலம் எல்லை. இதற்கு மண்டலம் சோமமண்டலம். ஆதாரம் ஆக்ஞை. அக்கரம் நாதம். பிரகாசம் வானொளி. மலம் ஆணவமலம். அவத்தை துரியாதீதம். மாத்திரை கால். மந்திரம் நேத்திரமும் அத்திரமும் ஈசானமுமாம். நேத்திரத்தை நீக்கிச் சிவ எனவும் கொள்வர். பதம் பிரணவம் ஒன்றுமே. வன்னம் அ என்பது முதல் அ: என்பது முடியப் பதினாறு. புவனம் நிவிர்த்தி முதல் அனாசிருதை ஈறாக வுள்ள பதினைந்து. தத்துவம் சத்தியும் சிவமும். தெய்வம் சதாசிவம். தொழில் அநுக்கிரகம் எனக் கொள்க.

இனி, வித்தியாகலையைச் சோதிக்குங்கால் வித்தியா தத்துவங்களான கலாதிகள் அத்தனையும் சோதனை பண்ணினதே புருடதத்துவத்துக்குச் சுத்தியாம் என்று நூல்கள் கூறும். காலம் நியதி கலை வித்தை அராகம் கூடின சமூகமே புருடதத்துவமாம் என அறிக.

42. குணம் எண்ணிறந்தன. அவை சாத்துவிகம் இராசதம் தாமதம் என்ற முறையே சாத்துவிக குணத்திலே பிரகாசமான ஞானமும், இலகுதையாகிய

மன மொழி மெய்களில் பிரவிர்த்தியின் மெத்தனவும் (லகுதை - நொய்மை), இராசதத்திலே முப்பொறி களின் மிகுத்த வியாபாரமும், அடர்ச்சியாகிய குரூர உரை குரூரசிந்தனை குரூரச்செயல்களும், தாமதத்திலே மிக்க கௌரவமாகிய மமதையும் அந்நியமாகிய தகாத காரியத்தைச் செய்யவேண்டும் என்னும் சங்கற்பமும் என்ற இவை ஒவ்வொன்றிற்கு இவ்விரண்டாக விளங்கியிடும். இவை ஒன்பது குணமும் ஒவ்வொரு உயிர்களிலும் கூடிநிற்கும். இம் மூன்று குணங்களுள் தாமதமானது நிறைந்த இந்திரியங்களின் விடயங்கள் எல்லாவற்றையும் கைக்கொண்டு மடங்கும். இராசத குணம் கொண்டாடப்பட்டு வரும் போகங்களை ஆன்மா கொள்கைக்கு இடமான வியாபாரத்தை யுடைத்தாம். சாத்துவிகம் போகம் புசிக்கைக்கு ஒருப் படுவிக்க ஒழியாத மிக்க பிரகாசமாயிருக்கும். புத்தி யானது எண்ணிறந்த விடயங்களைப் புசிக்கிறவிடத் தின் நிச்சயம் பண்ணுகின்ற ஒருமைப்பாடு பலவகை யும் உடையதாய்ப் பரமசிவன் அருளினாலே ஐம்பது பாவகத்தையும், விரிந்த நிலையில் அறுநூற்றுப் பன்னி ரண்டு பாவகத்தையும் பண்ணுவிக்கும் என்க.

இனி, பிரகாசம் லகுதை என்பவற்றைச் சாத்து விகத்தில் சாத்துவிகம் இராசதம் தாமதம், இராசதத் தில் இராசதம் சாத்துவிகம் தாமதம், தாமதத்தில் தாமதம் சாத்துவிகம் இராசதம் என ஒவ்வொன்றும் மும்மூன்று வகைப்பட்டு, ஒன்பதாக எண்ணப்பட்டு, இவ்வொன்பது குணமும் ஒவ்வொரு ஆன்மாவிடத் தும் கூடிநிற்கும் என்பர். அவை வருமாறு :-

சாத்துவிகத்தில் சாத்துவிகமாவது, துறவும் சாந்த மும் முத்தியில் மிகுந்ததாகமும் உடைமை. சாத்து

விகத்தில் இராசதம், துறவும் சாந்தமும் இடையிலே நழுவ முத்தியில் முயலுகை. சாத்துவிகத்தில் தாமதம், துறவும் சாந்தமும் முத்தியிலே முயலுகையுமின்றி விடயாந்தரங்களில் முயற்சியும் விருப்பமும் உடைய நிலையாம்.

இராசதத்தில் இராசதம், தன்மத்திலே ஆசையோடும் கூடி இடைவிடாமற் செய்தல். இராசதத்தில் சாத்துவிகம், யாவருக்கும் கிருபையோடே அறங்களைச் செய்கை. இராசதத்தில் தாமதமாவது இவற்றை இகழ்தலும், பாவத்தொழில்களைச் செய்தலும் என அறிக.

தாமதத்தில் தாமதமாவது மயக்கமும் இகழ்ச்சியும் பாவமும் ஆசையும் பயமும் உறக்கமும் என்பன. தாமதத்தில் இராசதம் தகாதன செய்தலும், உண்ணாதன உண்ணலும், களிப்பும் வெகுளியுமாம். தாமதத்தில் சாத்துவிகம் வேதாகமங்களில் விதிக்கப்பட்டவைகளுக்கு மாறுபட்ட செயல்களான சிறுதெய்வ வழிபாடு முதலியனவாம். இவ்வளவும் வித்தியாதத்துவத்தில் கலைதொடங்கிப் பிரகிருதிமாயையாகிய குணங்கள் காரியப்படுதலாம் என்பர். 201580

பிரகிருதி அரும்பிலே மணம் விளங்காமல் அடங்கி நிற்றல்போல, முக்குணங்களும் விளங்காது அடங்கி நிற்கின்ற சொரூபம். இதனை அவ்வியத்தம் என்பர். அப்பிரகிருதியானது நாட்பூவிலே மணம் விரிந்தாற்போலக் குணத்திரயமும் விளங்கிநிற்கும் அவதரமே குணமாம். இந்தப் பிரகிருதிதான் மாயை என்றுபேர் பெற்று வித்தியாதத்துவங்களுள் ஏழாவதாகி நிற்கும்.

அதுதான் பஞ்சகஞ்சுகனை புருடனுக்குப் போக்கிய மான புத்திமுதலியவைகளைத் தோற்றுவிக்கும் உபா தானமாம். ஆகையால், அதற்கு வேறுதொழில் இல்லை எனக் கொள்க. அவ்வியத்தத்தை ஆலம் வித்துப் போல்வது எனவும், குணதத்துவத்தை ஆலம் வித்தினின்று அங்குரம் தோன்றினாற்போல்வது எனவும் கூற அமையும், குணதத்துவம் முக்குணமும் சமமாய் அலைவற நின்ற அவதரமாம். புத்திதத்துவம் இராசதமும் தாமதமும் குறைந்து சாத்துவிககுணம் மேலிட்ட அவதரமாம்.

இந்தப் புத்தியினது காரியம் எட்டுவகைப்படும். அவை தன்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் எனவும், அதன்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் எனவும் கூறப்படும். இவற்றுள், தன்மம் முதலியவற்றுக்குப் பொருள் அறம் அறிவு வெறுப்பு செல்வம் பாவம் அறியாமை விருப்பு வறுமை என மொழிபெயர்த்துக்கூறிக் கண்டு கொள்க.

இவற்றுள், தன்மத்தினின்றும் பத்துப் பாவகம் தோன்றும். அவை கொல்லாமை, மெய்ம்மை, கள்ளாமை, பிரமசரியம், அகந்தூய்மை என்னும் இயமமும்; வெகுளாமை, வழிபாடு, புறந்தூய்மை, உவகை, செப்பம் என்னும் நியமமும் ஆம். இந்தப் பத்தும் வேள்வி முதலிய அறம் செய்வார்க்கு ஒருதலையான் வேண்டப்படும் அங்கம் என்று உணர்க.

ஞானம் எண்வகைப்படும். அவற்றுள், உண்மையின் வாசனைபற்றி முன்னெடுபின் மலைவு இன்றிப் பொருந்துமாற்றால் பொருள்களை ஆராய்ச்சி செய்து

ஊகித்து அறியும் ஞானம் ஒன்று; ஆதியான்மிகம் முதலிய மூவகைத் துக்கத்தால் மடிவு வந்துழி நிகழ் வனவாகிய ஞானம் மூன்று; அருந்துங்கால் கைப் புடைத்தாய்ப் பின்னர் இதம் செய்யும் மருந்துபோலக் கேட்குங்கால் வெய்யதாய்ப் பின்னர் உறுதி பயக்கும் மொழி எனப்படும் வாயுறை மொழியால் வரும் ஞானம் ஒன்று; சாத்திரங்களைத் தானே ஓதி உணர்த லானும், ஆசிரியனை வழிபட்டு ஓதியுணர்தலானும் வரும் ஞானம் இரண்டு; தானம் முதலிய நல்வினை களான் வரும் ஞானம் ஒன்று; ஆக ஞானவகை எட்டும் கண்டு கொள்க. இது விரியான் எண்பதாம்.

இனி, வைராக்கியம் காரண வேறுபாட்டால் பத்து வகைப்படும். பிணி முதலியவற்றான் வருந்து வோரை நோக்கியவழி, எமது உடம்பும் இவ்வியல் பிற்று அன்றே! இதன் பொருட்டு உண்டி முதலியன தேடி வருந்துதலால் பயன் என்னை? என வரும் வெறுப்பு ஒன்று; ஆதியான்மிகம் முதலிய மூவகைத் துக்கத்தால் வரும் வெறுப்பு மூன்று; பொருளை ஈட்ட லும் காத்தலும் முதலியவற்றான் எய்தும் வருத்தத்தை நோக்கி வரும் வெறுப்பு ஒன்று; நட்டார் முதலி யோர்களை இழந்தவழி அழுது வருந்தி இங்ஙனம் வருந்துதற்குக் காரணம் நட்புச் செய்தலன்றே! என்று எண்ணுதலான் வரும் வெறுப்பு ஒன்று; காமுகன் தன் மனையாள்மாட்டு வெறுப்பு நிகழ்தற்கு ஏதுவாயது ஒன்றனைக் கண்டுழி அதனான் வருகின்ற வெறுப்பு ஒன்று; ஒருநாளுண்டி சுருங்கினும் வாட்டம் உறுவதாகிய இவ்வுடம்பு எத்துணைக்காலம் ஓம்பி னும் நிரம்புமாறு இல்லை என்று எண்ணுதலான் வரும் வெறுப்பு ஒன்று; இழிந்தோர்பால் சென்று நின்று

இரத்தல் முதலியவற்றிற்கு மனம் செல்லாமையால் வரும் வெறுப்பு ஒன்று; இவற்றுள் ஒன்றுனும் இன்றி உம்மைப் பிறப்பிற் செய்த தவவிசேடத்தால் வரும் வெறுப்பு ஒன்று; ஆக வைராக்கியவகை பத்தும்கண்டு கொள்க. இது விரியால் நூறும் எனக் கொள்க.

இனி, ஐசுவரியம் அணிமா மகிமா முதல் எட்டு வகைப்படும். அவற்றுள், அணுவினும் அதிசூக்கும வடிவுற்று நிற்றல் அணிமா என்னும் செல்வம். மேரு வினும் மிகப்பெரிய வடிவுற்று நிற்றல் மகிமா என் னும் செல்வம். சேறு முதலியவற்றில் இயங்கினும் அழுந்துதலின்றிக் காற்றினும் கடுநடைத்தாய் மெல் லிய வடிவுற்று நிற்றல் இலகிமா என்னும் செல்வம். மனத்தால் விழையப்பட்டன அனைத்தும் விழைந்த வாறே பெறுதல் பிராத்தி என்னும் செல்வம். சங்கற்ப மாத்திரையான் ஆயிரம் மகளிரைப் படைத்து அவ் வாயிரம் மகளிரோடும் ஆயிரம் வடிவாய் நின்று கிரீடித்தல் பிராகாமியம் என்னும் செல்வம். பிரமன் முதலியோர்மாட்டும் தன் ஆணை செலுத்தி அவராற் பூசிக்கப்படுதல் ஈசத்துவம் என்னும் செல்வம். உலக முழுவதையும் தன்வசமாக்குதலும், உலகத்தை உண் டாக்குதலும் வசித்துவம் என்னும் செல்வம். விடயங் களை நுகர்ந்தும் அவற்றில்தொடக்குண்ணுமை கரிமா என்னும் செல்வம். இந்த எட்டுவகைச் சித்தியுள் முன்னைய மூன்றும் உடம்பால் பெறப்படுவன. பின்னைய ஐந்தும் மனம் முதலியவற்றுல் பெறப்படுவன வாம். இது விரியான் அறுபத்து நான்காம் எனக் கொள்க.

முற்கூறிய தன்மம் உடையார்க்கு எண்வகை ஞானத்துள் ஒருஞானம் உண்டாம்; ஞானத்தானே

பத்துவகை வைராக்கியத்துள் ஒருவைராக்கிய முண்டாம்; வைராக்கியத்தானே எண்வகைச் செல்வமும் உளவாம். ஆகலின், இவை ஒன்றுக்கொன்று ஏதுவாமாறு அறிக.

இனி, இவ்வணிமா முதலிய ஐசுவரியம் பெற்றூர் அதனுல் செருக்கு எய்தி யோகநெறியைக் கைவிட்டு விடயங்களில் துவக்குண்டு கிடப்பார். ஆகலின், அது காரணமாக அதன்மம் உண்டாம். அதுவும் பத்து வகைப்படும். அவையாவன, கொல்லாமை பத்துக்கும் மறுதலையாகிய, கொலை பொய் களவு பிறர்மனைநயத்தல் அழுக்காறு வெகுளி வழிபடாமை மாசுண்டல் செற்றம் கோட்டம் என்பனவாம். அதன்மத்தால் அஞ்ஞானம் உண்டாம். அது தமமும் மோகமும் மாமோகமும் தாமிசிரமும் அந்ததாமிசிரமும் என்று ஐவகைப்படும். விரியான் அஞ்ஞானம் அறுபத்து நான்காம் என்பர். அஞ்ஞானத்தான் அவைராக்கிய ஆசையுண்டாம். அது வைராக்கியத்துக்கு மறுதலையாய் நூறு வகைப்படும். அஞ்ஞானம் அறுபத்து நான்கும், அவைராக்கியம் நூறும், மனமும் ஆங்காரமும் வாக்காதி ஐந்தும் சுரோத்திராதி ஐந்தும் என்னும் பன்னிரண்டும் ஆகிய நூற்றெழுபத்தாறுனும் அநைசுவரியத்துக்கு ஏதுவாகிய அசத்தி என்னும் வலியின்மை உண்டாம். அவ்வசத்தி அவ்வக்காரண வேறுபாட்டால் நூற்றெழுபத்தாறு ஆமாறு கண்டு கொள்க. அவ்வசத்தியானே அநைசுவரியம் என்னும் வறுமை உண்டாம். அது எட்டு வகைப்படும். எனவே, முற்கூறிய புத்திதத்துவத்தின் விரியாகிய பாவகம் அறுநூற்றுப் பன்னிரண்டும் கூறியவாறு காண்க. இதனையே, ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்

செய்த திருவாசகம் கண்டபத்து எட்டாம் செய்யுள் குறிக்கும் என்க. அது வருமாறு :–

"அளவிலாப் பாவகத்தால் அழுக்குண்டிங் கறி வின்றி, விளைவொன்று மறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு, அளவிலா ஆனந்த மளித்தென்னை யாண்டானைக், களவிலா வானவரும் தொழுந்தில்லை கண்டேனே" என்னும் திருவாக்குச் சிந்திக்கத்தக்கது.

இனி, இயமம் நியமம் முதலியவற்றையும், அணிமா வாதி அட்ட ஐசுவரியங்களையும் திருமந்திரம் 554, 555, 557, 671—711 செய்யுட்களில் காண்க.

இனி, சாத்துவிகம் பதினைந்து விதமாம், அவை:– சாதி நெறி நிற்றல், பெரியோரைப் பேணல், கற்றறி வுடைமை, இனியவை கூறல், தற்புகழாமை, உள்ளதே வரும் என மகிழ்ந்திருத்தல், நடுவு நிலைமை, சுத்த நியமம், பொறை, கடைப்பிடி, பிறருக்கு இதகாரியம் செய்தல், இந்திரலோகாதிகளில் வாஞ்சை, பிறர் தன்னைப் புகழுங்கால் தான் தன்னை இகழ்தல், அடக்க முடைமை, தன்னிடத்து இரந்தார்க்கு இரங்குதல் முதலியன.

இராசதம் ஒன்பது விதமாம். அவை :– சூரணு குகை, குரூரமுடைமை, ஊக்கமுடைமை, மான முடைமை, வயிராக்கியம், பலம், வன்கண்மை, போகி யாதல், இடம்பத்தனமான கூடாவொழுக்கம் என்பன.

தாமத குணம் ஒன்பது விதமாம். அவை :– அழத் தகாதனவற்றிற்கு அழுகை, கல்வியில் ஆதரவு அறுகை, இகழ்ந்தாரைச்சேர்ந்து வாழ்தல், கோளுரை,

மமதை, பேருறக்கம், நன்மை செய்தற்கு இளைத்தல், குலம் குணம் ஈகை இரக்கம் முதலியவற்றால் எனக்கு யாரும் இணையில்லை என்று சொல்லுதல், திருடுதல் என்பனவாம்.

முக்குணங்களுள் ஒன்று மேலிட்டு மற்றை இரண்டும் அடங்கிச் சிறிது விளங்கும். ஒருவனுக்கு முக்குணங்களும் ஒத்து விளங்குதல் இல்லை. சாத்துவிக குணத்தால் வீடும், இராசதகுணத்தால் சுவர்க்கமும், தாமதகுணத்தால் நரகமும்பெறுவர். விரிக்கிற்பெருகும். விரிந்த நூல்களிற் காண்க.

இதுவரை குணதத்துவத்தின் காரியமும், புத்தி தத்துவத்தின் காரியமும் கூறப்பட்டன.

43. அகங்கார தத்துவமானது வினைக்கு ஈடாக உடம்பிலே நிற்கும் பிராணவாயுவையும் செலுத்தி, நீங்காத மமதைக்கு மூலமாய், என்னை ஒப்பாவார் யாரொழிந்து புவியில் பிறர் ஒருவரும் இல்லை என்னும் இயல்பினையுடையதாய் இந்திரியங்களும் விடயங்களும் புசிக்கவும் புசிக்கப்பட்டவுமாக நின்ற அளவிலே, அவ் விடயத்திலே முற்பட்டுப் பொருந்துகின்ற இச்சை தானே வடிவாகநிற்க, மனத்தத்துவமானது ஒன்றைச் சங்கற்பிக்கையும் எப்பொழுதும் சலனத்துவமும் தந்துநிற்கும். சித்தமானது நினைவுமாத்திரமே. சந்தே கத்தை உண்டாக்குகின்ற மனத்தையொழிய வேறாக வகுத்துச் சொல்லமுடியாதது என்க.

இவ்விரண்டின் ஒற்றுமை கருதியே மனம் புத்தி ஆங்காரம் என அந்தக்கரணம் மூன்று என்பர்.

44. செவி துவக்கு கண் நா மூக்கு என்னும் இந்திரியங்கள் ஐந்துக்கும் கூடுகின்ற விடயங்களாக நிலைபெற்ற சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் இவை ஐந்தும் பொருந்தும். வாக்குப் பாதம் பாணி பாயு உபத்தம் எனச் சொல்லப்படும் கன்மேந்திரியம் ஐந்துக்கும் வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆநந்தமும் என்று சொல்லப்பட்ட ஐந்துதொழிலும் அடைவிலே பெறுவது இயல்பாம் என்க.

45. தத்துவங்களை எண்ணுமிடத்து முந்தி எண்ணப்படும் சூக்குமஐம்பூதங்களும் ஆகாயம் முதலாகக் கொண்டு செவி மெய் கண் நா மூக்கு என்று சொல்லப் பட்ட ஞானேந்திரியம் ஐந்தும் அடைவே பொருந்து தற்கு ஆதாரமாக இந்த இந்திரியங்களிடத்திலே நிலை பெற்று வரும் ஐந்து புலன்களையும் ஆன்மாக்கள் அநுபவிக்கும்படி தங்கள் சொரூபத்தோடே விளங்கா நிற்கும். புறம்பே தூலபூதங்களிலே ஆகாயம் மற்றைப் பூதமெல்லாம் தன்னிடத்திலே வந்தடைய வெளியாய் இடங்கொடுக்கும். வாயு மிகச் சலித்து எல்லாவற்றை யும் திரட்டும். தேயு பிறபொருட்கும் வெப்பத்தைக் கொடுத்து அவற்றைச் சுட்டு ஒன்றுபடுத்தும். அப்புக் குளிர்ந்து பதங்கொடுத்து நிற்கும். பிருதிவி கடினமாய் எவற்றையும் தரித்து நிற்கும்.

ஞானேந்திரியங்களுக்கு வலிசெய்து தன்மாத் திரைகள் சூக்குமரூபமாய் அவைகளிலிருக்கும் என அறிக.

46. இங்ஙனம் சொல்லிவந்த அடைவிலே சிவ தத்துவம் ஐந்தும் சுத்ததத்துவம்; வித்தியா தத்துவங் கள் ஏழும் சுத்தாசுத்த தத்துவம்; ஆன்மதத்துவம்

இருபத்துநாலும் அசுத்த தத்துவம்; இவை ஒரு தொகையாக முப்பத்தாறும். இம்மூன்றும் அடைவே பிரேரகாண்டம், போககாண்டம், போக்கியகாண்டம் என்று கூறப்படும். இங்ஙனம் நிலைபெற்ற தத்துவங்களிடத்திலே மயங்கிப் பெரிய துன்பங்களைப் பொருந்தும் உடம்பானது நிலைகுலையக் கூடும்பொழுது தூலவுடல்விட்டுச் சூக்குமஉடலோடு போகும் பாம்பும், முன்பு பழகிய உடலைப்பாராமல் போகும் முட்டையிற்றோன்றுவனவும், தூலதேகத்தில் செய்த காரியத்தைச் சூக்குமதேகத்தில் அறியாதபடிபோம் கனவும் என்று சொல்லும்படி முன்னே அதோமாயா சிருட்டி சொல்லுதற்கு வரும் கலை முதலிய முப்பது தத்துவங்களின் இவை விரிதற்கு இடமான சூக்குமமாகிய தனக்கு உரிய புரியட்டகத்தோடே நல்வினை தீவினைகளுக்கு ஈடான பூதசார பூதசரீரங்களிலே பொருந்திச் சுவர்க்க நரகங்களின் பயனை அநுபவித்துச் சிவானுக்கிரகத்தினலே பூமியிலே மீண்டு பூதபரிணம உடம்போடே பிறக்கும் என்று திவ்விய ஆகமங்கள் சொல்லும்.

பூதம் 5, தன்மாத்திரை 5, ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 3, குணம் 1, அதற்குக் காரணமான பிரகிருதி 1, கலாதி 5 ஆக எட்டும் கொத்தாகலின் புரியட்டகம் எனப் பெயராயிற்று. இது பரசரீரமாம்; அஃதாவது அதிசூக்குமதேகம்.

இதனை,

*" அத்தன் அமைத்த உடலிரு கூறினில்*
*சுத்தம தாகிய சூக்குமம் சொல்லுங்கால்*
*சத்த பரிச ரூப ரசகந்தம்*
*புத்திமா னங்காரம் புரியட்ட காயமே"* (2123)

எனத்திருமந்திரம் கூறும். தன்மாத்திரை ஐந்து அந்தக் கரணம் மூன்று ஆக எட்டும் சூக்குமதேகமெனக் காலோத்தரம் கூறுகின்றது. தூலஉடலைவிட்டு உயிர் பிரிதலைக் கூறுமிடத்து,

" நாக முடலுரி போலுநல் லண்டசம்
ஆக நனுவில் கருமறந் தல்லது
போகலு மாகும் அரனரு ளாலேசென்
றேகு மிடஞ்சென் றிருபயன் உண்ணுமே " (2132)

" உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன
கண்டு விடும்சூக்கம் காரண மாச்செலப்
பண்டு தொடரப் பரகாய யோகிபோல்
பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் பெய்தியே " (2133)

என்னும் திருமந்திரங்கள் தெளிவாகக்கூறுதல் காண்க.

47. முட்டையில் தோன்றுவன, வியர்வையில் தோன்றுவன, வித்தில் தோன்றுவன, கருப்பையில் தோன்றுவன என்னும் நால்வகைத் தோற்றத்தின்கண் நிலைபெற்ற தாவரயோனிகள் பத்தொன்பது நூறுயிர பேதம்; ஊர்வன பதினைந்து நூறுயிரபேதம்; தேவ யோனி பதினொருநூறுயிரபேதம்; நீர் உறைவன பத்து பறவை பத்து நாற்கால் விலங்கு பத்து என்னும் நூறுயிரபேதங்கள்; மானுடர் ஒன்பது நூறுயிரபேதம் ஆக எண்பத்துநான்கு நூறுயிரபேதங்களாம்.

நால்வகைத் தோற்றத்தையும் அண்டசம், சுவே தசம், உற்பீசம், சராயுசம் என வடநூலார் கூறுவர். அண்டம் - முட்டை. சுவேதம் - வேர்வை. ஜம் - தோன்றுதல். உற்பீசம் - கிழங்கு வேர் வித்தினின்று தோன்றுவன. சராயுசம் - கருப்பையுட்டோன்றுவன வாம். யோனிபேதம் எண்பத்துநான்கு நூறுயிரம்

என்பதனை, "உரைசேரும் எண்பத்து நான்குநூ றுயிர மாம் யோனிபேதம் - நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் நின்றான் கோயில் ...... மிழலையாமே" என்னும் திருவீழிமிழலைத் தேவாரத்தில் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தமை காண்க.

48. இத்தன்மையவாகிய பல பிறவிகளிலே பிறந்தும் இறந்தும் சிவா நுக்கிரகத்தினலே புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றின் பயன்களை அநுபவிக்கும் இது சகலாவத்தை எனப்படும். முற்பிறப்புக்களிலே சுகதுக்க பலன்களை நுகரும் நுகர்ச்சியிடத்திலே ஆகாமியமாய் வந்து ஏறிய சஞ்சிதமும், புசித்துத் தொலைப்பதாகவந்த பிராரத்தமும், இப்பிராரத்தத்தைப் புசிக்குமிடத்து ஏறிய ஆகாமியமுமாய் நீங்காமல் முற்செனனங்களிலே பொருந்திய புண்ணியபாவங்கள் ஆகிய இரண்டின் பிரயோசனங்களையும் ஒருகாலத்திலே ஒருவன் புசிக்கும்படி வீட்டின்பத்தைத்தருகின்ற சிவ தருமங்களாலே அக் கன்மங்களெல்லாம் பக்குவத்தாலே துலையொக்கச் செவ்வியாதலைப் பொருந்தும் இடத்தில் இருவினையொப்பு வரும். முன்பெல்லாம் ஆன்மாக்களை ஈடேற்றுகைக்குத் தனக்கு ஒப்பில்லாத கோபத்தைப் பொருந்தின திரோதான சத்தியானது திருவருட்சத்தியாக நிற்க அப்பொழுதே நல்ல சத்திநிபாதக்குறிகளும் விளங்கும்.

நிபாதம் - பதிதல்: அஃது உபசாரம். சகலாவத்தையும், சுத்தாவத்தையும், சுத்தாவத்தைக்கு நிமித்தமான இருவினையொப்பும் சத்திநிபாதமும் உணர்த்தியது.

49. மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் எனச் சத்திநிபாதம் நான்கு பகுப்பாயிருக்கும். ஆராயப்பட்ட

அந்த நான்கு வகையினையுடைய சத்திநிபாதத்தினுள் சொல்லுதற்கு அரிய தீவிரதரமான ஞானமானது பொருந்தப்படும் அவர்க்கு நிலைபெற்ற ஞானக்கூத்தன் ஒப்பற்ற குருமூர்த்தமாய் அறியப்படும் பொருளாய் எழுந்தருளிவந்து மயக்கம் மிக்க கேவலாவத்தையும், விகற்பம் மிக்க சகலாவத்தையும் உண்டாகாதபடி அருளிலே நிறுத்தி மலங்களைப் போக்கியருளுவன். இந்த நிலையே நிறைந்த சுத்தநிலை என்று சொல்லப் படும். கெடாத புகழினையுடைய சரியை கிரியை யோக நிலையிலே நிற்பவர்களுக்கே இந்தப்பொருளை ஆகமங் கள் அறிவிக்கும்படி அறுதியிட்டுச் சொல்லுவனவாம்.

சத்தி நிபாதமாவது சென்மாந்தரங்களிலே செய் யப்பட்டுள்ள சிவதருமங்களாலே ஆன்மாக்களுக்குக் கன்மசமமும் பரிபாகமுமுண்டான அளவில் சிவசத்தி பதிதல். கன்மசமத்துவமேயன்றி மலபரிபாகமில்லாத போது சிவசத்தி அந்தவினை இரண்டினையும் சேதித்து விஞ்ஞானகலப் பிராப்தியாக்கும். கன்ம சமத்துவம் இன்றி மலபரிபாகம் உண்டானல் கன்மங்களாற் பலம் இல்லை.

சத்தி நிபாதங்களாற் பயன் சரியை முதலிய பாதங் களிலே நிறுத்தி, மனவாக்குக் காயங்களைச் சுத்தப் படுத்தி ஞானத்துக்கு யோக்கியனைப் பண்ணும்.

இவற்றுள், மந்ததரத்தின் இயல்பாவது:– இலிங்க மாகேசுரரிடத்திலே பத்தியுண்டாக, அதனாலே பரம சிவன் சாதகாசாரியனை அதிட்டித்துச் சமயதீட்சை பண்ணி, அவன் மனமொழிமெய்களைச் சரியைத் தொழி லிலேசெல்ல விடுத்தருளுவர். இச்சரியையின் முற்றுத லாலே மந்த சத்திநிபாதமுண்டாய்ச் சிவார்ச்சனையால்

ஆதரவு உண்டாக்கி, போதகாசிரியனே அதிட்டித்து விசேட சமயம் முடித்துச் சிவார்ச்சனை கற்பித்து, அந் தரியாக பகிர்யாகங்களிலே அவன் மனமொழி மெய் களைச் செல்ல விடுத்தருளுவர். இக்கிரியையின் முற்றுத லினலே தீவிர சத்திநிபாதமுண்டாம். அதனல் யோகத் திலே விருப்பம் உண்டாம். அவ்விருப்பமுண்டாகவே யோகாசிரியனல் அட்டாங்கயோக உண்மையை அறி வித்துக் காமாதி அறுவிதமும் விடுத்து, அவன் சித்தத் தைத் தியானத்திலே நிறுத்தி, சமாதியிலே ஒடுக்கி யருளுவர்.

மேலே கூறிய இம்மூன்றன் முற்றுதலாலே தீவிர தரசத்தி நிபாதம் உண்டாம். அதனல், சிவஞானிகளி டத்திலே பத்தியும், திரிபதார்த்த சொரூபம் அறிய வேண்டும் என்னும் அறிவும் தோன்றும். தேகாதிப் பிரபஞ்சங்களை நீக்கவேண்டும் என்னும் வைராக் கியமும், முத்தியில் ஆசையும், பிறவியிலே பயமும், இகலோக பரலோகத்திலே வெறுப்பும், நமக்கு இந்தக் கவர்ச்சியை நீக்கிச் சிவரூபத்தைத் தரிசிப்பிக்கும் நாத ராவார் யாவர்? என்று பசித்தவன் அன்னதாதாவைத் தேடுமாறு போலவும், பிறவிக்குருடனை அநாதன் கோடைக்காலத்தில் மத்தியானத்திலே நீர் தேடித் திரியுமாறு போலவும் ஞானசாரியனைத் தேடி மிகவும் வருந்துகின்ற வாஞ்சையுண்டாம்.

இந்தத் தீவிரதர சத்திநிபாதமும் தாரதம்மியத்தி னலே மந்ததரம் ஆதியாக நான்காம். இந்நான்குவித சத்திநிபாதம் உடையவர்கள் ஞானசாரியனையடைந்த மாத்திரத்திலே அவ்வாசிரியனலே பரமசிவன் ஞான திட்சையைப் பண்ணி, அவர்கள் மலத்திரயங்களைச்

சேதித்து, கரணசூனியம் பிறப்பித்து, ஞானனந்த அநுபூதியைக் கொடுத்தருளுவர்.

இந்நால்வர் தன்மையும், இவர்களை ஆசிரியன் திருத்தும் அருமையும், எளிமையும், அவர்களுக்குள்ள குருபத்தியும், அவர்கீளுக்கு ஞானம் பிரகாசிக்கும் தன்மையும், பிரகாசித்தால் அவர்களுக்குப் பிரபஞ்சத்திலே வெறுப்பும் உவமை முகத்தால் விளங்கச் சொல்லத் தொடங்கினுல் பெருகும். விரிந்த நூல்களிற் கண்டு கொள்க.

இது சத்திநிபாதத்தின் பாகுபாடும், சுத்தாவத்தையும், இப்பொருள்களை இன்னுருக்கு உணர்த்தலாம் என்பதும் உணர்த்தியமை காண்க.

50. மகளிரிடத்திலே சுகத்தை அநுபவிப்பதே முத்தி என்பான் உலகாயதன். உருவமாதி ஐந்து கந்தமும் அறுவதே முத்தி என்பான் புத்தன். திரிகுணமும் அடங்குவதே முத்தி என்பர் சாங்கிய வைசேடிகர். விரிந்த கன்மம் கெடுவதே முத்தி என்பன் ஆருகதன். மலங்கள் போவதே முத்தி என்பர் பேதவாதி, பாசுபதர்கள். சரீரம் நித்தியமாயிருப்பதே முத்தி என்பர் கன்மயோகிகள். சகலத்தையும் விவேகித்தறிவதே முத்தி என்பர் மாயாவாதிகள். உயிர்கெடுவதே முத்தி என்பன் பாற்கரியன். அட்டமாசித்தியைப் பெறுவதே முத்தி என்பர் சித்தர். கல்லுப்போல் கிடப்பதே முத்தி என்பர் நியாய—வைசேடிக—பிரபாகரர்கள். மேலே கூறப்பட்ட பதின்மர் சொல்லும் முத்திகளும் பழியைச் சேர்ந்த முத்தியேயாம். மும்மலமும் விட்டு நீங்க ஆன்மா அருளைப் பெறுகின்ற முத்தியே சைவ சித்தாந்திகள் கூறும் விளக்கமாகிய முத்தி என்பர்

பெரியோர். இவர்களுடைய மதமறுப்புக்களை எடுத்து இங்கே விரித்துக் கூறுதல் இயலாததாம். ஆகலின், சிவஞான சித்தியார் முதலிய நூல்களிற் பரக்கக்காண்க.

இது உலகாயதன் முதலிய பரசமயிகள் முத்திநிலையும், சைவசித்தாந்திகள் முத்திநிலையும் கூறியபடி.

# உண்மை அதிகாரம்

51. மேலே சொல்லிப் போந்தவை திரிபதார்த்த இலக்கணத்தைப் பொதுப்பட விரித்துக் கூறுதலின் பொது என்று சொல்லப்படும் என்பர் அறிவுடையோர். இதற்குமேல் ஆன்மஇலக்கணம், அவ்வான்மா பொருந்தப்பட்ட அஞ்சவத்தை, சிவன் உள்ளே நின்று கருவிகளைக்கூட்டி ஆன்மாவினுடைய உண்மையை உணர்த்தும் முறைமை, (உண்மை என்றது சிற்சத்தியை) ஒளி நிறைந்த சிவஞானத்தின் உண்மை, அந்தச் சிவஞானத்தால் உண்டாகிய ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி ஆன்மலாபம் என்னும் மூவகைப்பயன், நின்மலனுடைய திருநாமமாகிய ஐந்தெழுத்தருணிலை, அந்த உண்மையிலே அணைந்தோர்தன்மை ஆக இந்த எழுவகையினையும் சிவானுக்கிரகத்தினுலே சொல்லுவேன் என இவ்வாசிரியர் தொடங்குகின்றார்.

## மூன்றும் சூத்திரம்

52. ஆன்மாவானது கன்மத்துக்கு ஈடாகப் பொருந்தின உடம்பினுள்ளே நிலைபெற்று, புசித்தற்கு யோக்கியமான விடயங்களை இந்திரியங்களாலேகண்டு, அந்தக்கரணங்களாலே கிருகித்து, வித்தையினுலே அறிந்த அவ்விடயத்திலே அழுந்திச் சுகதுக்கங்களை அநுபவியாநிற்கும். இனி, கலாதிகளால் அறிந்து, மனுதிகளால் பற்றி, இந்திரியங்களால் கண்டு, பிரகிருதியால் அழுந்தும் என்பாரும் உளர். அறியும் தன்மையை அறிவிக்கும் திருவருளும் புசிப்பிக்கும் சாதனமான கருவிகளும் போக்கியத்தின் வரலாறுமான இவற்றில்

ஒன்றும் அறியாது கருவிகளைப் பிரிந்த அடைவாகச் சாக்கிரம் முதலிய அவத்தைகளிலே மிகுத்த ஆணவ மலத்தாலே மறைப்புண்டு அவத்தைப்படுகின்றோம் என்னும் தன்மை தெரியாமல் அழுந்தும். இந்தக் கருவிகள் எல்லாம் நீங்கி ஆணவமலம் நீங்காத ஏகாந்த மான அதீதாவத்தை அவ்வான்மாவுக்குப் பெத்தத்தில் உண்மை என்று திவ்விய ஆகமங்கள் சொல்லும், இஃது ஆன்ம இலக்கணமாம்.

53. உடம்பானது அவத்தையிலும் மரித்த போதும் உணர்ச்சியில்லாத சடம் ஆகையாலும், சோத்திராதிகள் ஐந்தும் தத்தமக்கு ஆதாரம் ஆகிய பூதங்களைப் பொருந்திநின்று ஒவ்வொரு விடயங்க ளாக ஐந்தையும் அறிதலானும், அந்தக்கரணங்கள் தங்களிற் கூடிப் பற்றி நிச்சயித்து அகங்கரித்துச் சிந்தித்து இந்திரியங்கள் தந்த விடயங்களைப் புசிக்கை யானும், பிராணவாயு அவித்தையை அறியாதிருத்த லானும், நீங்குவதற்கு அரிய வினைக்கு ஈடாக எடுத்த தேகத்திலே ஆன்மாவானது சிவன் கூட்டியருளின கலாஞானத்தாலே அறியும். இது தேகத்துக்கு அந்நிய மாக ஆன்மா உண்டு என்பது உணர்த்தியது. இதனுல் ஆன்மா என்பது ஒன்றில்லை என்று சொல்லுகின்ற உலகாயதன் மாத்துமிகர் மாயாவாதி என்னுமிவர்கள் சொல்லும்பொருளை மறுத்தபடி. அல்லாமலும், இந்த ஆன்மாவும் சிவன் அறிவிக்க அறிந்து இந்த உடலிலே நின்று சீவிக்கும் என்றதும் கூறியமை காண்க.

54. அப்படிச் சிவன் அறிவிக்கவேண்டா; ஆன் மாத் தானே அறியும் அறிவுடைப்பொருள் என்று சாங்கியனும் ஐக்கியவாதியும் சொல்லின், அப்படி

ஆன்மாவை அறிவு என்று கூறினால் ஒன்றை அறியுமிடத்து இந்திரியங்களைக்கொண்டு அறியவேண்டுவது இல்லையாம். ஆகையால், சுதந்தரமாய் ஆன்மா அறிபவனல்லன்.

ஆன்மா அறிவுடையதன்று என நியாய வைசேடிகர் கூறுவர். அப்படியாயின் அறிவில்லாத ஆன்மாவுக்குக் கருவிகளால் பயனில்லையாய் முடியும். இந்திரியங்கள் ஆன்மாவுக்கு அறிவைக்கொடுக்கும் என்று சங்கிராந்தவாதி கூறுவானாயின், சேதனனாய் உள்ள ஆன்மாவுக்கு அசேதனமாயுள்ள இந்திரியங்கள் அறிவைக் கொடுக்கமாட்டா. முற்றறிவுடையனாகிய பரமசிவன் ஆன்மாவுக்கு அறிவைக் கொடுப்பன் என்று பரிணாமவாதி கூறுவனாயின், அப்பொழுது ஆன்மா சடமாகவேண்டும்; ஆகையால், பரமசிவன் சடத்துக்கு அறிவைக் கொடுக்கமாட்டான்; எனவே, ஆன்மாவுக்கு முன்பு உள்ள அறிவை இறைவன் கருவிகளாலே விளக்குவன் என்றபடி.

55. ஆன்மா அறிவுடைப்பொருளாயின் அப்படி அறிவிக்கின்ற கருத்தாவை ஆன்மா அறியாதோ எனப் பரிணாமவாதியும், கருத்தாவை ஆன்மாவால் ஒருகாலத்தும் அறியப்படாது எனப் பாடாணவாதியும் கூறுவர். சிற்றறிவினையுடைய ஆன்மாவால் அறியப்பட்ட பொருள் எல்லாம் அசத்தாய் அழிந்துபோவது உண்மை. சத்தாகிய சிவம் எப்பொழுதும் ஆன்மாவால் அறியப்படாததோ? என்னில், ஒருகாலத்தினும் சிவன் ஆன்மாவால் அறியப்படாததாயின் இவனுக்குச் சிவனால் ஆவதொரு பயன் இல்லையாய் முடியும். ஆகையால், அநாதியாய் வருகின்ற ஆன்மபோத

மானது இந்திரியங்களுடனே கூடி அதுவதுவாகச் சுட்டி அறியப்படும் பொருளையே அசத்து என்று இங்கே கூறப்பட்டது. அந்தச் சிவம் சுட்டி அறியப் படாதது என்க.

56. அந்த அசத்தை அசத்து என்று அறிந்தது எந்த அறிவுதான்? என்னில், சிற்றறிவுடையது தானுக ஒன்றையுமறியாது; ஆதலின் உயிரானது அசத்தைச் சத்து என்று இருப்பதொழிந்து அசத்து என்று அறிய மாட்டாது. முற்றறிவுடைய ஈசன் ஒரு பொருளை இது என்று சுட்டி அறியான். அல்லாமலும் இறை வனையும் ஆன்மாவையும் ஒழிந்த கருவிகள் சடம் ஆகையாலே பாசஞானம் அறியாது. சிற்றறிவினை யுடைய ஆன்மாவும் அதற்குக் கருவியாகச் சிறந்த சடமும்கூடி அறியும் என்னில், விளக்கம் உண்டா காது. அருளான சிவஞானமும் உயிரும்கூடி அறியும் என்னில், பெத்தத்திலே ஆன்மா அருளில் பொருந் தாது. இனி, பதி பசு பாசம் என்னும் மூன்று பொருள் களினுள்ளே பதியும் பாசமும் கூடிநின்று அறியுமோ? என்னில், ஒளியும் இருளும் ஓரிடத்திலே நில்லா ஆதலால் அறியாது என்க.

உயிர் அறியாது என்றதனுல் ஈசுர அவிகார வாதியும், ஈசன் அறியான் என்றதனுல் பரிணுமவாதி யும், அசேதனம் அறியாது என்றதனுல் சிவசம வாதியும், ஆவியும் கருவியும் அறியா என்றதனுல் சங்கிராந்தவாதியும், உயிரும் அருளும்கூடா என்றத னுல் சைவரும், பதியும் கருவியும்கூடா என்றதனுல் ஐக்கியவாதியும் மறுக்கப்பட்டமை காண்க.

இதன் விரிவைச் சங்கற்பநிராகரணத்துட் கண்டு தெளிக.

57. அசத்தான பாசம் சடம் ஆகையால் சத்தாகிய சிவத்தை இது என்று சுட்டி அறியமாட்டாது. சத்தாகிய சிவம் வியாத்தம் ஆகையால் அசத்தை இது என்று அறிந்து நீங்க வேண்டா. மலபரிபாகத்தால் பிரகாசித்த அருளாலே பாசம் இது சிவம் இது என்று அறிகிற ஆன்மாவானது இருளிலே நின்றபோது இருளாயும் ஒளியிலே நின்றபோது ஒளியாயும் இருளும் ஒளியும் அல்லாத கண்ணின் தன்மைபோலும் தன்மையுடையதாம். ஆகவே, முன் கூடிநின்ற மலங்களைச் சிவத்துடனே கூடிநின்று போக்கும் முறைமையாலே அவ்வான்மாவுக்குச் சதசத்து என்ற பெயராம்.

கண்ணின் தன்மை போலும் தன்மையாவது மலத்துடனே கூடிநின்றபோது மலமாயும், சிவத்துடனே கூடிநின்றபோது சிவமாயும் நிற்றலாம் என்க.

58. கண்ணுக்கு ஒளியை விளக்குக் கொடுத்துப் பொருள்களைக் காட்டும் என்று நிமித்தகாரணபரிணாமவாதி சொல்லுவானாயின், விளக்கானது காட்டுவதற்கு முன்பு கண்ணுக்கு ஒரு பிரகாசமும் இல்லையாய் முடியும். விளக்கின் பிரகாசம் கூடிக் காட்டுகின்ற பதார்த்தங்களைக் கண்ணின் பிரகாசமானது விளக்கின் பிரகாசத்தோடும் கூடாமல் இருளிலே நின்று காண்கையால் கண்ணுக்குத் தனியே ஒளி உண்டு என்று அறிக. அப்படி இருளினுள்ளே நின்று கண் கண்டதானாலும் காண்கின்ற பண்டங்களை விளக்கொளியோடும் கூடிநின்று காண்பதேயன்றித் தனித்துக்

காணமாட்டா என்னின், விளக்கொளியோடு கூடிக் கண்ணொளி கண்டதாயினும் கருத்து வேறுபாடு உண்டு. கண்ணொளியும் விளக்கொளியும் தம்மிற் கலந்து நிற்கும். கலந்தாலும் பொருந்திய பொருள்கள் ஐக்கியத்தால் ஒன்று என்று சொல்லுவதின்றிப் பொருள் இரண்டேயாம் என அறிக.

விளக்கொளி சுட்டற நின்று காட்டும்; அது போலச் சிவனும் சுட்டற நின்றே அறிவிப்பன். கண்ணொளி எல்லாவற்றையும் சுட்டிநின்றே காணும்; அது போல ஆன்மாவும் சுட்டிநின்றே அறியும். அன்றியும், விளக்குக் கண்ணுக்கு ஒளியைக்கொடுத்துக் காட்டுவதாயின் குருடனுக்கும் அது ஒளியைக் கொடுத்துக் காட்டவேண்டும். அஃது அப்படிக் காட்டக் கண்டிலேம்; ஆகையால், கண்ணுக்கு விளக்கு ஒளியைக் கொடுத்துக்காட்டும் என்பது விரோதமாம் என்க.

59. ஆன்மாவானது உடம்பிலே ஒருதானத்திலே நின்று அறியும் என யோகி சொல்லுவான். மாயா காரியமான உடம்பிலே நிறைந்து நின்று அறியும் எனச் சமணன் கூறுவான். ஆகாயம்போல் எவ்விடத்தும் பூரணமாய் நின்று அறியும் என மாயாவாதி கூறுவான். ஒரு கருத்தா அறிவியாமல் ஆன்மாத் தானே உயர்ந்த அறிவாயிருக்கும் எனச் சாங்கியனும் ஐக்கியவாதியும் அவிகாரவாதியும் கூறுவர். குற்றம் பொருந்திய மனம் முதலிய கருவிகளே அதற்கு அறிவைக் கொடுக்கும் என நியாய வைசேடிகர் அறைவர். இவ்வாறு சித்தாந்தசைவர் கூறமாட்டார். ஆன்மா அறியும் உண்மையை விசாரித்தறியுமிடத்து விளக்கம் தரும் படிகம் போல அடுத்ததின் தன்மையாய் நின்று அறியும் எனப் பெரியோர் கூறுவர் என்க.

ஆன்மாவின் இலக்கணத்தை ஆராய்ந்தறியாமல் பரசமயிகள் பலவாறு கூறுவர்; அவர் கூற்றுப் பொருந்தா. ஆன்மா உடம்பிலே ஒருதானத்து இருப்பின் ஏகதேச உருவாய்ச் சடமாய் மற்றுள்ள இடங்களில் அறிவும் இல்லாமல் அழியும்; உடல் முழுதும் நிறைந்து நிற்பின் அவத்தைப்படும் குற்றமும், உடல் வளர வளர்ந்து தேயத் தேய்ந்து சிறுகுதல் ஆகிய சங்கோச விகாசதன்மம் என்னும் குற்றமும், இந்திரியங்கள் ஐந்தும் புலன்கள் ஐந்தையும் ஒருகாலத்திலே நுகராத குற்றமும், உடல்வளர வளர்ந்து சிறுகச் சிறுகுதல் ஆகிய அவயவம் குறைய ஆன்மாவும் சின்னபின்னப்படும் குற்றமும் வந்து பொருந்தும். எவ்விடத்தும் நின்று அறியும் ஆயின் போக்குவரவு உடைய குற்றமும், ஒருவன் கருத்தை ஒருவன் அறியான் என்னும் குற்றமும் தங்கும். ஓரு கர்த்தா அறிவியாமல் தானே அறியும் என்னில் அவத்தைப்படுவதும், ஒருவர் அறிவிக்க அறியும் குற்றமும், கருவிகளால் அறியும் குற்றமும் உளவாம். கருவிகளே அறிவைக் கொடுக்குமாயின் ஆன்மாவுக்குச் சடத்துவம் வந்து பொருந்தும். அறியும் சடமான கருவிகள் ஒன்றுக்கு அறிவைக் கொடுக்கமாட்டா. ஆகையால், அறிந்த நல்லோர் இக்குற்றம்வரப் பேசார் என்க.

சுத்தப்படிகமானது இருள் வந்து மேலிட்ட காலத்தில் அந்த இருளுடன் கூடி இருளாயிருக்கும். பஞ்சவன்னங்களோடு கூடினகாலத்து அப்பஞ்சவன்னங்களைக் காட்டி நிற்கும். ஒளி மேலிட்டபொழுது அந்த ஒளியோடு கூடி ஒளிவடிவாய்க் காட்டி நிற்கும். இதுபோல, ஆன்மாவும் ஆணவமலம் மேலிட்டு மறைத்த அவதரத்து அந்த மலத்தோடு கூடி அறியா

மையாய்க் கிடக்கும். அப்படிக் கிடக்கும்பொழுது கலையாதி தத்துவங்களைக் கூட்டின பொழுது அவற்றுடன் கூடி அந்தமயமாய் நின்று பிரபஞ்சகாரியப்பட்டுச் சகலனாய் நிற்கும். கேவலம், சகலம் ஆகிய இரண்டு நிலைகளும் நீங்கும்படி அருள்மேலிட்ட காலத்து அந்த அருளோடு கூடி அறிவாய் நிற்கும்; இது சுத்தநிலை: ஆகையால் சுத்தப்படிகத்தை உவமித்தது என்று அறிக. இப்படிக்கூடின ஆன்மாவின் உண்மைநிலையை ஆசாரியன் காட்டக் கண்டு தெளிக.

## நான்காம் சூத்திரம்

இங்ஙனம் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மையையுடைய ஆன்மாவுக்கு அவத்தைப்படும் முறைமையும் உண்டு. ஆகையால், இஃது அவத்தைத் தன்மையை எடுத்துக் கூறத்தொடங்கும்.

60. ஆன்மா, ஆணவமல மறைப்பினாலே அந்த ஆணவமலமேயாய்க் கீழாலவத்தைப்பட்டுச் செல்லும் அவதரத்துப் பிரகிருதிதத்துவம் உடம்பாகச் சென்று மூலாதாரமாகிய அதீதத்தானத்திலே சென்று ஒடுங்கும் அவதரத்திலே அவ்விடத்துச் சீவிக்கும் கருவிகள் ஒன்றுமின்றி அந்தப்பிரகிருதி என்னத் தான் என்னப் பிறிவற்றுக்கிடந்து அழுந்தும். அஃதே **அதீதம்** என்று சொல்லப்படும். எனவே, அழுந்தும் தொழில் பிரகிருதிக்கு உடைமையால் அதீதத்தில் பிரகிருதியுண்டு எனக் கொள்க. அந்த மூலாதாரத்துக்கு மேலாகப் பொருந்தப்பட்ட நாபியாகிய துரியத்தானத்திலே நிற்கும் கருவி பிராணவாயு ஒன்று. பிராணவாயு நிற்றலாவது ஆன்மா துரியத்திலே பிரகிருதிதத்துவம் உடம்பாகப்

பிராணவாயுவோடும் கூடிநிற்கும் அவதரத்து அந்தத் துரியத்தை விட்டு அதீதத்திலே பிரகிருதித்துவம் உடம்பாகச் செல்லுமிடத்து அந்தத் துரியத்திலே பிராணவாயு நின்றுவிடுகையால் என்று தெளிக.

அந்தத் துரியத்துக்கு மேலாகப் பொருந்தப்பட்ட இதயமாகிய சுழுத்தித்தானத்திலே விரும்பி நிற்கும் கருவி சித்தம் ஒன்று. சித்தம் நிற்றலாவது ஆன்மா அந்தச் சுழுத்தியிலே பிரகிருதி தத்துவம் உடம்பாகச் சித்தத்தோடும் பிராணவாயுவோடும் கூடிநிற்கும் அவதரத்து அந்தச்சுழுத்தியை விட்டுப் பிரகிருதி தத்துவம் உடம்பாகப் பிராணவாயுவோடும் கூடித் துரியத்தில் செல்லுமிடத்து அந்தச் சுழுத்தியிலே சித்தம் ஒன்றும் நிற்கும் என்று அறிக.

அந்தச் சுழுத்திக்கு மேலாக அடுத்துள்ள கண்டம் ஆகிய சொப்பனத்தானத்திலே சத்தாதி ஐந்தும் வசனாதி ஐந்தும் அந்தக்கரணங்களில் சித்தம் நீங்கிய மனம் புத்தி அகங்காரம் மூன்றும் ஆகிய பதின்மூன்றும், பிராணவாயு ஒழிந்த ஒன்பது வாயுக்களும் ஆக இருபத்திரண்டும் நிற்கும். ஆன்மா அந்தக் கண்டத் தானத்திலே வாயுக்கள் பத்தும், வசனாதி ஐந்தும், சத்தாதி ஐந்தும், அந்தக்கரணங்கள் நான்கும் ஆக இருபத்துநாலோடும் கூடிப் பிரகிருதி தத்துவம் உடம்பாக நிற்குமிடத்து அந்தக் கண்டமாகிய சொப்பனத் தானத்தைவிட்டுப் பிரகிருதி தத்துவம் உடம்பாகப் பிராணவாயுவோடும் சித்தத்தோடும்கூடி இதயமாகிய சுழுத்தித் தானத்திலே செல்லும் அவதரத்து முற்கூறிய கருவிகள் இருபத்திரண்டும் சொப்பனத்தானத்திலே நின்றுவிடுகையால் என்று அறிக.

கண்டத்தானத்துக்கு மேல் இலாடத்தானமாகிய சாக்கிரத்தானத்திலே பூதங்கள் ஐந்தின் வழித்தாகிய ஞானேந்திரியமாகிய சோத்திராதிகள் ஐந்தும், கன்மேந்திரியமாகிய வாக்காதிகள் ஐந்தும் ஆகப் பத்துக் கருவிகளும் சாக்கிரத்தானத்திலே நிற்கும். பத்துக் கருவிகள் நிற்றலாவது ஆன்மா தத்துவம் முப்பத்தாறோடும் கூடி உலக வியாபகமாய் நிற்கச்செய்தே அதிலே அறிகருவிகளாகிய சிவதத்துவம் ஐந்தும், வித்தியாதத்துவம் ஏழில் பிரகிருதி தத்துவம் நீங்கலாகக் கலாதிகள் ஆறும், ஆன்மதத்துவம் இருபத்துநான்கில் பூதங்கள் ஐந்தும் ஆகப் பதினொறும் நீங்கலாக நின்ற கருவி இருபதும் தொண்ணூற்றாறுவகையில் வாயுக்கள்பத்தும் வசனாதி ஐந்தும் ஆக முப்பத்தைந்தோடும் கூடி ஆன்மா ஓடச்சமைந்து ஓடுகிற தேரை இயற்றுவான் கைவிட்டு நின்றாற்போல அந்த இலாடத்தானத்திலே சாக்கிராவத்தைப்பட்டு நிற்கச்செய்தே, ஆன்மா அதனைவிட்டுச் சொப்பனத்தானத்தில் செல்லுமிடத்து வாயுக்கள் பத்தும், வசனாதி ஐந்தும், சத்தாதி ஐந்தும், அந்தக்கரணங்கள் நான்கும் ஆக இருபத்துநாலோடும் கூடிப் பிரகிருதி தத்துவம் உடம்பாகச் செல்லுகையால் இந்த இருபத்தைந்தும் நீங்கலாக மற்றுள்ள சோத்திராதி ஐந்தும் வாக்காதி ஐந்தும் அந்த இலாடத்தானத்திலே நின்றுவிடும் என்று அறிக. ஆன்மா இந்திரியவாயிலாக விடயங்களை அறியுமிடத்துப் பூதங்களிடமாக நின்றே அறியும். இதனை,

"முப்பதோ டைந்தாய் முதல்விட்டங் கையைந்தாய்ச்
செப்பத்தின் மூன்றாய்த் திகழ்ந்திரண் டொன்றதாய்
இப்பதி நின்ற இயல்பை அறிந்தவர்
அப்பதி கொள்பவர் ஆய்ந்துகொள் ளீரே"

என்ற திருமந்திரத்தால் அறிக..

முதனூலாகிய சிவஞானபோதத்திலே அருளிய "ஒன்றணையா மூலத் துயிரணையும் நாபிதனில்" என்றற் போலவே இவ்வாசிரியரும் சிருட்டிக்கிரமமாக உரைத்தமை காண்க. கேவலம் சகலம் சுத்தம் என்னும் காரணவத்தை மூன்றினுள் சகலாவத்தை பதினைந்து வகைப்படும். அவை சகலத்திற் கேவலம் ஒன்று, சகலத்திற் சகலம் ஒன்பது, சகலத்திற் சுத்தம் ஐந்து, சகலத்திற்கேவலம் ஒன்று என்பது அதீதம். சகலத்திற் சகலம் ஒன்பதாவது மத்தியாலவத்தை ஐந்தும் கீழாலவத்தையில் சாக்கிரம் முதல் நான்குமாம். மத்தியாலவத்தையும் சகலத்திற் சுத்தம் ஐந்தும் மேலே கூறப்படும். கீழாலவத்தை ஐந்தில் சாக்கிரத்தில் கருவி முப்பத்தைந்து; சொப்பனத்திற் கருவி இருபத்தைந்து; சுழுத்தியிற் கருவி மூன்று; துரியத்தில் கருவி இரண்டு; அதீதத்தில் ஒன்று என அறிக.

61. இந்த ஐந்து கூறுபாடான கீழாலவத்தையில் பொருந்தப்பட்ட தத்துவம் முப்பத்தைந்தும் உணர்த்தும்முறைமைக்குத் தானமான இலாடத்தானத்தினும் பொருந்திப் பஞ்சாவத்தை கூடும்படி கண்டு, பிரபஞ்சத்திலே பொய்ம்மையான பிறவிகளைப் போக்குவதற்குச் சிவனருளாலே மேலாம் அவத்தையைப் புரியுமிடத்திலே அவ்விடத்திலும் ஐந்தவத்தைகள் அவ்வருளினால் செலுத்தப்படும். இந்த அவத்தையை ஆசிரியன் உணர்த்திய உபதேச அறிவால் அறிக.

ஒரு பண்டத்தை மறந்தவன் அந்தப் பண்டம் காணுதபொழுது பிராணவாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருந்த அவதரம் சாக்கிர துரியாதீதம். அந்தப் பிராணவாயு இயங்கத் தக்கதாகப் பெருமூச்செறிந்து

விசாரித்தறிவோம் என்று நின்ற அவதரம் சாக்கிர துரியம். அவ்விடத்திலே அல்லவோ போனோம் என்று நினைவு எழுந்த அவதரம் சாக்கிரத்தில் சுழுத்தி. இன்ன இடத்திலன்றோ பண்டத்தை வைத்தோம் என்று விசாரப்பட்டு அறிந்த அவதரம் சாக்கிர சொப்பனம். அந்தப் பண்டம்வைத்த இடத்திலே சென்று கண்டது சாக்கிரத்தில் சாக்கிரம் என அறிக.

62. ஆன்மாக்கள் மாயாகருவிகளெல்லாம் நீங்க நீங்காத ஆணவமலத்தாலே மறைப்புண்டு மூலாதாரத்திலே கிடக்கின்ற அதீதம்போலே இருக்கும் சர்வசங்காரத்தும் காரணமாயையிலே தத்துவங்கள் எல்லாம் ஒடுங்க அதிலே சர்வான்மாக்களும் ஒடுங்கி ஆணவமலத்தாலே மறைப்புண்டு கிடக்கிறதே காரணமாகிய கேவலாவத்தையாகிய தன்மையாம். ஆன்மாக்கள் கலை முதலிய தத்துவங்களுடனே கலந்து ஒவ்வொரு விடயங்களில் கூடிநின்று பிரிகிற காரியமாகிய சாக்கிராவத்தை கொடுக்கும் கன்மத்துக்கு ஈடாக எண்பத்துநான்கு நூறுயிரம் யோனி பேதங்கள் தோறும் பிறந்து இறந்து திரிகிறதே சகலாவத்தையாகிய தன்மையாம். தீவிரதர சத்திநிபாதத்தாலே கேவலத்தில் அறியாமையும் சகலத்தில் விகாரமும் ஆயவை நீங்காத இவ்விரண்டும் தாக்காதுவிட அருளுடனே கூடி இரண்டற நிலைபெற்று நேயத்துடனே அழுந்துகிறதே சாக்கிராதீதத்துக்கு ஒக்கும் பரமுத்தியான சுத்தாவத்தையின் முறையாம் என்க.

அதீதம் என்றது சீவிக்கும் கருவிகளெல்லாம் கழன்றவிடமாம். கேவலம் என்றது சர்வசங்காரமாம். சாக்கிரம் என்றது கலை முதலிய தத்துவங்களோடு

கூடிச் சீவித்திருத்தல். சகலம் என்றது சிருட்டி தொடங்கிச் சங்காரமளவும் பிறந்திறந்து வருதல். சாக்கிராதீதம் என்றது முப்பத்தாறு கருவிகளும் கழன்று கேவல சகலங்களில் அழுந்தாமல் அருளினிடமாகக்கூடி நேயத்தழுந்துதலாகிய உண்மைநிட்டையாம். சுத்தம் என்றது திருவடியிலே இரண்டறக் கூடிநின்ற பரமுத்தியாம் என்க.

## ஐந்தாம் சூத்திரம்

இனி, முதனூலாகிய சிவஞானபோதம்போலவே இவ்வாசிரியர் ஐந்தாம் சூத்திரம் தொடங்குகின்றூர். அவத்தைபட்டுக் கிடக்கும் ஆன்மாக்களுக்குச் சிவன் உணர்த்துமுறைமை மேல் கூறப்படும்.

63. தத்தமக்கான விடயங்களைப் பொருந்திய சோத்திராதிகளில் ஒன்றும், பெரிய பூதங்களில் ஒன்றும், அந்தக்கரணங்கள் நான்கும், கரணங்களைவிட்டு நீங்காத கலாதிகள் ஐந்தும் ஆகப் பதினொன்றும் தம்மிற்கூட ஆன்மா ஒரு விடயத்தைப் புசிக்கும். இந்த முறைமை ஒழிந்த ஆன்மாவும் ஒன்றை அறிய மாட்டாது. அவ்வான்மாவையொழிந்து அந்தத் தத்துவங்களும் சேட்டிக்கும் செயலுடையன அல்ல. இதற்குப் பிறர் கூறுவது பொருந்தாது என்க.

64. அப்படி ஆன்மாவும் கருவியும் கூடி அறியுமாயின் கர்த்தா வேண்டுமோ? என வினவ, அதற்கு விடைசொல்லத் தொடங்குகின்றூர்.

தனக்கென ஓர் அறிவு இல்லாத ஆன்மா ஒருவர் அறிவியாமல் தானே இந்தத் தத்துவங்களை அறிந்து

கூடமாட்டான். தனக்கென அறிவில்லாத சடமான இந்திரியம் தானாக ஆன்மாவைக் கூட அறியாது. இத் தன்மையனான அவன் தத்துவங்களுடைய வன்னமே தனக்குச் சொரூபமாய் நிற்பன். ஆனால் இவன் இவை களால் எப்படிப் புசிப்பன்? என்னில், சுதந்திர அறிவை யுடைய சிவனாலே இவை எல்லாவற்றையும் அறிந்து கூடிப் புசியாநிற்பன்.

65. அநுபவித்து அறிகின்ற பொறிகள் மனத் தினாலே விடயங்களை அநுபவியாநிற்கும்; அதுபோல, ஆன்மாவானவன் ஒப்பில்லாத சிவனுடைய ஞானத் தைக் கருவியாகக்கொண்டு சகலத்தையும் அறிவன் என்று அவிகாரவாதி சொல்லுவானாயின், கொண்டு அறிகின்ற ஆன்மாவே கர்த்தா ஆவான். சிவனுடைய மிகுத்த ஞானமானது ஆன்மாவுக்காக நிலைபெற்று நின்றறியும் என்று சங்கிராந்தவாதி சொல்லுவானாயின், பசியினால் உண்ணவேண்டிய ஒருவனுக்காக வேறு ஒருவன் உண்ணுதலை ஒக்கும்.

66. சூரியன் உதயமாய் மிகுந்த இருளைக்கெடுக்க அந்த இராக்காலத்திலே விசாரித்த காரியங்களை மக்கள் கண்டு அவ்வவர் தொழில்களிலே அவன் உதவி அறி யாமல் பொருந்தும் முறைமைபோல, ஆன்மாவானது மலத்தின் நிலைமை புலன்களை அநுபவிக்கும் இடம் எங்கும் கலாதிகளாலே நீங்குதலின் மகிழ்ச்சிபெற்று, அந்த மலத்தின் நீக்கம்பண்ணுவித்துத் தன்னுள்ளே பொருந்தும் திருவருளையும் விட்டுப் பூமியில் தானாக அறிந்தாற்போல அறியும். எனவே, சிவன் அறிவிக்க அறிந்து நிற்கும் ஆன்மா அதனை அறியாமல் நான் செய்தேன் பிறர்செய்தார் என்று சுட்டிக்கொண்டு

அந்தச் சிவனை இழந்துநிற்கும் நிலையும் மேற்குறித்த உதாரணம்கொண்டு தெளிக.

67. அறியத்தக்க கருவி கரணங்களாகிய மனாதிகளும் இந்திரியங்களும் அவ்வான்மாவினால் எப்பொழுதும் அறியாநிற்கும். இப்படி அவனாலே அறிகின்ற காலத்தும் அவனால் அறிகின்றோம் என்னும் தன்மை சிறிதும் உளவாகாது. அவற்றைப்போல, ஆன்மாவும் சிவஞானத்திலே சகலமும் அறிந்து புசியாநிற்கும். ஆயினும், அவனாலன்றோ அறிகின்றோம் என்னும் முறைமை சிறிதும் அறியமாட்டா. இவனுகைக் கன்மங்களை அறிந்து புசியான் ஆகையாலே பழமையாய்த் தேடிவைத்த கன்மபலத்தையும் அறிந்து, அவற்றை இவன் புசிக்கும் முறைமையினையும் நின்மலனாகிய சிவன் கூட்டியருளுவன்.

## ஆறும் சூத்திரம்

68. அறிவிக்கத்தக்க கருவிகள் ஒன்றும் இல்லையாயின் ஆன்மாவால் ஒன்றையும் அறிய ஒண்ணாது. ஆனால், இக்கருவிகள் தாம் எல்லாவற்றையும் அறிய வல்லுநவோ? என்னில், மேலே சொல்லப்பட்ட அத்தத்துவங்களாலே ஞானத்தைக் கூடவும் ஒண்ணாது. பின்பு கூடும்படி எங்ஙனம்? என்னில், முன் சென்மங்களிலே செய்த சரியை கிரியா யோகங்களின் முற்றுதலாலே ஆன்மாவின் பக்குவத்தைக்கண்டு பரமசிவன் திருவருளே திருமேனியாகக்கொண்டு எழுந்தருளி வந்து, இந்தத் தத்துவங்களெல்லாம் பொருளல்ல என்று நீக்கித் தம்முடைய சீபாதத்தைப் பொருந்தும்படி அருள்செய்வார் என்க. அந்தச் சிவஞானமே

குருவுருவாய்வந்து இரட்சிக்கும் எனச் சிவஞானத்தின் சிறப்பைத் தெரிவித்தமை காண்க. இதனை,

" குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே" (1581)

" எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்
எல்லாரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலால்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே" (1576)

" குரவன் உயிர்முச் சொரூபமும் கைக்கொண்
டரிய பொருள்முத் திரையாகக் கொண்டு
பெரிய பிரானடி நந்தி பேச்சற்
றுருகிட என்னையங் குய்யக் கொண்டானே" (1594)

" திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே" (1597)

" தாடந்த போதே தலைதந்த எம்மிறை
வாடந்த ஞான வலியையும் தந்திட்டு
வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்
பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே" (1591)

" இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபரன் நந்தி
கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே" (1596)

எனவரும் திருமந்திரங்களால் உணர்க.

## ஏழாம் சூத்திரம்

69. பலநிறங்களையும் கவர்கின்ற பழமையாகிய பளிங்கினது நிலைபெற்ற ஒளியையும், பலபடியாய் நிலைபெற்று விளங்கும் வன்னங்களின் இயற்கையையும் கூட்டுகின்ற சூரியனுடைய மிகுந்த ஒளி அவ்விரண்டின் தன்மையும் தாக்காது விளங்கும். அதுபோல, தத்துவங்களிற் பயிலும் ஆன்மாவும் தத்துவங்களும் ஆகிய இவ்விரண்டின் தன்மையும் தாக்காது நல்ல சிறப்புடன் நிறைந்த ஞானந்தானே ஞானம் எனப் பெரியோர் சிறப்பித்துச் சொல்லுவார்.

படிகம் ஆன்மாவுக்கும், வன்னங்கள் பாசத்துக்கும், சூரியகிரணம் திருவருள்ஞானத்துக்கும் உவமையாம் என்க. பிரபஞ்சமாகிய பாசங்களையும் ஆன்மாக்களையும் தன்னுடைய சேட்டையாலே கூட்டிக் காரியப்படுத்துவது திருவருள் ஞானம். அப்படிக் கூட்டிக் காரியப்படுத்துமிடத்தும் அவற்றிலே தோய்வற நிற்கும். இனி, ஆதித்தப் பிரகாசத்தினாலே படிகத்திலே வன்னங்கள் பிரதிபிம்பம் செய்யுமிடத்து அந்த ஆதித்தன் சாய ஒடும்பொழுது அதிலே பிரதிபிம்பம் செய்யும். மத்தியானமானபொழுது அந்தப் படிகத்தின் உச்சியிலே நேர்பட வன்னங்கள் கூடியிருந்தும் படிகம் வன்னங்களில் பற்றுமல் ஆதித்தப் பிரகாசத்தைக் கவர்ந்துகொண்டு நிற்கும். அதுபோல, திருவருள் ஞானமும் ஆன்மாக்களுக்கு மலபரிபாகம் வாராத நாளெல்லாம் பிரபஞ்சத்திலே புசிப்பித்து மலபரிபாகம் வந்த காலத்திலே அந்தப்பிரபஞ்சப் பற்று நீங்கும்படி நேர்பட்டுத் தனது காருணியத்தைத் தந்து நிற்கும் என்பது அறியத்தக்கது. திருவருள்ஞானம்,

ஆன்மாக்களைப் பெத்தம் முத்தி இரண்டினும் காரியப் படுத்திநிற்கும்.

70. இப்படி அநாதியே கூடிநின்று காரியப் படுத்தும் திருவருள்ஞானமானது இற்றை வரையில் பிரகாசியாமல் நின்றதற்குக் காரணமென்ன? என்னில், ஆன்மாக்களுக்கு அருளும் மலமும் அநாதியே கூடி நிற்றல் முறைமையாம். மலம் மேலிட்டபொழுது அருள் மறைந்துநின்று காரியப்படுத்தும். அந்தமலம் பரிபாகம் ஆனகாலத்து அருள் பிரகாசித்துநிற்கும்.

சத்தார்த்தக் கிரியா சொரூபமான இந்த மாயா சத்திகளுடைய தன்மையும், பிறவித்துன்பமும், ஆன் மாக்களின் தன்மையும், எவற்றிற்கும் வேருய் நிற்கும் வீட்டின்பமும், இவற்றிலே செலுத்தும் தன்மையும் ஆகிய ஒன்றும் தோன்ருதபடி ஆணவமல காரியமாய் இருக்கின்ற அஞ்ஞானத்தைக்கொண்டு மறைத்து அந்த அஞ்ஞானமேயாய் நிற்கும். அந்த மல மாயா கன்மங்களினுடைய தன்மையும் காட்டிப் பிரித்துத் தேகாந்தமளவும் உள்ள பிராரத்தவாதனையும் ஆன்மா வில் தாக்காமல் எவ்விடத்திலேயும் தான் ஒழிய இல்லை என்னும்படி பிரகாசமாய் நிற்கும் திருவருள்ஞானம் என்றபடி.

## எட்டாம் சூத்திரம்

அந்தச் சிவஞானத்தால் உண்டாகிய பயனை மேலே சொல்லத்தொடங்குகின்ருர் இவ்வாசிரியர்.

71. விளக்கமானது மிகவும் பொருந்தப்பட்ட ஆன்மாவைத் தரிசித்தல், ஆன்மாவைச் சுத்திபண்ணு தல், அவ்வாறு குற்றமற்ற ஆன்மாவின் பிரயோசனம்

என அது மூன்று வகைப்படும். இதனை, ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, ஆன்மலாபம் என அறிவுடையோர் கூறுவர். இந்த மூன்றும் முன்பு சொன்ன முறையே ஆன்மாவானது பாசங்களாகிய தேகாதிப் பிரபஞ்சங்களாய் உள்ளவை நீங்கும்படி இவையிற் றைக்கூடின அருளோடும் பொருந்துதல் ஆன்ம தரிசனம். ஆன்மா தன்னுடைய இச்சாஞானக் கிரியைகளை விடுத்து அந்த அருளிலே மூழ்கித் தற்போதம் சீவியாமல் நிற்பது ஆன்மசுத்தி. அந்த ஞானத்தைக் கூடித் தன்னுடைய செயலை விடுதல் என்பதும் அது. குற்றமில்லாத சிவரூபமாகிய ஞேயத்திலே அழுந்துவது ஆன்மலாபமாம். எனவே, மேலே சொல்லப்பட்ட ஞாதிரு ஞானம் ஞேயம் என்னும் மூன்றினுள்ளே அப்பயன் அடங்குவதாம் என்க.

72. இந்த எட்டாஞ் சூத்திரம் ஆன்ம தரிசனத்தை உணர்த்துவது. ஆன்மா தன்னுடைய ஞானத்தால் ஒன்றை அறிதற்குச் சிறிதும் தனக்கென ஓர் அறிவில்லை ஆயினும், தான் இந்திரியங்களுடனே கூடி நின்று அறிகின்ற அறிவுகளையெல்லாம் சிவன் கூட்டியறிவிக்கின்றான் என்று கொள்ளாமல் தானே அறிந்து புசிப்பவனாக ஒவ்வொரு விடயங்களிலேயும் ஒற்றித்து நின்று தனித்தனியே பயன்கள் எல்லாவற்றையும் புசிப்பன். இப்படி அறிவது ஆன்மபோதத்தின் முறைமை. இவ்வாறு மாறுபாடாக அறியும் முறையைக் கைவிட்டுத் தனக்குப் பிராணனாய் நிற்கிற சிவ ஞானத்தினாலே அந்த ஞானத்தைத் தரிசித்தால் தன்னையும் அவ்விடத்திலே தானே காண நிற்கும். ஆன்மா தன்னைத்தானே காணவல்லனோ? என்னில், தான் அந்த ஞானமாய் நிற்கையால் வல்லன் என்க.

'தன்னாலே தனை அறிந்தால்' என்பதற்கு ஆன்ம சிற்சத்தியால் தன்னை அறிந்து எனப் பொருள் கொள்ளுதல் பொருந்தாது. ஏனெனில், தனது கிரணத்தோடும் தோன்றும் சூரியன் சந்நிதிமாத்திரையானே. சூரியகாந்தக் கல்லினிடத்தே நெருப்பு விளங்கித் தோன்றும். அதுபோல, ஞானாசாரியனுடைய சந்நிதி மாத்திரையானே மாணாக்கனிடத்துக் கேட்டலறிவு விளங்கி முற்பட்டுத் தோன்றும். அது தோன்றவே முதல்வனாகிய பதியும் நிர்விகற்பமாய் விளங்கித் தோன்றும். அப்பதியினுள்ளே பசுவும் நிர்விகற்பமாய் விளங்கித்தோன்றும். இறைவன் அணு ஓர் அண்டமாம்படி நேரியன் ஆதலின், உயிருக்கு உயிராய் நின்ற நிலையும், அண்டம் ஓர் அணுவாம்படி பரியன் ஆகலின் யாண்டும் நின்ற பூரண நிலையும் ஆகிய எல்லாம் நிர்விகற்பமாய் விளங்கித் தோன்றும் என்னும் பொருள் புலப்பட 'சூரிய காந்தக் கல்லினிடத்தே' என்னும் சிவஞான சித்தியாரிலே கூறினமை காண்க. அன்றியும், 'ஞான நாட்டம் பெற்றபின் யானும்— நின் பெருந் தன்மையும் கண்டேன் காண்டலும்—என்னையும் கண்டேன்' எனப் பட்டினத்துப்பிள்ளையார் திருவாக்கானும் அறிக. எனவே, அருளாலே அருளைத் தரிசித்தபின் தன்னைத் தரிசிக்கலாம் என்க.

73. தத்துவங்களை நீங்குதற்பொருட்டாக அவற்றின் உண்மைகளை ஆராயுமிடத்து அவைகளிலே தனித்தனி தன்புத்தியைச் செலுத்தி அவற்றின் உண்மையை ஆராய ஆராய நிலைபெற்ற பொருளாகத் தோன்றுவது பிரகாசத்தையுடைய ஞானமே ஆம். தத்துவங்கள் தனக்கு வேறான சடப்பொருள் எனக் காட்டிநிற்பது சிவஞானம் ஒன்றே. அப்படி ஆராய்ந்

தறியும் சுட்டறிவாகிய முறையும் விட்டு நீங்க அச்சிவ ஞானம் தானேயாய் ஆன்மா சுத்தமாம். அப்போதே அந்த ஞானத்துக்கு முதலாகிய ஞேயம் தோன்றும். அருளானது ஆன்மாவுக்குத்தோன்றும் முறைமையும், அவன் சுத்தன் ஆம் முறைமையும், ஞானத்தைக் கூடித் தன்னுடைய செயலை விடுங்காலத்திலே ஞேயம் தோன்றும் என்பதும் கூறப்பட்டது.

74. தன்னிடத்திலே பொருந்திய ஞானமும் அல்லாமல் அதற்கு முதலாகிய ஞேயமும் உண்டு என்று சொல்லுவானேன்? என்னில், அந்த ஞானமே சிவனுடைய அருள் என்று சொல்லப்படும். அப்படிச் சிவம் என்றும், அருள் என்றும் இரண்டு பொருளா யிருக்குமோ? என்னில், மிக்க பிரகாசமானது அதற்கு முதலாகிய சூரியனை விட்டுத் தனித்து ஒருமுதலாக நில்லாது; அதுபோல அச்சிவத்தையொழிந்து அருள் தனித்து ஒரு முதலாக நில்லாது. ஆனால் அந்த ஞானம் எது? ஞேயம் எது? என்னில், நின்மலனாகிய சிவன் அந்த ஞானத்துக்கு முதலாகிய காரணமாய் நிற்பன். அப்படி அருளும் சிவமும் பிறிவற்று நிற்குமாயின் அந்த அருளே அமையாதோ? என்னில், பிறிவற்று நின்றாலும் ஆன்மாக்கள் பயன்படுமிடத்து அந்த அருள்கொண்டே போதாது. அருளானது சிவனுக்குச் சத்தியாம். ஆதலின், அந்தச் சத்தியால் ஆன்மாக் களுக்கு இன்பம் விளையாது என்க.

சத்தியும் பெண். சிவனோடுங்கூடி ஆன்மா இன் பத்தை அநுபவிக்க வேண்டுதலின் ஆன்மாவும் பெண். இரண்டு பெண்கள் தம்மிற்கூடி அநுபவித்தால் இன்பம் விளையாது என்பது கண்கூடு ஆகையால் என அறிக.

'தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப் பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்ற தேவாரத்தால் ஆன்மா பெண் என்பது அறிக. மற்றும், "இருவர் மடந்தையருக் கென்பயன்இன் புண்டாம் - ஒருவன் ஒருத்தி யுறின்"' என்னும் திருவருட்பயனுல் உணர்க. ஒருவன் ஒருத்தி எனக் கூறியது தலைமையும் தன்மை யும் பற்றி வந்தது. உலகமெல்லாம் ஆணும் பெண்ணு மாக உளவாகலின் சத்திசிவங்களை அவ்வாறு கூறியதே அன்றி உண்மையிலன்று என்க.

75. நின்மலமான அந்தச் சத்தி ஞானப்பிரகாச மாய் இருக்கும். அதுதான் சிவத்தை யொழிந்து தனித்து ஒரு முதலாகமாட்டாது. ஆனுல் அந்தச் சிவமே அமையாதோ? சத்தியால் பயன் என்னை? என் னில், அந்தச் சத்தி அநாதியிலே மயக்கிநின்ற மலங்களைப் போக்கித் தனக்குமுதலாகிய சிவனைக் காட்டும். அஃது எதனைப்போல? என்னில், எங்கும் செறிந்து நிற்கும் அந்தகாரத்தை ஓட்டித் தனக்கு முதலாக வைத்துச் சொல்லப்பட்ட ஆதித்தனைக் காட்டும் பெரிய பிரகாசத் தைப் போல எனக் கொள்க. திருவருளாகிய சத்தி ஆன்மாக்களுடைய மலத்தைப் பாகம் வருவித்துப் போக்கித் தனக்கு முதலாகிய சிவத்துடனே கூட்டும் என்பதுகருத்து.

## ஒன்பதாம் சூத்திரம்

இவ்வொன்பதாம் சூத்திரமானது ஆன்மசுத்தியை உணர்த்துவது. ஆன்மா தத்துவங்களோடு கூடிநின்று சீவிக்கின்ற முறைமையை விட்டு, அந்த அருளோடும் கூடி, திருவருளே மேலீடாகக்கொண்டு அதனுள் மூழ்கி, தற்போதம் சீவியாமல் நிற்பது ஆன்மசுத்தியாம்.

76. திருவருளைப் பெற்ற ஆன்மா தற்போதம் சீவியாமல் நிற்க வேண்டும் என்பதில்லை. பிசாசத்தால் பிடியுண்டவர் அந்தப் பிசாசு செய்யும் காரியமெல்லாம் செய்து நிற்பர் அதுபோல, சிவஞானம் ஆன்மாவினிடத்துப் பொருந்துவதால் எல்லாம் இவன் உள்ளத்து நிகழவேண்டும். அது அல்லாமலும் கர்த்தா நடத்தும் ஐந்தொழில்களையும் தானே மாறுபாடின்றி நடத்த வேண்டும் என்று சிவசமவாதி கூறுவர். அது நன்மையுடையதன்று.

77. இப்போது குருடனுமாய் ஊமையுமாய் முடவனுமாய் இருக்கும் ஒருவனைப் பிசாசு பிடித்துக் கொள்ளுமாயின் அவன் காணவல்லனோ? பேசவல்லனோ? நடக்கவல்லனோ? சொல். அத்தன்மைபோல, ஆன்மாவினிடத்திலே பொருந்திய ஞானமானது ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளுக்கு ஈடாக அறிவித்துநிற்கும். பரமேசுவரன் தனக்குப் பொருந்திய ஒரு திருமேனியைத் தானேகொண்டு தனக்கு முறைமையான ஐந்தொழிலை நடத்தாநிற்பர். எனவே, ஆன்மாக்கள் அப்படி அருளோடு கூடினலும் ஞேயம் தோன்றுதவிடத்து ஆன்மாக்களுக்குச் சிற்றறிவு ஒழியப் பேரறிவு உண்டாகாது. ஆகலின், முத்தான்மாக்கள் பஞ்சகிருத்தியம் முதலியன செய்தல் கூடாது என்க.

78. ஆசிரியன் உபதேசித்த இந்த மார்க்கத்திலே நிலைபெற்று ஆணவமலத்தை நீக்குதல் காரணமாகப் பொருந்தின கலாதிகளாலே எழுப்பப்பட்ட தன்னுடைய இச்சா ஞானக் கிரியைகளையும், அவற்றைக் கொண்டு அறியும் தன் உண்மையையும், தன்னை அநாதியே பொருந்தி மயக்கத்தைச் செய்துநிற்கின்ற

மலங்களினுடைய தன்மையும் அருட்கண்ணுல் கண்டு, நீக்கிய அந்நிலையிலே இச்சாஞானக் கிரியைகள் கூடாமல் ஆன்மா ஞாதுரு என்கிற தன்மையொழிந்து, வேறின்றி அருளிலே நிலைபெற்றிட, அப்பொழுதே எங்கும் ஒழிவற நிறைந்துநிற்கும் பெரிய பயனுகிய தற்காட்சி தோன்றும்.

79. சிவஞானத்தை அடைந்தவர் சிவமாய் விடுதலே அன்றி அவ்விடத்து மற்றும் ஒரு பயன் தோன்றும் என்ற முறைமை யாது? என ஐக்கிய வாதியும், சிவாத்துவிதியும் கூறுவர். முன்பே மல மாயா கன்மங்களுடனே கூடித் தேகாதிகளைத் தாம் என்று அபிமானம்பண்ணித் தம்மைக் காணுர்கள். அநுக்கிரகம்பெற்ற பின்பும் கிட்டுதற்கரிய இந்தச் சிவ ஞானத்தாலும் தம்மைத் தோன்றும்படி காணுராயின் கர்த்தாவின் திருவடியாகிய ஞேயத்தைச் சேர்தற்குக் காரணமான அவன் ஞானத்தை அறிதலும் கூடாது. அறியாமையாலே திருவடியைக் கூடுதலும் இல்லை என அறிக.

## பத்தாம் சூத்திரம்

மேல் ஆன்மலாபத்தைப்பற்றிக் கூறத் தொடங்குகின்ருர்.

80. பொலிவினையுடைய முப்பத்தாறு கருவிகளோடும் பொருந்தி விகற்பியாமல், அறியாமையாகிய ஆணவமலத்தால் மறைப்புண்டு அதீதத்தைக் கூடி மயங்காமல், தன்னிடத்திலே பிரகாசித்து நிலைபெற்ற மேலான ஞானசத்தியாலே ஆன்மாவின் செயலாகிய அகம்பிரம ஞானத்தை அறுத்திட அப்பொழுதே அந்த

மேலாகிய சிவம் பிரகாசிக்கும். அங்ஙனம் அந்தச் சிவம் தானேஆய் ஆகாயத்திலே வாயு தம்பித்தாற் போலவும், அப்புவினிடத்திலே உப்புப்போலவும் ஏகீபாவம் பிறந்துநிற்றலே சாக்கிராதீதம் என்று சொல்லப் படும்.

கலையாதி மண் அந்தமான தத்துவம் முப்பத் தொன்றும் நீங்கலாகச் சுத்த மாயையில் தோற்றிய சிவ தத்துவங்கள் நீங்கியே முத்தி பெறப்படும். தத்துவங் களும், தத்துவ கர்த்தாக்களும் நீங்கியே முத்தியை அடைதல்கூடும். இதனை, "ஆட்டுத்தேவர் தம் விதி யொழித் தன்பால் ஐயனே என்றுன் அருள்வழி யிருப் பேன்" என்னும் திருவாசகம் நன்குணர்த்தும். பத முத்தியையே சிலர் சாயுச்சியம் என்பர். தத்துவாதீத மாகிய சிவத்தைப்பெறுதலே சாயுச்சியமாம். ஆதலின், சுத்த தத்துவங்களையும் கடந்த இடமே பரமுத்தி என்க. இதனைத் திருமந்திரம்,

> "முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
> ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
> செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்
> தப்பரி சாக அமர்ந்திருந் தாரே" (126)

என ஆன்மதத்துவம் இருபத்து நான்கும், வித்தியா தத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்தும் ஆக முப்பத் தாறும் கடந்த நிலையாகக் குறித்தமை காண்க.

நிஷ்கள சொரூபமாயுள்ள சிவமானது தன்னை ஆன்ம போதத்தால் சுட்டியறியும் நாளெல்லாம் கூடி நிற்கச் செய்தேயும் மறைந்து நின்றும், அந்த ஆன்மா வானது தன் செயல் அறுதியைக்கண்டு தற்சேட்டை-

கெட நிற்கும் அவதரத்துப் பிரகாசித்திருக்கும். தற்சேட்டை கெடுதலாவது ஆன்மபோதம் கெடவிருக்கையாம்.

இதனை, "தன்னைமறந்தாள் தன்னுமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்னும் தேவாரமும், "ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டு என்னுள்ளமும் போய் - நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்னும் திருவாசகமும் உணர்த்துவதாம். அன்றியும், "யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க் - குயர்ந்த வுலகம் புகும்" என்னும் திருக்குறளிலும் காண்க.

ஆன்மா தற்போதம் இழந்து சிவத்தோடுகூடிச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வுறும் என்பதனை,

" அவமாய தேவர் அவகதியில் அழுந்தாதே
பவமாயம் கெடுத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"

என்னும் **திருவாசகத்தான்** உணர்க.

கேவலம் சகலம் இரண்டினும் கூடாமல் அந்தச் சுத்தத்தோடு கூடிநின்ற இடமே சாக்கிராதீதமாம். இதனை,

" நின்றஇச் சாக்கிர நீள்துரி யத்தினின்
மன்றனும் அங்கே மணஞ்செய்ய நின்றிடும்
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே இவனும் அவன்வடி வாமே"

" நினைப்பும் மறப்பும் இலாதவர் நெஞ்சம்
வினைப்பற் றறுக்கும் விமலன் இருக்கும்
வினைப்பற் றறுக்கும் விமலனைத் தேடி
நினைக்கப் பெறிலவன் நீளியன் ஆமே" (2970)

" இரவும் பகலும் இலாத இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை உன்னி
அரவம்செய் யாமல் அவளுடன் சேரப்
பரிவொன்றி லாளும் பராபரை தானே" (1528)

" இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனும் ஞானத்தால் தன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே" (1527)

என வரும் திருமந்திரங்களான் உணர்க.

81. தத்துவங்கள் சடமாகையால் தாமே ஒடுங்க மாட்டா. தத்துவங்கள் ஒடுங்கும் முறையை அறிந்து நான் ஒடுக்க அவை ஒடுங்குமன்றோ! என்னில், நீ அறிந்து ஒடுக்குதலினாலே அறிதற்குத் துணையாக வுள்ள அக்கருவிகள் ஒடுங்கா. கரணமெல்லாம் ஒடுங் கும்படி நான் ஒடுங்குவேன் என்று சொல்லின், உனக்குள்ள அறிவாகிய ஆன்மபோதம் கெடும். அப் பொழுது பழைய சிற்றறிவுதானும் இல்லையாய்ச் சுத்த கேவலமே முத்தி என்னும் பாடாணவாதி கொள்கை யாய்விடும். அப்படியானால் அந்தச் சிவத்தை அறிந்து அநுபவிப்பதுதான் எப்படி? என்னில், அத்தத்துவங் கள் அந்நியமாக உனக்குத் தரிசனமான ஞானத்திலே உன் தன்மை சீவியாதபடி ஒடுங்கி அந்த ஞானமயமாய் நின்றாலொழிந்து அந்தச் சிவத்தை அறிந்து அநுபவிக்க முடியாது. எனவே. பாசஞானம் போனாலன்றிச் சிவனை அறியமுடியாது என்றபடி.

82. விடயங்களைப் பொருந்தி நிற்கும் கருவிகள் எல்லாம் விரிந்து ஆன்மாவுக்கு அறிவைக்கொடுக்கும் காலத்து ஒரு விடயத்திலே பொருந்தி இது என்று சுட்டி அறிகின்றது ஆன்மாவினுடைய அறிவின் செய்தியாம். அந்தத் தத்துவங்கள் எல்லாம் சாக்கிரத்திலே நிற்கையிலே அவைகளில் தாக்காமல் அருளைப் பொருந்தி நடுப்பகலில் விளக்குப்போல, தற்போதம் சீவியாமல் நிற்கும் முறைமை கூடுமாயின் அப்போது அந்த ஞேயமான சிவத்தைப்பெறும். பெறவே மயக்கத்தைச்செய்யும் பிறப்பினை அறுக்கலாம். எனவே, பசு ஞானத்தாலும் சிவனை அறிந்து கூடவொண்ணாது என்க.

83. முன் சென்மங்களிலே செய்த சரியை கிரியா யோகங்களின் முற்றுதலினாலே உண்டாகிய ஒருமைப்பாட்டால் ஆசிரியன் அருளிச்செய்த ஞானோபதேசங்களை ஏகாக்கிர சித்தனாய் இருந்து விரும்பிக்கேட்டல், சொல்லப்பட்ட ஞானோபதேசமாகிய பதி பசு பாசங்கள் என்னும் திரிபதார்த்தங்களினுண்மையைச் சிந்தித்துப்பார்த்தல், அப்படி ஆராயப்பட்ட பாசஞானம் அஞ்ஞானம், பசுஞானம் சுதந்தரஹீனம் ஆகையால் இவ்விரண்டையும் கூட்டிச் சேட்டிக்கச் செய்வது பதிஞானம் அதுவே உண்மை ஞானமாம் எனத் தெளிவாக அறிதல், அந்தப் பதியானது பெத்தான்மாக்களோடும் கூடிநின்று காரியப்படுத்தச் செய்தும் தான் ஒரு முதல்இல்லை என்னும்படி தோன்றாமல் நின்று காரியப்படுத்தினாற்போல, நீயும் அந்த ஞானத்தினாலே காரியப்பட்டு வருகிறோம் என்பதை அறிந்து, ஆன்மபோதம் சீவியாமல் ஆசிரியனால் வந்த உபதேசத்தின் வழியைப் பொருந்த, ஞானம் தானாய் நின்று

நிட்டைகூடல் என நான்கு விதமாம் அந்தச் சிவத்தைப்பெறும் முறைமை என்பர். இந்த ஒழுங்கிலே கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடினவர்களே முத்தியைப்பெற்ற முறையினையுடையோர் ஆவார். இந்தக் கேட்டல் முதலிய நான்கும் ஞானத்தில் சரியைமுதலிய நான்குபாதமாம். இவற்றுள், கேட்டல்- கேட்டுப் பற்றுதலால் நின்மல சாக்கிரமும் நின்மல சொப்பனமும் ஆம். சிந்தித்தல் - சிந்தனைமட்டும் ஆகலின் நின்மல சுழுத்தியாம். தெளிதல் - தெளிந்து அருளுடன்கூடி நிற்றலின் நின்மலதுரியமாம். நிட்டை- அது தானாக இரண்டறக் கலத்தலின் நின்மல துரியாதீதமாம். இந்த அடைவிலே நின்றோர் அந்தந்த அளவிலே தேகாந்தமான இடத்துச் சுத்தத்தில் சாலோகம் முதலியவற்றை முறைமையாக அடைவார் என்க.

84. வேதாகம புராண சாத்திரங்கள் என்று சொல்லப்பட்டவைகளால் அறியும் கலைஞானமும் நாதாந்தம் வரையில் உள்ள தத்துவஞானமும் பாசஞானம் எனப் படும். தத்துவங்களெல்லாம் நீங்கின இடத்து விரிந்த அகம்பிரமம் என்னும் ஞானம் பசுஞானமாம். ஆகலின், இவ்விரண்டு ஞானத்தினாலும் சிவனை அறியக் கூடாது. சிவனுடைய அருள்ஞானத்தைப் பொருந்தி அவ்விடத்துப் பிரகாசித்து நிற்கும் திருவருள் ஞானத்தாலே பழைய சிற்றறிவாகிய இச்சா ஞானக் கிரியை என்னும் ஆன்மபோதத்தைக் கைவிட்டுச் சிவஞானத்திலே பொருந்தி விருப்பத்துடனே அதற்குமேலான சிவத்துடனே கூடி நிற்பதுவே ஞானநிட்டை என்று சொல்லப்படும். இதனை, "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்னும் திருவாசகத்தான் உணர்க. எனவே, பதிஞானத்தால் அன்றிப் பரம்பொருளை

அறிதல் அரிதாம் என்க. இந்த நிட்டை தீவிரதர சத்தி நிபாதத்தையுடைய உத்தமர் நிற்கும் நிலை என அறிக.

85. அந்த உண்மை நிட்டை கூடாதவருக்கு உபாய நிட்டையைக் கூடும்முறைமை மேல்உணர்த்து கின்றார். முன்சொன்ன முறைமையிலே நிட்டை கூடுதல் அரிதாயின் முன்பு பெத்தநிலையிலே தனக்கு வேண்டிய புசிப்புக்குத் தக்கதாய் அது இது என்று சுட்டி வரையறுத்து அறிவித்து நின்ற அத்தத்துவங் களின் உண்மையினையும், அந்தத் தத்துவங்களினாலே அறிந்து இன்ப துன்பங்களைப் புசித்துவருகின்ற தன்னை யும், கன்மத்துக்கு ஈடாகத் தத்துவங்களையும் தன்னை யும் கூட்டிப் புசிப்பிக்கின்ற சிவனையன்றித் தனக்குச் சேட்டையில்லை என்னும் உண்மையினையும் அந்த ஞானத்தினாலே நிலைபெற்று நின்று அறிந்து, கேட்டல் முதலிய மூன்றினுடைய அநுபவத்தினாலே மயக்க விகற்பங்களைச் செய்யாது கிரமத்திலே அந்த ஞான மேயாய்த் தனக்குப்பிரயோசனமான சிவத்தை விரும்ப முன்சொன்ன நிட்டையின்முறைமை பரத்திலேகூடும். எனவே, தத்துவங்களைச் சடம் என்று கண்டும், ஆன் மாவைத் தனக்கென அறிவில்லாதவன் என்று கண்டும், இவையிரண்டையும் சிவனே கூட்டிக் காரியப்படுத் தும் உண்மையை அறிந்தும், தற்போதம் கெட நின்ற காலத்து உண்மை நிட்டை மெல்ல மெல்ல வந்து பொருந்தும்.

86. அந்தச் சிவத்தைத் தியானிக்கவேண்டுமா யின் அதற்குக் கருவிகளாகிய மனம் முதலியன வேண்டும். வாக்கு மனதீதமாயுள்ள அந்தச் சிவபரம் பொருள் பாவனைக்கு எட்டாமையின் உனக்குப்

பயனில்லை. கரணங்களை ஒழித்து நின்றே தியானிப்பேன் என்னில், அந்தக்கரணங்கள் நீங்கின இடம் குற்றத்தையுடைய கேவலமாய் மலம் மறைக்கும். தியானத்தால் தியானிக்கப்படாதவன் என்று தியானிப்போன் கூறுவானாயின் பாவம் அபாவம் இரண்டினும் கூடிநின்ற ஆன்மபோதம் அவ்விடத்தில் சீவிப்பதற்குக் காரணமென்ன? தம்மை ஆண்ட தம்பிரானார் திருவருளைப் பொருந்தினவர்கள் ஆன்மபோதத்தால் ஒன்றையும் சுட்டிப் பாவிக்கவேண்டுவதில்லை.

87. கடோபாதி வசத்தால் ஆகாயமானது இரண்டாய் நின்றாற்போலவும் (கடாகாயம் மகாகாயம் என), பல பாத்திரங்களில் உள்ள சலோபாதிவசத்தால் ஒரு சந்திரன் பலவாய்த் தோன்றினாற்போலவும் அகண்ட பரிபூரணமாய் இருக்கின்ற பரப்பிரமம் தானே மாயா காரியங்களாக இருக்கிற தேகோபாதிகள்தோறும் சிவ பேதத்தை அடைந்து, பெத்தம் நீங்கி, முத்தியின்கண் அந்தக் கடமும் பாத்திரங்களும் பின்னமாய் உள்ள அளவில் கடாகாயமும் மகாகாயமும் ஒன்றாய் நின்றாற் போலவும், பலவாகத் தோன்றின சந்திர பிரதிபிம்பங்கள் போய் ஒன்றாய் நின்றாற்போலவும், மகத்துக்களை ஆசிரயித்து வேதாந்த சிரவணம் செய்து அதனால் முன் உண்டான மாயோபாதி நீங்கில் சீவனே பிரமம் என்பான் மாயாவாதி. (1) ஒருபொருள் இரண்டாய்ப் பின்பு ஒன்றாய் இருத்தல்வேண்டும். (2) அன்றியும், இப்படி இருப்பது ஒன்றுக்கு மாயோபாதிகளிலே நின்று சுகதுக்கப்படவும் அவை நீங்குதற்கு மகத்துக்களைச் சேர்ந்து வேதாந்தம் கேட்கவும் வேண்டாம். (3) அன்றியும், சாயுச்சிய இன்பம் பெற்றாலும் பின்பு சென்னம் உண்டாதல்வேண்டும்; ஆதலால் இந்த

மாயாவாதி சொல்லும் ஏகான்மவாதம் அடாது என்க. இனி, அக்கினியினின்றும் பல பொறிகளும் புகையும் தோன்றினாற்போல அநாதியாய் இருக்கின்ற சிவம் தானே பிரபஞ்ச காரணமாய்ச் சடசத்தியாய் இருக்கிற மாயை மாமாயைகளையும், ஆன்மாக்களையும் பகுத்துத் தன்னிடத்தினின்றும் தோற்றுவித்து, அந்த மாயையினாலே பிரபஞ்சத்தைப் படைத்துச், சராசரபேதமான எண்பத்து நான்கு நூறுயிர பேதயோனிகள் தோறும் நின்று விளையாடி, பெத்தம் நீங்கின முத்தியின்கண் கன்ம சமத்துவமும் சத்திநிபாதமும் உண்டான அளவில் சற்குருவையடைந்து, சாம்பவிதீட்சை பெற்று, குருஉபதேசித்த உபதேசத்தாலே செகத்து அடங்கலையும் சிவமாக அறிந்து, பேறும் இழவும் பெறுவானும் ஈவோனும் வேறு இல்லை என்று கருதி, சீவனே சிவன் சிவனே சீவன் என்று பேதாபேதம் கொண்டிருக்கை மோட்சமாம் என்பான் சிவாத்துவிதி. அப்படியாயின், (1) சித்தாயிருக்கிற சிவனிடத்திலே அசித்தாயிருக்கிற மாயை தோன்றாது. (2) சிவனிடத்தில் ஆன்மாக்கள் தோன்றில் கடாதிகளைப்போன்று மூர்த்தமாயழியும். பேறும் இழவும் பெறுவானும் ஈவோனும் வேறு இல்லை என்னில், (3) ஆசிரியனை அடைந்து பெற்ற மோட்சத்தால் ஒரு பிரயோசனமும் இல்லையாம்: ஆகலின், சிவாத்துவிதி மதமும் அடாது.

அநாதியிலே ஆன்மாவும் சிவமும் வேறாயிருந்து முத்தியிலே நீரும் நீரும் பாலும்பாலும் நெய்யும் நெய்யும் கலந்தாற்போல ஒன்றாம் என்று ஐக்கியவாதி சொல்லுவான். (1) அநாதியிலே வேறாய் இருந்த முதல் இரண்டில் ஒன்று அழியும். ஆகையால், அவன் மதமும் அடாது.

சிவனும் ஆன்மாவும் முத்தியிலும் ஒன்றுது பேதமாய் இருக்கும் என்பான் பேதவாதி. அவன் கொள்கையில் சாயுச்சியம் என்பது இன்றிச் சிவனைப்பெற்றதும் இல்லையாம். ஆகலின், அவன்மதம் அடாது.

தீயிற் சேர்ந்த இரும்பு தீயானற்போல ஆன்மாவும் சிவத்துடனேகூடிச் சிவமாகும் எனச் சங்கிராந்தவாதி சொல்லுவான். ஆன்மாவுக்கு அப்படியாகும் தன்மை இல்லை. அஃது எங்ஙனம்? என்னில், தனக்குப் பிராணனாய் இருக்கும் கர்த்தாவின் தலைமைபோல் ஆன்மாவும் ஐந்தொழிலும் நடத்தவேண்டும். அவ்வாறு நடத்திஞல் கர்த்தாவின் தலைமை கெடும். அன்றியும், தீயைச் சேர்ந்த இரும்பு தீ செய்யும் தொழிலைச் செய்யாது. இரும்பைச் சேர்ந்த தீயே தகிக்கும். ஆகலின், அவன் மதமும் அடாது. ஆகலின், ஆன்மா சிவனுடனே ஏகீபவித்துத் தான் கெடாமல் நின்று பரமானந்தத்தை அநுபவிக்கும். அது எத்தன்மைபோல? என்னில், ஆன்மா முன்பு ஆணவத்தோடு கூடி அதுவாகவே இருந்த தன்மை போல என்க.

88. முத்தியைப்பெற்ற ஆன்மாக்களிடத்துள்ள ஆணவமலமானது அழிந்துபோம் என்னில், பதி பசு பாசம் என்று சொல்லப்பட்ட மூன்று முதலும் அநாதி நித்தம் என்று சிவாகமங்கள் சொல்லவேண்டுவதில்லை. அழியாது என்னில், ஞானம் உண்டாம் என்று நினைக்க வேண்டுவதில்லை. ஆனல் அழிந்தது எது? என்னில், இவனுடைய போகத்ஞ்தைத் தெரியாதபடி மறைக்கின்ற காரியத்திற்கு அழிவு உண்டாம். அத்தனையே ஒழியப் பாசத்தினுடைய அநாதித்துவத்துக்கு அழிவில்லை. அஃது எப்படி? என்னில், விளக்கு

அல்லது ஆதித்தனுடைய பிரகாசத்தின்முன் நில்லாத இருளானது அழிந்ததும் இல்லை; பிரகாசத்தின் முன் நின்றதும் இல்லை; எனவே, ஒளியின் மேலீடுகொண்டு இருள் அடங்கித் தோன்றும். அதுபோல, அருளின் மேலீட்டால் ஆணவமலம் சத்தி கெட்டு நிற்கும். மற்றொரு பிறவிக்கு ஏது ஆதலின்றி அதனோடு கழிந் தொழியும். எனினும், ஏனைப் பெத்தரிடத்துக் காணப் படுதலால் அது நித்தப்பொருளாதற்கு இழுக்கில்லை என்க.

89. முடிவில்லாத பிறப்புக்களை உண்டாக்குவ தாய் ஆறு அத்துவாக்களிலும் கட்டுப்பட்டுக்கிடக்கும் புண்ணிய பாவங்களான சஞ்சித கன்மம் சோதனை யான தீக்கையிலே ஆசிரியனுடைய பார்வையாலே தீச்சேர்ந்த வித்துப்போல விரையக் கெட்டுப்போம். எடுத்த உடம்பிலே நின்று அநுபவிப்பதாயுள்ள பிரா ரத்த கன்மம் அவ்வுடல் போகும் அளவும் நின்று புசிப்பிக்கச்செய்யும். உடம்போடு கூடிநின்று பிராரத் தத்தைப் புசிக்கும்போது முன்பு கூடுவதுபோல மனம் முதலியவற்றின் வாசனையினாலே ஆகாமியம் வந்து கூடுமாயின் விளக்கின்முன் இருட்டுப்போல ஞானக் கினியால் அவை அழிந்துபோம். எனவே, ஆணவ மலமும் கன்மமலமும் ஒழியவே மாயாமலமும் எடுத்த உடம்போடு தொலையும் என்றபடி.

90. ஞான தீக்கையினாலே மும்மல பந்தங்களை ஆசிரியன் நீக்கி உண்மையிலே நிறுத்த இவனுக்குப் பூதசம்பந்தமானது வெந்த படம் போலத் தோன்றி இருக்கையிலும், குயவனுடைய திரிகையானது பாத் திரங்களை வனைந்து கைவிட்டாலும் விடாது சுழல்வது

போல வாதனையினாலே முன்பு போல வந்து பொருந்தும். பாத்திரத்திலே இட்டுவைத்த பெருங்காயம் வைத்த எடை குறையாமல் வாங்கிப் பாத்திரத்தைத் தூயதாகச் செய்தாலும் அப்பாத்திரம் உள்ள மட்டும் அதிலே உள்ள வாசனை நீங்காததுபோலப் பிராரத்த வாதனை வந்து தாக்கும். அதனால் யான் எனது என்னும் செருக்கு உண்டாகும்; ஆகாமியம் பொருந்தும். ஆயினும், மந்திரசத்தி உடையவர்களுக்கு விடம் முதலிய குரூர சத்திகள் தாக்கா. அதுபோல, முடிவும் முதலும் இல்லாத ஸ்ரீ பஞ்சாக்கரத்தை ஆசாரியன் அநுக்கிரகித்தபடியே அறிந்து அநுபவ பூர்வகமாக உச்சரித்த சிவஞானிகளைப் பிராரத்தகன்மம் வாதிக்க மாட்டா. எனவே, திருவைந்தெழுத்தை உச்சரிக்கும் முறைமையில் உச்சரிக்கப் பிராரத்த கன்மமும் ஆகாமிய கன்மமும் வாதியா என்றபடி.

91. ஸ்ரீ பஞ்சாக்கரத்திலே ஆன்ம அக்கரமாவது திரோதானசத்தி ஆணவமலம் அருள் சிவம் ஆகிய அக்கரங்கள் நான்கும் முன் இரண்டும் பின் இரண்டுமாகச் சூழ்ந்து நிற்ப நடுவே நின்றதாயிருக்கும். இங்ஙனம் இவ்வைந்தும் ஒருதொடரான இயல்பினோடே பழமையாய் வாராநிற்கும். ஆன்மாக்கள் இந்த ஐந்தனுள் மலம் திரோதாயிகளினுடைய மேலீட்டாலே அருளிலும் சிவத்திலும் விருப்பமில்லாதிருத்தலால் பிறப்பு இறப்புக்களிலே பட்டுச் சுழல்வனவாம். இறப்பு பிறப்புக்கள் நீங்குதற்குக் காரணமான விருப்பத்தையுடைய பக்குவர்களுக்கே இதன் உண்மையைச் சொல்லலாம். வாசியில் ஆசையில்லாதிருத்தலாவது நம என்பது முதலாக உச்சரித்தலாம். முத்திவிருப்புடையோர் சிவம்முன்னாகவே உச்சரித்தல்வேண்டும்.

92. ஆணவமும் அதன்வழியே பொருந்திய திரோதாயியும் பொருந்தாமல்விட்டு நீங்கும்படி சிவம் முதலாகச் செபிப்பாயாக. அங்ஙனம் செபித்ததனாலே நகரமான திரோதானசத்தி தானே திரும்ப மேலான மகாரம் ஆகிய மலத்தைப்போக்கி அநுக்கிரகசத்தியாக மேலிடும். அங்ஙனம் மேலிட்டுத் தனக்கு மேலாகிய சிவத்தைத் தரும். அது அப்படித் தருதலால் யகாரம் ஆகிய ஆன்மாவானது அந்த அருளே பற்றுக்கோடாகப் பொருந்தி அவ்விடத்திலே முற்றுணர்வு முதலிய அருட்குணங்களைப்பெற்றுச் சிவனைப்போன்று கலப்பினாலே ஒன்றும். இதுவே பஞ்சாக்கரத்தினது உண்மையாம் என அறிக.

சிவனுடைய திருநாமமாகிய நமசிவாய என்னும் ஐந்தெழுத்தினும் ஆன்மாவும் திரோதசத்தியும் மலமும் அருளும் சிவமும் என்று சொல்லப்பட்ட ஐந்து முதலும் நிற்கும். அவையாவன: யகாரத்திலே ஆன்மாவும், நகாரத்திலே திரோத சத்தியும், மகாரத்திலே மலமும், வகாரத்திலே அருளும், சிகாரத்திலே சிவமுமாக நிற்கும். இந்த ஐந்து முதலினும் சிவம் முன்னாக உச்சரிக்கும்பொழுது திரோதமும் மலமும் ஒருபாலாகவும், அருளும் சிவமும் ஒருபாலாகவும் முன்பின்சூழ ஆன்மா நடுவேநிற்கும். நடுவே நின்ற ஆன்மா அந்த அருள் அறிவித்தால் அதனாலே அறிந்தும், மற்று மலம் மறைத்தால் அதனாலே மறைப்புண்டும் இங்ஙனம் இரண்டனோடும் கூடி அது அதுவாய் நின்றாலும் தான் ஒரு முதலாய் வருவது அநாதியே பொருந்தியுள்ளது. அப்படியாயினும் மவ்வாகிய மலமும் நவ்வாகிய திரோதசத்தியும் மேலிட்டு நிற்கையாலே வவ்வாகிய அருளிலும் சிவ்வாகிய சிவத்திலும் ஆசையற்றுச்

சனன மரண துக்கத்திலே நின்று ஆன்மாச் சுழலும். ஆன்மாவை மறைக்கப்பட்ட ஆணவமலத்தினைப் பாகம் வருவிக்க வேண்டி அருளானது திரோதமாய் நின்று காரியப்படுத்தும். ஆகையால் அதனையும் பதியின் கூறுகவைத்து எண்ணப்படும். மலத்தோடும் கூடிக் காரியப்படுத்துகையால் அருளைத் திரோதசத்தி என்பர். சர்வமும் சிவசேட்டையால் ஒழியமுடியாது. ஆகையால் சிவத்தை முன்னிட்டுக்கொண்டு நிற்க வேண்டும். திரோதானசத்தியே மலத்தின் மேலீட்டை நீக்கி அருளாய் நின்று பிரகாசிக்கும். இதனாலன்றோ மாணிக்கவாசகசுவாமிகள், "பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி" எனத் திருவெம்பாவைப் பகுதியில் அருளிச்செய்தார்கள். சிவம் முதலாக உச்சரித்தலை "யானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்" என அருளி யமையும் சிந்திக்கத்தக்கதாம். அன்றியும்,

"சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாசம் மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவஞ்சேர்த்த பாசம் அணுககி லாவே" (2710)

"சிவனரு ளாய சிவன்திரு நாமம்
சிவனருள் ஆன்மாத் திரோதமல மாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னாமே" (2711)

எனத் திருமூலதேவநாயனார் அருளிச்செய்தமைகாண்க. மேலும் துகளறுபோதத்திலே பஞ்சாக்கர தரிசனம் என்னும் தலைப்பில் உள்ள,

"அஞ்செழுத்தும் அண்ணலருள் ஆன்மாத் திரோதமலம்
விஞ்சி நமத்துரந்து மெய்யருள்வாத் - தஞ்சச்
சிகாரத்தில் யவ்வைவிடும் தீதிலா இன்பப்
புகாரிற் புகுந்தருந்தப் போய்" (82)

என்னும் வெண்பாவையும் அதன் உரையையும் நோக்கி உணர்க.

## பதின்மூன்ருஞ் சூத்திரம்

93. குற்றத்தையுடைய மாயை கூடாதபடி பிராரத்தகன்மம், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் மூன்றுனும் நீங்க, விட்டுநீங்காத அநாதி சம்பந்தமாயுள்ள நிறைந்த ஆணவமலம் விட்டுப் போகும்படியாக அன்பினுலே தன்னிடத்துப் பிரகாசிக்கின்ற அருளிடத்தே தன்னைக் கொடுத்துத் தன்னிடத்திலே சுகசொரூபமாகிய சிவம் ஒடுங்க, மயக்க விகற்பங்களில் படாமல், பிரிவற்ற பழமையாகிய சிவசமரச பாவத்திலே தரித்துநிற்பர் குற்றமற்ற சிவஞானிகளாவார்.

94. கங்கை குமரி முதலாகச் சொல்லப்பட்ட தீர்த்தங்கள் சமாதிக்கு யோக்கியமாகக் குறிக்கும் காசி சிதம்பரம் முதலிய புண்ணியத்தலங்கள் முதலியவற்றை நாடியிருத்தலும், இன்னகாலம் இது செய்யவேண்டும் என்னும் கால சங்கற்பனையும், இந்த நாளிலே இன்ன திசையிற் செல்லலாம் இன்ன மந்திரம் இன்ன திசையை நோக்கியிருந்து செபித்தல் வேண்டும் என்னும் முறைமைகளும், பதுமாதனம் கூர்மாதனம் முதலாகவுள்ள அறுபத்து நான்கு ஆசனங்களிலும் இன்ன ஆசனத்திலே இருக்கவேண்டும் என்னும் ஆசன நியமமும், வாய்மை ஒப்புரவு ஈகை முதலிய கொள்கைகளும், சாதி அபிமானமும், சாத்துவிகம்

முதலிய குணங்களும், நாமம் வேடம் முதலிய சிறப்பில் அபிமானமும், சிறப்பினையுடைய சாந்திராயணம் முதலிய விரதங்களும், நல்லொழுக்கமும், பஞ்சாக்கினி நடுவில் நிற்றல் முதலிய தவங்களும், இருடி சந்தஸ் தேவதை பீசம் விநியோகம் என்று இவற்றுடன் கூடமானதம் மந்தம் உரை என்னும் மூன்றுவிதமாக வசீகரம் முதலியவைகளைக் குறித்துச் செபிக்கும் மந்திர செபமும், ஆறு ஆதாரங்களிலே ஒவ்வொரு ஒளியைப் பற்றித் தியானிக்கும் தியானங்களும் ஆகிய இவை முதலானவைகள் எல்லாம் அவர்களாக மறுத்துத் தீரவிடுதலும் செய்தலும் பொருந்தா. அவர் சிவாநுபூதியிலே உறைத்துத் திளைத்திருத்தல் காரணமாக நித்திரை செய்கின்றவர் கைப்பொருள் போலத் தாம் பெற்ற உண்மைநிலை யொழிய நிலைபெற்ற செய்திகளாகிய மற்றவையெல்லாம் தனியே ஒழிந்துபோம்.

95. சீவன்முத்தராகவுள்ளோர் சிவனை உள்ளே கண்டு இருப்பரோ? அன்றிப் புறத்தே கண்டு வழிபடுவரோ? என்னில், அகப்பூசை புறப்பூசை என்று இருவிதமாகப் பூசிக்கும் இவ்வுலகத்தின்கண் அவ்விரண்டு பூசையும் இன்றி, அஞ்ஞானமே வடிவாய் இருக்கிற ஆணவமலத்தின் மேலீட்டினுலே முப்பத்தாறு தத்துவங்களோடும் கூடிச் சிற்றின்பமாகிய விடயங்களிலே மகிழ்ந்து உயிர் வாழும் தன்மையுடையவர்போல, பெத்தநிலையிலே உள்ள பழைய பிரபஞ்ச வாதனை சற்றும் தோன்றுமல் ஞானமே பிரகாசித்தலால் அந்த ஞானமானது எங்கும் பூரணமாய் ஒழிவற நிற்கின்ற நிகழ்ச்சியோடும் கூடி அநுபவித்து அந்தரியாகமாக உள்ளே கண்டு பூசித்தும் பகிர்யாகமாகப் புறம்பே கண்டு பூசித்தும் வருகின்ற முறைமை இரண்டும்

சற்றும் தோன்றாமல் ஒருதன்மையாகவே காணும் நன்மையை அடைந்தவராவார். இதுவரை தெளிந் தோர் நிற்கும் நிட்டையான ஞானத்தில் ஞானமாம் என்க.

சிவஞானிகளுக்குப் பசுஞானிகளை ஒப்பாகச் சொன்னதற்குக் காரணமென்ன ? என்னில், பசுஞானி களுக்கு இந்தப் பிரபஞ்சத்தின் மயக்கத்தாலே அந்தத் திருவருளின் தோற்றம் உண்டாகாது. அதுபோல, சிவஞானிகளுக்கும் அந்தத் திருவருளின் மேலீடு கொண்டே பிரபஞ்சம் தோன்றா நிற்கும். பசுஞானி களுக்குத் திருவருள் தோன்றாதது ஏன் ? என்னில், நமக்குக் கர்த்தாவாக ஒரு சிவன் உண்டு என்றும், அந்தச் சிவனுக்கு அடிமையாக ஆன்மாவாகிய நாம் உண்டு என்றும், ஆன்மா செய்யும் புண்ணியபாவங் களாகிய கன்மம் உண்டு என்றும், அதன் பயனாகிய சுவர்க்க நரகங்கள் உண்டு என்றும் தோன்றாமல் நிற்பதால் என்க. சிவஞானிகளுக்குப் பிரபஞ்சம் தோன்றாமைக்குக் காரணம் யாது ? என்னின், மண் ணாசை பெண்ணாசை பொன்னாசை என்னும் மூன்று ஆசைகளையும் விட்டு, யாவரோடும் விருப்பு வெறுப் பின்றி யான் எனது என்னும் செருக்கு அற்றிருத் தலேயாம் என்க.

96. பிருதிவி முதலிய நான்கு பூதங்களும் ஆகா யத்திலே பொருந்தி நிற்க, அந்த ஆகாயம் அவை எல்லாவற்றையும் கவளீகரித்துக்கொண்டு நின்றாற் போல, எல்லா ஆன்மாக்களினும் அவையிற்றோடும் கூடியுள்ள அத்துவாக்களினும் பூரணமாயுள்ள சிவ ஞானம் அகண்டமாக நிறைதலாலேதான் இத அகிதப்

படத்தக்கதாகச் சத்தாதி விடயங்களிலே யாதாவது ஒன்று வந்து தாக்கினாலும் சிவனுடைய ஞானத்தி னலொழிய மற்றொன்றினாலும் வாராது எனக்கண்டு விருப்பு வெறுப்புக்கள் இன்றி நிற்கில் அக்கருத்தே வித்தாய்த் தானே சிவமாந்தன்மைப் பெருவாழ்வை அடைவர். அப்படி ஆதல் சரதமோ? என்னில், ஞானமே தனக்குச் சொரூபமாய் நிற்கின் அங்ஙனம் ஆதற்குச் சந்தேகமேயில்லை. இதனை, "கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம் நீ" என்னும் திருவாசகத்தான் அறிக.

எனவே, சிவஞானத்தைப்பெற்று அநுபூதிநிலையில் உறைத்து நிற்கும் சீவன்முத்தர்களுக்குப் பழைய வாதனுபலத்தால் பிரபஞ்சவாதனை மேலிட்டாலும் அதனோடுகூடி மயங்கார். அது தோன்றின மாத்திரத்தி லேயே நீக்கிக்கொண்டு அந்த ஞானநிலை குலையாமல் நிற்பர். ஆகையால், ஞானத்தில் யோகம் இதனால் கூறப்பட்டமை காண்க.

இதனை, திருத்தொண்டர்புராணம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம் - செய்யுள் 422, 423.

"இத்தன்மை யரம்பையர்கள் எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை யுணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்"

"இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமைநோக்கி
உம்மாலிங் கென்ன குறை யுடையேன்யான் திருவாரூர்
அம்மானுக் காளானேன் அலையேன்மின் நீரென்று
பொய்ம்மாயப் பெருங்கடலுள் எனுந்திருத்தாண் டகம்
[புகன்றார்"

எனச் சீவன்முத்தராகிய திருநாவுக்கரசுநாயனார் சிவ ஞானநிலையை ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்தமை காண்க. இங்கே திருநாவுக்கரசு சுவாமி களுக்குப் பழைய வாதனுபலத்தால்நேர்ந்த நிலையன்று. இறைவருடைய திருவடியிற் பொருந்தவைத்த மனம் பொன் முதலிய உலகபோகப் பொருள்களில் ஒரு சிறிதும் பற்றாதுநிற்கும் சிவஞான நன்னிலையை உலகத் தாருக்குக் காட்டும்பொருட்டுத் திருப்புகலூர் நாயக னார் திருவருளால் நேர்ந்ததொன்று என்றறிக.

97. பிருதிவி முதலிய தத்துவங்களெல்லாம் சட மாகையால் இவை தாமாகக் காரியப்படமாட்டா எனத் தனக்கு வேறாகக்கண்டு (இது பூதசுத்தி) இவை அருளாலன்றிச் சீவியாது என்று பரவசம் ஆக்கி, அப்படி அறிகிறதும் திருவருளினாலேயன்றி ஆன்ம போதத்தால் அறியப்படாது என்று கண்டு அந்தத் தத்துவங்களினின்றும் விடுவித்த ஞானதிட்டியிலே நிலைபெற்று (இது ஆன்ம சுத்தி), அப்படி ஆன்ம போதத்தால் தானே அறிகைக்குச் சேட்டையில்லை என்று கண்டதுகொண்டே ஆன்மாவுக்கு அறிவில்லை என அறிந்து கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறி யும் அறிவெல்லாம் அந்தத் திருவருளே என்று ஞானக் கண்ணினாலே சகலத்தையும் பார்த்து (இது திரவிய சுத்தி), பஞ்சாக்கரத்தைத் திரோதானத்தினின்றும் திருப்பிச் சிகாரம் முதலாக மானதமாகச் செபித்து (இது மந்திரசுத்தி), கர்த்தாத்தானே எங்கும் பூரண மாய் நின்று சித்து அசித்துக்கள் இரண்டினும் பிறிவற நின்று சேட்டிப்பித்து நிற்பதாகிய பரிபூரணத்தை உணர்ந்து (இலிங்க சுத்தி இது) இந்தச் சிவலிங்கத்தி னும் உண்டு எனக்கண்டு இங்ஙனம் பூதசுத்தி ஆன்ம

சுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி இலிங்கசுத்தியாகிய ஐந்துவகையாகின்ற சுத்திகளுக்குத் தவறு வாராமல் போற்றுகின்றதே சிவனுக்குப் பஞ்சசுத்தியோடும் கூடிய ஞானபூசையாம் என்று சிவாகமங்கள் சொல்லும். இது ஞானத்திலே கிரியையாம்.

## பன்னிரண்டாம் சூத்திரம்

98. மகேசுரரும், தேவர்கள் தொழப்பட்ட சிவலிங்கமும், தேவராலும் காணப்படாத சிவபிரானே என்று உட்கொண்டு வணங்கி, கண்கள் அருவிநீர் சொரிய, வாக்குத் தழுதழுப்ப, உண்மைப்பொருளையே கண்டுகொண்டிருப்பர். அருள் வெள்ளமாகிய ஞானக் கடலிலே விளைந்த சிவபோகமாகிய அமுதினைப்புசித்த சிவஞானிகள்.

எனவே, தொண்டர்கள் கொண்ட வேடத்தினாலும் தியான சமாதியினாலும் அவர்களிடத்திலே சிவன் சாந்நித்தியமாய் நிற்கையால் அவரைச் சிவனெனவே கண்டு வழிபடுக என்றது. சிவலிங்க மூர்த்தமானது சிவனுடைய வடிவாகிய சத்தி சிவான்மிகமாய் இருத்தலாலும், மந்திர தந்திரங்களால் வழிபடுவோருக்கு காட்டத்தில் அக்கினி கடைந்தஇடத்தே பிரகாசித்தாற் போலவும் பசுவினிடத்து உண்டாகிய பால் அப்பசுவின் உடல் முழுவதும் நின்றாலும் முலைக்கண்ணிலே தோன்றினாற்போலவும் அச்சிவலிங்க மூர்த்தியிலே பூரணமாகிய சிவம் பிரகாசிக்கையாலும் சிவலிங்கப் பெருமானைச் சிவனெனவே கண்டு வழிபடுக என்றது.

இது ஞானத்திற் சரியை கூறியபடி.

201580

99. இனி, இந்த நூலின் கருத்துக் கூறியருளு ...ர். நிலவுலகத்திலே புறப்புறச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சமயம் ஆகிய இந்நான்கு ...றத்து அறுவகைச் சமயம் என்று சொல்லப்படும் ...லோகாயதம் முதல் சிவாத்துவிதம் ஈருக உள்ள ...மயங்களிலே நிற்கும் செவ்வியர் அல்லாதார் கூறும் ...ரமாணங்களுக்கு அளவுபடாத கோட்பாட்டை ...டையதாய் வேதசிகைகளாகிய உபநிடதங்களிலே ...ங்கிய பொருளாய், சுக சொரூபமாய், கெடாத சற் ...ாரியவாதத்தின்கண் உள்ளதாய், முன்பின் மலைவற்ற ...வஞானத்தாலே சைவ சித்தாந்தத்தில் பந்தம் மோட் ...ம் இரண்டையும் இந்த நூலினிடத்து ஆராய்ந்து ...சான்றோம் என்க.

100. இனி, இந்தநூலை மாணவருக்கு உபதேசிக் ...கும் முறைமையும், மாணவர்தன்மையும் கூறத் தொடங்குகின்றார். பண்பு பயன் வினை உரு என்று சொல்லப்பட்ட நான்குவகையான உவமைகளின் ...ன்மைகளிலே வைத்துப் பொருள்களை நிறுத்திப் பின் ...ன் மலைவில்லாமல் புத்தியிலே கொள்ளவல்ல மாணாக் ...னுக்கு இந்தச் சிவப்பிரகாசமாகிய நல்ல நூலினது ...பாருளை விரித்துத் தெளியும் வகையாகத் தீட்சைக் ...ச் சொல்லப்பட்ட சத்திநிபாதக் குறிகளை ஆராய்ந்து ...ானதீட்சையினாலே சிவஞானத்தைப் பிரகாசிக்கச் ...செய்து ஆசாரியர் இந்த நூலைச் சொல்லவேண்டும் ...ன்க.

சிவப்பிரகாசம் – உரைநடை முற்றிற்று.

ty of Jaffna
1580